Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 07 சனிக்கிழமை (20-03-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:115

# வடக்கில் வாக்குச்சாவடிகளுக்காக படை நிலைகள் பின்நகர்த்தப்படும்

## முகமாலையில் மேற்கொள்ளப்படவிருக்கும் ஏற்பாடுகளை விளக்குகிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம்,மார்ச்20

**யாழ். தேர்தல் மாவட்டத்துக்கு உட்பட்ட கிளிநொச்சி மற்றும் மருதங்கேணிப் பிரதேச வாக்காளர்கள் வாக்களிக்க வசதியாக முகமாலையில் படையினரின் சோதனை நிலையங்களில் 61 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும். இதற்கு வசதியாக படையினரின் காவலரண்கள் பின்நகர்த்தப்படவிருக்கின்றன.**

**வாக்காளர்கள் எந்தவித உடற்சோதனையோ, ஆள் அடையாளச் சோதனையோ இன்றி வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.**

யாழ். மாவட்ட அரச அதிபரும் யாழ்.தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான செ.பத்மநாதன் இத்தகவலை வெளியிட்டார்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களைச் சேர்ந்த வாக்காளர்கள அடையாள அட்டைச் சோதனையின்றியே வாக்களிக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆனால், வவுனியா தெரிவத்தாட்சி அலுவலரான கே.கணேஷ் மட்டும் தம்முடைய மாவட்டத்தில் இவ்வாறு அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதியிலிருந்து வாக்களிக்க வருவோர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த அடையாள அட்டை அல்லது தத்தமது பகுதி கிராமசேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழோடு வரவேண்டும் எனக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேச வாக்காளர்களுக்குச் செய்யப்படவேண்டிய ஏற்பாடுகள் குறித்து யாழ்.செயலகத்தில் நேற்று நடந்த உயர்மட்டக் கூட்டத்தில் முடிவுகள் எடுக்கப்பட்டன.

யாழ். தெரிவத்தாட்சி அதிகாரியும் அரச அதிபருமான எஸ்.பத்மநாதன் தலைமையில் நடந்த இந்த மாநாட்டில் யாழ்.மாவட்ட பிரதி இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் குலதுங்க, யாழ். பிரதிப் பொலீஸ்மா அதிபர் பந்துல, விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் எஸ்.விஜிதரன், தமிழமுதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் எட்டப்பட்ட முடிவுகள் குறித்து அரச அதிபர் பின்னர் செய்தியாளர் சந்திப்பில் விளக்கினார். அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

★ கிளிநொச்சியில் உள்ள 57 ஆயிரம் வாக்காளர்களுக்கும் மருதங்கேணியில் உள்ள 6 ஆயிரம் வாக்காளர்களுக்கும் முகமாலையில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் பயணிகள் சோதனை செய்யப்படும் இடத்தில் 30 வாக்குச்சாவடிகளும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி செல்லும் பயணிகள் சோதனை செய்யப்படும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு நெருக்கடியினால் பிரசாரத்தில் பாதிப்பு இல்லை

### வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச்20

விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் கிழக்குத் தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடியானது மட்டக்களப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இதுவரை எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்க் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம். இது தொடர்பாக நேற்றிரவு லண்டன் பி.பி.ஸிக்கு அவர் வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு இணைந்த பிரதேசம்தான் எமது தமிழ்த் தேசம். இந்த வகையில்தான் கொள்கை ரீதியாகத் தமிழ்த் தேசியம் வளர்க்கப்பட்டது.

தந்தை செல்வாவின் காலத்தில் கூட ஒரு சமஷ்டி அமைப்பில் இணைந்த வடக்கு - கிழக்குப் பிரதேசம்தான் இருந்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தம், பண்டா-செல்வா ஒப்பந்தம் என்பவற்றிலும் அந்த நிலை மாறவே இல்லை.

வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழீழம்தான் தமிழ் மக்களுடைய தாயகம் என்பது விடுதலைப் புலிகளினதும் நிலைப்பாடாகும்.

17 ஆயிரத்து 700 இளைஞர்களைப் பலி கொடுத்த பின்னரும் கூட அந்தத் தமிழீழக் கொள்கைக்காகத்தான் போராடி வருகிறோம். அந்தக் கொள்கையைத்தான் நான் கடைப்

(16ஆம் பக்கம் பார்க்க)

### — இன ரீதியான பாகுபாடு குறித்து அச்சம் —

## மூதூர் எல்லை நிர்ணயப் பணியை உடனே நிறுத்தக் கோரிக்கை!

### ஜனாதிபதிக்கு வேட்பாளர் இரா.சம்பந்தன் கடிதம்

திருகோணமலை,மார்ச்20

மூதூர் பிரதேச செயலர் பிரிவு எல்லைகளை மீள் நிர்ணயம் செய்தால் இனரீதியான பாகுபாடு ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது. அதனால், மீள் எல்லை நிர்ணயப் பணியை உடனே நிறுத்துமாறு ஜனாதிபதிக்கு அவசரக் கடிதம் எழுதியிருக்கிறார் திருகோணமலை மாவட்டத் தமிழர் கூட்டமைப்பு முதன்மை வேட்பாளரான இரா.சம்பந்தன். பொதுத் தேர்தல் முடிந்த பின்னர் எல்லை மீள் நிர்ணயம் பற்றிக் கவனிக்கலாம் என்று அவர் ஆலோசனையும் கூறியுள்ளார்.

மூதூர் பிரதேச செயலர் பிரிவின் தற்போதைய எல்லைகளை ஓர் இனத்தவரின் நலன் கருதியே மீள் நிர்ணயம் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இதனால், ஏனைய இனத்தவர்களின் சட்டபூர்வமான உரிமைகளும, நலன்களும் பாதிக்கப்படும் என்றும் இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்த எல்லை மீள் நிர்ணயத்திறகு எதிராக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. சகல இனமக்களும் சம்பந்தப்பட்ட விடயமாக இது இருந்தபோதிலும், ஓரின மக்களுடனே கூட்டம் நடத்தப்பட்டது. இது ஆச்சரியத்தை அளிப்பதோடு மிகுந்த சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது என்றும் சம்பந்தன் தெரிவித்திருக்கிறார்.

எல்லை மீள் நிர்ணயம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தீர்மானம் சகல மக்களுக்கும் நியாயம் வழங்குவதாகவும், அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாகவும் இருக்க வேண்டும. அதனால் அவசரப்பட்டு நடவடிக்கையில் இறங்காமல் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினரின் கருத்துக்களையும் கேட்டு அறியவேண்டும்.

பொதுத் தேர்தல் முடியும் வரை பொறுத்திருந்து அதன் பின்னர் இந்த வடயம் பற்றித் தீமானிப்பதே நல்லது என்று சம்பந்தன் தனது கடிதத்தில் ஜனாதிபதிக்கு ஆலோசனையும் கூறியிருக்கின்றார். கடிதத்தின் பிரதி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ம-க)

## தேர்தல் கால பாதுகாப்புக்கு 64,000 பொலீஸார் கடமை

கொழும்பு,மார்ச்20

தேர்தல் காலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக சுமார் 64 ஆயிரம் பொலீஸார் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா இதனைத் தெரிவித்தார். நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத்தேர்தல் காலத்தின்போது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நாடு முழுவதும் சுமார் 64 ஆயிரம் பொலீஸார் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஊர்காவல் படையினரையும் இணைத்துக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக வீதி ரோந்துகள், வதித்தடைகளை ஏற்படுத்தி சோதனை நடத்துதல் போன்ற நடவடிக்கைகளில் பொலீஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அத்துடன், விசேட பிரமுகர்களுக்கான பாதுகாப்பும் வாக்குச்சாவடிகளுக்கான பாதுகாப்பும் பலப்படுத்தப்படவுள்ளன.

இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவும் தீவிரப்படுத்தப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாத்தறையில் பிரதமர் ஏற்படுத்திய பரபரப்பு!

கொழும்பு,மார்ச்20

எந்தவிதமான பாதுகாப்புக்களும் இன்றிப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கால் நடையாகச் சென்று மக்களின் குறைகேட்டார். நாட்டின் பிரதமர் எந்தவிதமான பந்தாக்களும் இன்றி இப்படி மக்களோடு மக்களாக கால் நடையாக வந்து மக்களை சந்தித்தது மாத்தறை நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.

எதிர்பாராத விதமாக இப்படிப் பிரதமரைக் கண்டதும் மாத்தறை நகரில் கூடிய கூட்டத்தை கட்டுப்படுத்துவதில் மாத்தறை நகரப் பொலீஸார் பெரி

(16ஆம் பக்கம் பார்க்க)

## போராளி சாவு

புலிகளின் போராளி ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சுகவீனம் காரணமாக சாவடைந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் மேற்கைச் சொந்த இடமாகவும், கிளிநொச்சி அக்கராயனை வசிப்பிடமாகவும் கொண்ட மேஜர் மோகன் (அருள்ராஜா ஜெஜிக்குமார்) என்ற போராளியே சாவடைந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிறிஸ்தவர்களின் 9 சிலுவைகள் நாச்சிக்குடாவில் நொறுக்கப்பட்டன!

கன்னியா,மார்ச்20

திருகோணமலை நாச்சிக்குடா மலையில் கிறிஸ்தவர்களின் சிலுவைப்பாதை தினத்தையொட்டி அமைக்கப்பட்டிருந்த ஒன்பது சிலுவைகள் விஷமிகளால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

சிலுவைப் பாதை தினத்தையொட்டி 12 சிலுவைகள் நாச்சிக்குடா மலையில் அமைக்கப்பட்டிருந்தன. கொங்கிறீட் தூண்களால் உருவாக்கப்பட்டிருந்த பாரிய சிலுவைகள், பக்தர்கள் வழிபாட்டுக்கு நேற்று சென்றபோது உடைத்து நொறுக்கப்பட்டிருந்தன என சீனன்குடா பேரா

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரச வைத்தியர் வேலைநிறுத்தம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது

கொழும்பு,மார்ச்20

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கடந்த 9 நாள்களாக நாடு முழுவதும் நடத்தி வந்த வேலைநிறுத்தப் போராட்டம் நேற்றுப் பிற்பகலுடன் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

நிதி அமைச்சர் உட்பட அதிகாரிகளுடன் தாம் நடத்திய பேச்சின் பயனாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழங்கிய உறுதிமொழியை அடுத்தும் மருத்துவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிட்டுள்ளனர் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் சென்னப் பெரேரா தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அன்னை பூபதி நினைவு அனுஷ்டானம் அம்பாறை - மட்டு. மாவட்டங்களில்

சாய்ந்தமருது,மார்ச்20

தமிழழ விடுதலைக்காகவும், உரிமைகளுக்காகவும் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றிலில் உண்ணாவிரதம் இருந்து தனது இன்னுயிரை நீத்த அன்னை பூபதியின் 16ஆவது நினைவுதினம் நேற்று அம்பாறை மாவட்டக் கரையோரத் தமிழ்ப் பிரதேசங்களில் அனுஷ்டிக்கப்பட்டது.

அன்னை பூபதி 1988ஆம் ஆண்டு மாச் மாதம் 19ஆம் திகதி உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார் என்பதும், ஒரு மாத காலத்தில் ஏப்ரல் 19ஆம் திகதி உயிர்நீத்தார் என்பதும் தெரிந்தவையே.

அன்னை பூபதி நிணைவாக நேற்று 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்முனையில் அரச அலுவலகங்கள், வங்கிகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

போக்குவரத்துக்கள் இடம்பெற்ற போதிலும் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

கல்முனையில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

பாடசாலை மாணவர்கள் பலர் கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனையில் ஈடுபட்டதைக் காணக் கூடியதாக இருந்தது.

கல்முனையில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் மாமாங்கேஸ்வரர் ஆலயத்துக்கு வந்தனர்.

**மட்டக்களப்பில்**

அன்னை பூபதியின் 16ஆவது ஆண்டு நினைவுதினத்தை ஒட்டி மட்டக்களப்பு மாவட்ட பிரதான நிகழ்வுகள் மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றிலல் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட வேட்பாளர்களும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் பாடசாலை மாணவர்களும், பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் கலந்துகொண்டனர். நிகழ்வில் புலிக்கொடி ஏற்றப்பட்டதுடன், பொதுச்சுடர், ஈகச்சுடர் என்பனவும் ஏற்றப்பட்டன.

உண்ணாவிரத நிகழ்வு நடைபெற்ற மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை மாவட்டத்தின் பல இடங்களிலிருந்தும் ஊர்வலங்களும் சென்றடைந்தன.

நேற்று ஆரம்பமான அடையாள உண்ணாவிரத நிகழ்வு ஒருமாத காலம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதி கருணாவுக்கு ஆதரவான சுலோக அட்டைகளைச் சிலர் தாங்கியிருந்தனர். (ம-க)


# மருத்துவ உபகரணங்கள் திருத்த குடாநாட்டில் தொழிற்பட்டறை

## பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை வளவில் திறப்பு

குருநகர்,மார்ச்20

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை வளவில் நிறுவப்பட்டுள்ள தொழிற்பட்டறையை பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் க.தா. சிவபாதம் கடந்த புதனன்று திறந்து வைத்தார். அலுவலகச் தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.விமலாம்பிகை பாலன் தலைமையில் நேற்றுக்காலை 9.30 மணிக்கு நடைபெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய தொற்று நோயியலாளர் டாக்டர் ப.லுகுமார், கணக்காளர் க.தனரஞ்சிதராஜன், நிர்வாக உத்தியோகத்தர் என். சிவலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இலகு வைத்திய தொற்று நீக்கிக் கருவிகள், மின் பிறப்பாக்கி, நீர் இறைக்கும் இயந்திரம், மின்மோட்டார்கள் மற்றும் மின் இணைப்பு வேலைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் இந்தத் தொழிற்பட்டறையில் திருத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-51)





தியாக தீபம் அன்னை பூபதியின் 16ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.செம்மணன் தேசியக் கொடி ஏற்றுவதையும், வடமராட்சி எள்ளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: வசந், கரவெட்டிச்செய்தியாளர்)*

# அன்னை பூபதியின் நினைவு நிகழ்வு யாழ். குடாநாட்டில் நேற்று ஆரம்பம்

## மாவீரர் துயிலும் இல்லங்களில் பிரதான நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்20

இந்திய வல்லாதிக்கத்துக்கு எதிராக உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த தியாகி அன்னை பூபதியின் 16ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் குடாநாட்டில் நேற்று உணர்வு பூர்வமாக ஆரம்பமாகின.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம, வடமராட்சி எள்ளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் ஆகியவற்றில் பிரதான நிகழ்வுகள் நடைபெற்றன.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற நினைவு நிகழ்வில் ஈகச் சுடரினை கப்டன் சுருளி, கப்டன் அருணா, 2ஆம் லெப். தமிழ்ச் செல்வன் ஆகிய மூன்று மாவீரர்களின் சகோதரன் மற்றும் மாவீரர் கப்டன் கலைமதியின் தாய் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியினை யாழ். மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.செம்மணன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தியாக தீபம் அன்னை பூபதியின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. பின்னர் மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து நினைவுரைகளை மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.செம்மணன், கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் க.கஜேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். பொதுமக்கள், போராளிகள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

எள்ளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற நினைவு நிகழ்வில் வடமராட்சிக் கோட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகன் ஈகச்சுடரினை ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றிவைக்க தமிழீழ விளையாட்டுத் துறையைச் சேர்ந்த வனிதன் அன்னை பூபதியின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன.

இதற்கிடையில், தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற நினைவு நிகழ்வில் பொதுமக்கள், போராளிகள், எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(எ)

### பாடசாலைக்கு குடிதண்ணீர் தொட்டி

தென்மராட்சி,மார்ச்20

சாவகச்சேரி கச்சாய் வீதி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் குடிதண்ணீர் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்தினர் நீர்த் தொட்டி அமைக்க நிதி உதவி வழங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

# தமிழீழப் பெருநெருப்பில் பிரதேசவாதம் சாம்பராகிவிட்டது

## அதற்கு யாரும் உயிர்கொடுக்க முடியாது என்கிறார் காசியானந்தன்

சென்னை,மார்ச்20

தமிழீழப் பெருநெருப்பில் பிரதேசவாதம் எரிந்து சாம்பராகி நெடுங்காலமாகிவிட்டது. சாம்பலுக்கு இனி யாரும் உயிர் கொடுக்க முடியாது.

- இவ்வாறு கிழக்கு நிலைமை தொடர்பாக கவிஞர் காசியானந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழத்தை மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் என்று கூறுபோடுவதையோ, தமிழீழக் கொள்கையைக் கைவிடுவதையோ ஏற்றுக்கொள்ளமுடியாது.

தமிழீழ மக்கள் கடைசி மூச்சு வரை தமிழீழக் கொள்கைக்காகவே வாழ்வார்கள்.

தமிழீழ மக்கள் 17ஆயித்து 700 இற்கும் மேற்பட்ட மாவீரர்களைக் கொடுத்து மட்டக்களப்புக்கான போரையோ, யாழ்ப்பாணத்துக்கான போரையோ நடத்தவில்லை. அவர்கள் தமிழீழத்திற்கான போரையே நடத்தினார்கள்.

அன்று வி.நல்லையா என்னும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரதேசவாதத்தை முன்வைத்தார். அதனால், அவருக்கு சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து அமைச்சர் பதவி கிடைத்தது. அதன் பின்னர் ஏ.டபிள்யூ.தேவநாயகம் என்னும் நாடாளுமன்ற உறுப்பினர் மட்டக்களப்பு என்ற பிரதேசவாதத்தைத் தொடர்ந்தார். அதனால், அவருக்கும் சிங்கள ஆட்சியாளரிடமிருந்து அமைச்சர் பதவி கிடைத்தது.

பின்பு இராசன் செல்வநாயகம் என்னும் அரசியல்வாதி தனது உயர் பதவிக்காகப் பிரதேசவாதத்தைத் தொடர்ந்தார். அதைத் தொடர்ந்து செ. இராசதுரை வடக்கே காங்கேசன் துறைமுதல் தெற்கே திருக்கோயில் வரை நமது தாயகம் என்று முழங்கியவர் கடைசியில் மட்டக்களப்பு என்னும் பிரதேசவாதத்தை முன்வைத்தார். அவருக்கும் சிங்கள ஆட்சியாளர்கள் அமைச்சர் பதவியை வழங்கினார்கள்.

மட்டக்களப்பு பிரதேச வாதம் அத்துடன் நின்றுபோகவில்லை. அதற்கு முண்டுகொடுத்துத் தோளில் தூக்கத் துரோகிகள் வந்துகொண்டே இருக்கின்றார்கள்.

ஆனால், தமிழீழப் பெருநெருப்பில் பிரதேசவாதம் எரிந்து சாம்பராகி நெடுங்காலம் ஆகிவிட்டது. இனிச் சாம்பலுக்கு யாரும் உயிர் கொடுக்க முடியாது தமிழீழமே தமிழர் தாயகம் என்றுள்ளது. (ம-8)

# மேலும் 13 தமிழகப் படகோட்டிகளுக்கு எதிராக மேல்நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம்,மார்ச்20

கடந்த வருடம் ஒக்ரோபர், டிசெம்பர் மாதங்களில் நெடுந்தீவுக் கடற்பரப்பிற்குள் ஊடுருவிய சமயம் கைது செய்யப்பட்ட மேலும் 13தமிழகப் படகோட்டிகளுக்கு எதிராக யாழ், மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன.

புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கோம்பில் ராஜா, பாலசிங்கம் ஆரோக்கியம், சிலுவை குருஸ் அந்தோனி, கிருஷ்ணசாமி சின்னையா, அண்ணாமலை நேசன் ரஞ்சன், ஆறுமுகம் அன்பரசன், இடுமன் ஞானவேல், சந்தியாகுரீகன், ஆறுமுகம் வடிவேல், மடுக்கயின் சபாபதி, பச்சைவர்த்தன் செல்லக்குமார், செபஸ்ரியன் பர்ணாந்து ஜேசுராசா, செல்லக்காடி மகாசீலன் ஆகியோருக்கு எதிராகவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 67 படகோட்டிகளில் 54 பேருக்கு எதிராகச் சட்டமா அதிபரினால் இதுவரை வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அதேசமயம் 15 மீனவப் படகோட்டிகளுக்கு எதிரான வழக்கு மேல்நீதிமன்ற நீதிவான் கே.பி.எஸ்.வரதராஜா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிரிகள் சார்பில் ஆஜரான அரசால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி மு.திருநாவுக்கரசு, இந்த வழக்கில் சில அறிவுறுத்தல்களைப் பெற வேண்டியுள்ளதால் வழக்கை ஒத்திவைக்குமாறு கோரினார். இதையடுத்து நீதிவான் வழக்கை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ம-3)

**வடக்கின் பெரும் போர்:**

# முதல் இனிங்ஸில் பரியோவான் 109 ஓட்டங்களால் முன்னணி!

யாழ்ப்பாணம்,மார்ச்20

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி - பரியோவான் கல்லூரி அணிகள் இடையிலான கிரிக்கெட் போட்டியில் சென்.ஜோன்ஸ் அணி தனது முதலாவது இனிங்ஸில் 109 ஓட்டங்களை அதிகமாகப் பெற்று முன்னணியில் உள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை தனது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த பரியோவான் கல்லூரி அணி, ஆட்டநேர முடிவின்போது 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 88 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்று காலை அந்த அணி தனது ஆட்டத்தைத் தொடர்ந்தது.

மதிய இடைவேளைக்குச் சற்றுப் பின்னர் அந்த அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது. அணியின் உப தலைவர் டினேஸ் அதிகபட்சமாக 66 ஓட்டங்களைப் பெற்றார். கிருஷ்ணகுமார் 44 ஓட்டங்களையும் ஏ.அன்புஜன் 27 ஓட்டங்களையும் அணிக்குப் பெற்றுக் கொடுத்தனர். ஏனையோர் மிகக் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

மத்திய கல்லூரி வீரர்களான ரஜீவ்குமார் 6 விக்கெட்டுக்களையும் மதுஷன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து மத்திய கல்லூரி அணி நேற்றுப் பிற்பகலில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆட ஆரம்பித்தது. ஆட்டநேர முடிவின் போது அணி 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 95 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கே. றொகான் 41 ஓட்டங்களையும் தினேஷ் 5 ஓட்டங்களையும் பெற்றனர். ஏ. ஜசிந்தன், வி.கபில்தேவ் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 22,11 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருக்கின்றனர்.

பரியோவான் கல்லூரி சார்பில் சி.அன்ரு, என்.நவகீதன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்தப் போட்டி ஆரம்பிக்கப்பட்டு நூற்றாண்டை எட்டிய ஆட்டம் என்பதால் மூன்றாவது நாளாக இன்றும் ஆட்டம் தொடரும். (ம-9-4)

# புத்தளத்தில் ஆயுதக்குழு ஒன்றின் அட்டகாசம்!

புத்தளம்,மார்ச்20

புத்தளத்தில் ஆயுதக்குழுக்களின் அட்டகாசம் மீண்டும் ஆரம்பித்திருக்கின்றது.

புத்தளம் அல்ஹசனாத் பள்ளி வீதியிலுள்ள எஸ்.எம்.சிபாக் என்பவரின் வீடு நேற்றுமுன்தினம் ஆயுதக் குழு ஒன்றினால் முற்று முழுவதுமாகத் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது.

வான் ஒன்றில் வந்த ஆயுதபாணிகளான சுமார் 10 பேர் வீட்டினுள் பிரவேசித்து இந்தக் கொடூரத்தை செய்துள்ளனர்.

வீட்டினுள் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன. வீட்டிலிருந்த பெண்களும் தாக்குதலுக்கு உள்ளாகினார்கள்.

இச்சம்பவம் குறித்து புத்தளம் பொலீஸார் சந்தேகத்தின்பேரில் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்

இதேவேளை - கிரனேட் ஒன்றுடன் நான்கு வாலிபர்களைப் புத்தளம் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

அரசியல் நோக்கங்களுக்காகக் கிரனேட் கொண்டுவரப்பட்டதா என்பதை அறியும் பொருட்டு பொலீஸார் நால்வரையும் தடுத்து வைத்துள்ளனர். (ம-க)

### பின்லேடனின் வலதுகரமாக விளங்கிய

# அல்கெய்டா பிரதித் தலைவர் பாக். படைகளிடம் சிக்கினார்?

சர்வதேச இஸ்லாமியத் தீவிர வாத அமைப்பான அல்கெய்டாவின் பிரதித்தலைவர் அய்மன் அல்-ஸவ கரி (வயது 53) பாகிஸ்தான் படை களிடம் சிக்கியிருக்கிறார் எனத் தக வல்கள் வெளிவருகின்றன.

இவர் இந்த அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடனுக்கு வலது கரமாக விளங்கி வந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

இவரைப் பாகிஸ்தான் படைகள் சுற்றிவளைத்துள்ளன என்று மேற்கு நாட்டுச் செய்தி ஏஜென்சி அறிவித்த போதிலும், பாகிஸ்தானின் உள்ளூர் செய்தி நிறுவனங்கள் இராணுவ அதி காரிகளை மேற்கோள்காட்டி அவர் கைது செய்யப்பட்டுவிட்டார் என அறி வித்துள்ளன.

"அல்கெய்டாவின் மிக முக்கிய நபர் ஒருவரை எமது படைகள் சுற்றி வளைத்துள்ளன" - என்று பாகிஸ் தான் அதிபர் பர்வேஸ் முஷரப் தெரி வித்திருந்தார்.

"சம்பந்தப்பட்ட நபரைச் சுற்றி வளைத்துள்ள நமது படைகள் அடுத்த சில மணிநேரங்களில் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளன" - என்று பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் நேற்றுக்காலை தகவல் வெளியிட்டனர்.

அய்மன் - அல் - ஸவகரி எகிப்து நாட்டு டாக்டர்.

இவர், எகிப்தில் இருந்தசமயம், "எகிப்தியன் இஸ்லாமிக் ஜிகாத்' என்ற இயக்கத்தைத் தோற்றுவித்து நடத்தி வந்தார்.

1985இல் ஒஸாமா பின்லேடனைச் சந்தித்த ஸவகரி, அதற்குப் பின்னர் பின்லேடனின் மதவழி காட்டியாகவும், மருத்துவராகவும் மாறினார்.

அல் - கெய்டா இயக்கத்தின் தத் துவாசிரியாகவும் அவர் இருந்து வந் தார்.

பின்லேடனுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டதும் தமது 'எகிப்தியன் இஸ்லாமிய ஜிகாத்தை' பின்லேட னின் அல் கெய்டா இயகத்துடன் இணைத்ததோடு, அல் கெய்டாவின் பிரதித் தலைவருமானார்.

சதித் திட்டங்களை வகுத்து அதை நிறைவேற்றுவதில் அய்மன் அல்-ஸவகரி - பலேகில்லாடி, அமெரிக்கா மீது செப்ரெம்பர் 11இல் விமானத் தாக்குதல்கள் நடந்தபோது அதற்கு மூளையாகச் செயற்பட்டவர் இவர்தான்.

அமெரிக்க இராணுவம் தேடிவரும் மிக முக்கிய தீவிரவாதிகளில் இவ ரும் ஒருவராவார். இவரைப் பிடித்துக் கொடுத்தாலோ அல்லது இவரைப் பற்றிய தகவல் கொடுத்தாலோ 250 கோடி ரூபா பரிசாகத் தருவதாக அமெரிக்கா இராணுவம் அறிவித்திருந் தது.



பின்லேடனுடன் அல்-ஸவகரி

1998ஆம் ஆண்டு கென்யா, தான் சானியா ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரங்கங்களில் குண்டு களை வெடிக்கச் செய்ததிலும் இவ ருக்குத் தொடர்பு உண்டு. எனவே, இவரைப் பிடித்ததால்தான் அமெரிக்கா வுக்கு எதிரான குண்டு வெடிப்புக்க ளைத் தடுக்கமுடியும் என்று தீவிர தேடு தல் வேட்டைநடந்துவந்தது.

அமெரிக்கப் படைகளுக்கும் மக்க ளுக்கும் எதிராகத் தாக்குதல்களை நடத்துமாறு தனது "பத்வா" அணி யினரைக் கோரி 1998இல் பின்லே டன் வெளியிட்ட பகிரங்க அறிவிப் புக் கடிதத்தில் பின்லேடனை அடுத்து ஒப்பமிட்ட நால்வரில முதலாவது ஒப் பம் ஸவகரியினுடையது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரங்கள் மீது விமானங்களைக் கொண்டு பேரழிவுத் தாக்குதல்களை அல்கெய்டா மேற் கொண்ட பின்னர், அத்தாக்குத லுக்கு உரிமை கோரி அல்கெய்டா ஒளிநாடாக்களை வெளியிட்டது.

தாக்குதலுக்குப் பின்லேடனை நேர டியாக உரிமை கோரி உரையாற்று வதை அந்த ஒளிநாடாக்கள் வெளிப் படுத்தின. அச்சமயம் அவருடன் ஸவ கிரியும் அந்த ஒளி நாடாப் படத்தில் காணப்பட்டார்.

அதற்குப் பின்னர்,வெளியான பின்லேடனின் வீடியோ ஒளிப்பதிவு களிலும் அவருடன் ஸவகிரி எப் போதுமே நெருக்கமாகக் காணப்பட் டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தான் நாடு மீது அமெ ரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தி யதும் இவரும் பின்லேடனும் மலைப் பகுதிகளுக்குத் தப்பியோடி விட்ட னர். இதில் ஸவகரி வடக்கு பாகிஸ் தான் - எல்லையில் உள்ள வஸிரிஸ் தான் எனும் ஊரின் அருகில் இருக் கும் கல்லூஷா எனும் கிராமத்தில் பதுங்கியிருக்கிறார் எனப் பாகிஸ் தான் படைகளுக்கு இரகசியத் தக வல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து அந்தக் கிரா மத்தைப் பாகிஸ்தான் படைகள் முற் றுகையிட்டன. அந்தக் கிராமத்தில் அய்மன் அல்-ஸவகரி பதுங்கி யிருப்பதை உறுதிசெய்த இராணு வத்தினர் அவரைப் பிடிக்கும் முயற்சிக ளில் இறங்கினார்கள்.

ஆனால், அந்தப் பகுதியில் வாழும் இஸ்லாமிய பழமை வாதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால், இரு தரப்பினருக்குமிடையில் கடும் மோதல் ஏற்பட்டது. இருதரப்பினரும் ரொக்கட்டுகளை ஏவி தாக்கினார் கள். சரமாரியாக இயந்திரத் துப்பாக் கிச் சமரும் நடந்தது. இதில் பாகிஸ் தான் இராணுவ வீரர்கள் உயிரிழந் தனர். பின்லேடன் படையைச்சேர்ந்த 24 பேரும் கொல்லப்பட்டனர். கடந்த 3 தினங்களாக இந்தச் சண்டை நடந் தது. ஸவகரி தங்கியிருப்பதாகக் கருதப் படும் பிரதேசம் சுமார் 25 சதுர கிலோ மீற்றர் (சுமார் பத்து சதுர மைல்) விஸ் தீரணமுடையது.

அதற்குள் பாகிஸ்தான் படையினர் ஊடுருவி ஸவகரியைக் கைதுசெய்து விட்டனரா என்பதை உத்தியோகப் பூர்வமாகச் செய்திகள் எவையும் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பின்லேடனும், அய்மன் ஸவ கரியும் எப்பேதும் ஒன்றாகக் காணப் பட்டு வந்திருப்பதால், இப்பிரதேசத் துக்கு அண்மையில்தான் பின்லேட னும் இருக்கக்கூடும் என்று பாகிஸ் தான் - அமெரிக்கப் படைகள் கருது கின்றன.

பின்லேடனின் வலதுகரம் பிடிபட்டி ருப்பது உண்மையானால் அது தங்க ளுக்குக் கிடைத்த பெரிய வெற்றி என்று அமெரிக்க இராணுவம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

(ஐ-க)

## தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் நலமடைந்தார்

சென்னை,மார்ச்20

திடீர்மயக்கம் காரணமாக மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தி.மு.க. பொதுச் செயலாளர் அன் பழகன் சிகிச்சை முடிந்து நேற்றுமுன் தினம் மாலை வீடு திரும்பினார்.

தி.மு.க. பொதுச் செயலாளர் அன் பழகன் கடந்த 16ஆம் திகதி காலை வீட்டிலிருந்து தி.மு.கவின் தலைமை யகமான அறிவாலயத்துக்குக் கிளம் பிக் கொண்டிருந்தார். அப்போது திடீ ரென அவருக்கு மயக்கம் ஏற்பட் டது. இதையடுத்து சென்னை அப் பலோ மருத்துவமனையில் அவர் அனு மதிக்கப்பட்டார்.

டாக்டர்களின் பரிசோதனையில் அவருக்கு நரம்பு சம்பந்தப்பட்ட கோளாறு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அவருக்கு தீவிர சிகிச்சை அளிக் கப்பட்டது. அன்பழகன் நேற்றுமுன் தினம் பூரண குணமடைந்தார். இத னால் அன்று மாலையே அவர் வீடு திரும்பினார்.

எனினும் அவர், சற்றுக் காலத் துக்கு தீவிர தேர்தல் பிரசார நடவ டிக்கைகளில் ஈடுபட மாட்டாரெனத் தி.மு.கழக வட்டாரங்கள் தெரிவித் தன. (ஐ-க)

### உலக அரங்கில்

## கலிபோர்னியாவில் பூகம்பம்

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணம் சான்சி மோன் நகருக்கு வடக்கே நேற்றுமுன்தினம் பூகம்பம் ஏற்பட்டது. ரிச்டர் அளவு கோலில் 4.75 என்ற அளவில் இதன் வீரியம் இருந்தது. அதிகாலை 4மணிக்கு இது தாக்கியது. இதில் அதிர்ஷ்டவசமாக உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

கடந்த டிசம்பர் மாதம் சான்சி மோன் நகர் அருகே ஏற்பட்ட பூகம்பத் தில் 2பேர் பலியானார்கள்: 40பேர் காயம் அடைந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ-3)

## புதுடெல்லியில் பூகம்ப அதிர்ச்சி; குண்டு வெடித்ததாகப் பீதி!

புதுடில்லி,மார்ச்20

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் லேசான பூமியதிர்ச்சி ஏற்பட்டது. இதை யடுத்து ஜனாதிபதி மாளிகை மற் றும் பிரதமர் இல்லம் ஆகியன உள்ள பகுதிகளில் குண்டுவெடித்தாகப் பீதி பரவியது.

டில்லியில் அடிக்கடி லேசான பூமிய திர்ச்சி ஏற்படுவது வழக்கம் இதேபோன்ற பூமியதிர்ச்சி நேற்றுமுன்தினம் மதி யம் 1.22 மணியளவில் ஏற்பட்டது. டெல்லி நகரின் பல பகுதிகளில் இந்த அதிர்வைத் தெளிவாக உணரமுடிந் தது. பூமி அதிர்வின் அளவு 2.7 ரிச் டர் ஆகப் பதிவானது.

பூமி அதிர்ச்சி ஏற்பட்டபோது பெரிய கட்டடங்கள் கிடுகிடு என்று அதிர்ந் தன. வீடுகளில் இருந்த மக்கள் அல றியடித்துக்கொண்டு வெளியே ஓடி வந்தனர். மக்கள் ஆங்காங்கே கூடி நின்று பூமி அதிர்வு பற்றிப்பயத்து டன் பேசினார்கள்.

"பூகம்பத்தின் மையபப்பகுதி டெல்லி நகரின் நடுவே பதிவாகி இருந் ததாக வானிலை ஆய்வுமைய அதி காரிகள் தெரிவித்தனர். பூமி அதிர் வின் அளவு குறைவாக இருந்ததால் உயிர்ச் சேதமா, வேறு சேதங்களோ ஏற்படவில்லை, வீடுகள், கட்டடங் களுக்குப் பாதிப்பு ஏற்பட்டதாகத் தக வல் எதுவும் வரவில்லை"- என்று பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பூமியதிர்ச்சி ஏற்பட்ட சிறிது நேரத் தில் பொலீஸ் 'வயர்லெஸ்' மூலம் அவசரமாக ஒரு செய்தி பரவியது. நாடாளுமன்றத்திலும் அதைச்சுற்றி யுள்ள இடங்களிலும் குண்டு வெடித் தது போல பயங்கர சத்தம் கேட்ட தாகவும் பாதுகாப்புப்படை வீரர் களை உஷாராக இருக்கும்படியும் வயர் லெஸ்செய்தியில் கூறப்பட்டது.

2001ஆம் ஆண்டு நடந்த நாடாளு மன்றக் குண்டுவெடிப்புக்கு பிறகு இரவு - பகலாக உஷார் நிலையில் இருந்து வரும் விசேட பாதுகாப்புப் படை (எஸ்பி. ஜி) இந்த வயர்லெஸ் செய்திக் கேட்டதும் மின்னல் வேகத்தில் கூடு தல் பாதுகாப்பில் இறங்கியது.

(ஐ-க)

## ஜனாதிபதி, உப ஜனாதிபதி தாய்வானில் சுடப்பட்டனர்!

தைப்பே,மார்ச்20

தாய்வான் ஜனாதிபதி ஷென் சூய் பியான், உபஜனாதிபதி அனெட்லூ அம்மையார் ஆகிய இருவரும் நேற்று தாய்வானின் தென்பகுதி நகரான ஶை.ா னில் வைத்து சுடப்பட்டனர். ஜனாதி பதிக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டிருக் கிறது. உபஜனாதிபதி காலில் காயம் அடைந்துள்ளார். இருவரும் ஆபத் தான நிலையில் இல்லை என்று தெரி விக்கப்படுகிறது.

தேர்தல் பிரசாரப் பேரணி ஒன்றில் இவர்கள் பங்கு பற்றிய சமயமே இந்த சம்பவம் இடம் பெற்றது.


தாய்வானில், இன்று சனிக்கிழமை அதிபர் பதவிக்கான தேர்தல் நடை பெறும் நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதிபர் மற்றும் உபஅதிபர் மீதான தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லை என்றும்-

எதற்காக இந்தத் தாக்குதல் நடத் தப்பட்டது என்று உறுதி செய்ய வில்லை என்றும்- தைவான் அதிகாரி கள் கூறினர். அதிபர் மீதான தாக்கு தலையடுத்து நாட்டில் பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதிபர் தேர் தலில் ஜனாதிபதி சென் சூய்-பியான்னை எதிர்த்துப் போட்டியிடும் எதிர்க்கட்சிவேட்பாளர் லியன் சானுக்கும் பாதுகாப்புப் பலப்படுத் தப்பட்டுள்ளது.

திறந்த மேற்புறம் கொண்ட காரில் ஜனாதிபதியும், உப ஜனாதிபதியும் வந்து கொண்டிருந்தார்கள் என்றும்- அவர்கள் காரில் பயணித்த வீதியில் ஆதரவாளர்கள் நிறைந்திருந்தனர். அப்போது பட்டாசுகளும் அதிகள வில் கொளுத்தப்பட்டன. இந்தச் சந் தர்ப்பத்திலேயே அதிபர், உப அதி பர் ஆகியோரை நோக்கி வாகனத் தின் முன்புறத்திலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

(ஒ)



தைவானில் அதிபர் மற்றும் உப அதிபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படுவதற்கு சிறிது நேரம் முன்பாக எடுக்கப்பட்ட படம் இது.

## பதினெட்டு வயது இளைஞருக்கு விரைப்பை அருகே கர்ப்பப்பை!

### கரூரில் நடந்த அறுவைச் சிகிச்சை

தமிழகத்தில் கரூர் தனியார் மருத் துவமனையில் குடல் இறக்க நோய்க் குச் சிகிச்சை பெற வந்த 18 வயது வாலிபர் ஒருவருக்கு கர்ப்பப்பை இருப்பது கண்டறியப்பட்டு சத்திர சிகிச்சைமூலம் அது அகற்றப்பட்டது. இச்சம்பவம் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

குடல் இறக்க நோயால் அவதிப் பட்டு வந்த இந்த இளைஞர் கரூர் வேலுச்சாமி மருத்துவமனையில் சென்ற 9ஆம் திகதி சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப் பட்டது.

அப்போது வாலிபரின் அருகே பெண் களுக்கு அடி வயிற்றில் இருக்கக் கூடிய கருக்குழல், சூல்பை ஆகிய வற்றுடன் கூடிய கர்ப்பப்பை இருப் பது கண்டுபிடிக்கப்பட்டது. அறுவை சிகிச்சை மூலம் அது அகற்றப்பட் டது. டாக்டர்கள் அருள்ஜோதி, அசோ கன் அடங்கிய மருத்துவக் குழுவி னர் அறுவை சிகிச்சை மேற்கொண் டனர்.

இது குறித்து டாக்டர் அருள் ஜோதி கூறுகையில்-

"சாதாரணமாக பெண்களுக்கு இருக்கும் கர்ப்பப்பை, ஆண் ஒருவ ருக்கு இருந்தது ஆச்சரியமானது. அது வும் வயிற்றுப்பகுதியில் இல்லாமல் விரைப்பை அருகே இருந்தது கூடு தல் அதிசயமாகும்" - என்றார்.

"தற்போது அந்த இளைஞர் நல மாக உள்ளார். அவரது உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை. இது போன்ற பிரச்சினை லட்சத்தில் ஒருவருக்குத் தான் இருக்கும். எனினும் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது மகிழ்ச்சியளிக்கிறது" - என்றார்.

## பலிகொடுத்த பிரமுகர் பா. ஜ. கவிலிருந்து நீக்கம்!

இந்திய நாடாளுமன்றத் தேர்த லில் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்று, வாஜ்பாய் மீண்டும் பிரதமராக வேண்டும் என்று வேண்டி ஆலயத் தில் ஆட்டை பலி கொடுத்த பாரதிய ஜனதாகட்சிப் பிரமுகர். அக்கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பா.ஜ.க. விவசாய அணியின் தமிழக செயலாளர் சரவணன் என்பவரே கட்சி யைவிட்டு நீக்கப்பட்டவராவார்.

மதுரை மாவட்டம், மேலூர் அருகே யுள்ள கொட்டக் குடியைச் சேர்ந்த வர் சரவணன்.

கடந்த செவ்வாய்க்கிழமை சர வணன் தலைமையில் பா.ஜ.க. கொடி யுடன் தொண்டர்கள் வேலூர் அருகில் உள்ள காஞ்சிவனம் கோவி லில் இருந்து பாண்டி கோவிலுக்கு சைக்கிள்களில் பேரணியாகப் புறப் பட்டனர். மதுரை பாண்டிகோயிலுக்கு வந்த இவர்கள், அங்குள்ள முனீஸ் வர் கோயில்முன் ஆடு வெட்டி பொங் கல் வைத்தனர்.

இதனால் "சரவணன் கட்சியின் முன் அனுமதி பெறாமல், தனிப்பட்ட முறையில் கட்சிக் கொடியுடன் பேரணி நடத்தி கோயிலில் ஆடு வெட்டியுள் ளார். அவரின் இச்செயல் கண்டிக்கத் தக்கது. எனவே, கட்சியின் விவசாய அணி மாநிலச் செயலர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார்"- என்று மதுரை மாவட்டத் தலைவர் அறிவித்துள்ளார்.

## பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிடெட்
## கொடுப்பனவு

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்களின் கொடுப்பனவுகள் யாவும் எதிர்வரும் 26.03.2004 வெள்ளிக் கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரை யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் வைத்து வழங்கப்படும்.

திரு.கா.சிவபாதசுந்தரம்
தொழில்முகாமையாளர்.

(29834)(34-13)

## சேவை நலன் பாராட்டு

யா/சுதுமலை வடக்கு த.க.வித்தியாலயத்தில்
23 ஆண்டுகள் பெரும் பணியாற்றி ஓய்வுபெறும்
(20.03.2004) ஆசிரியை 2-1
(ஆசிரிய சேவை 28 வருடங்கள்)

திருமதி **குணமணிதேவி இராசரத்தினம்**

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.



கோணமாமலையில் ஈசன் அருள்பெற்றுப் பணியமர்ந்து
மெதடிஸ்த உயர்கூடம் உயர்வாகப் போற்றிடவே
பல்லாண்டு பணியாற்றி பதிதனை நெருங்கி வந்து
சுதுமலை வடக்கின் மைந்தர் புதுமைகள் பல படைக்க
குதூகலமாய்க் குடும்பத்தோடு குருசேவை செய்த கோவே
உடல் உள பலங்கள் பெற்று உயர்வு காண வாழ்த்து
கிறோம்.

*பிறப்பு:* 20.03.1944
*ஆரம்பக் கல்வி:* யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்
*மேற்கல்வி:* யா/இராமநாதன் கல்லூரி
*பட்டம்:* கலைமாணி, பேராதனைப் பல்கலைக்கழகம்

சேவை விவரம்:-
1.தி/மெதடிஸ்த பெண்கள் பாடசாலை ஆசிரியர்: 21.06.1976-30.04.1982
2.யா/சுதுமலை வடக்கு த.க.வித்தியாலயம் ஆசிரியர்: 01.05.1982-20.03.2004
(கிளி/இந்துக்கல்லூரி - தற்காலிக சேவை: 01.05.96-01.05.97)

யா/சுதுமலை வடக்கு த.க.வித்தியாலயம்,
மானிப்பாய்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(29844)(34-13)

### தென்மராட்சியில் மண் பரிசோதனை

தென்மராட்சி,மார்ச்20

தென்மராட்சிப் பிரதேச விவசாய நிலங்களில் மண் பரிசோதனை மேற்கொள்ள சீ.ஐ.சீ. விவசாய நிறுவனத்தினர் முன்வந்துள்ளனர்.

தமது விவசாய நிலங்களின் மண்ணைப் பரிசோதனை செய்ய விரும்பும் விவசாயிகள் தமது பிரிவு கமநலசேவைகள் நிலையத்துடன் தொடர்புகொண்டு அங்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய மண்ணைப் பரிசோதனைக்கு வழங்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

### பொன்விழாப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்20

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகத்தின் பொன விழாவை முன்னிட்டு நடத்தப்படும் திருமுறை மனனம், பண்ணிசை, நாடகம், கதாப்பிரசங்கம், புராணபடனப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிமுதல் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன என கழகத்தின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

### தற்காலிக பஸ் தரிப்பிடம் அமைப்பு

இணுவில் மருதனார்மடச் சந்திக்கு அருகில் ஆஞ்சநேயர் ஆலயத்திற்கு முன்பாகத் தற்காலிக பஸ் தரிப்பிடமொன்றைப் படையினர் அமைத்து வழங்கியுள்ளனர்.

தெல்லிப்பழைக்கும், யாழ்ப்பாணத் திற்கும் இடையே காங்கேசன்துறை வீதியூடாக சேவையிலீடுபடும் அரச தனியார் பஸ்கள் பயணிகள் தரித்து நின்று செல்வதற்கு வசதியாகத் தகரங்களினாலான தற்காலிக பஸ்தரிப்பிடமொன்றைப் படையினர் நிறுவிக் கொடுத்துள்ளனர்.

இதற்கு முன்னர் வீதியோர மரநிழல்களிலேயே பயணிகள் பஸ்ஸுக்காக காத்திருந்தனர். இதேவேளை அருகில் எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக உள்ள இராணுவ காவலரண் ஒன்றையும் சிலமாதங்களுக்கு முன்பு படையினர் அகற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-49)

## விற்பனையாகிறது

தரம்-6 முதல் 9 வரையிலான பாடசாலை மட்ட மாணவர் கணிப்பீட்டு அறிக்கைப் புத்தகம்.



**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
☎: 222-2573

(சி33730)(37-1334)

## மரண அறிவித்தல்

### திருமதி வேலாயுதம் இராஜேஸ்வரி

பருத்தித்துறை, பத்திரகாளி கோவில் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதம் இராஜேஸ்வரி அவர்கள் (16.03.2004) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரட்ணசபாபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற கந்தசாமி - இலட்சுமிப் பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் வேலாயுதம் (இளைப்பாறிய சிரேஷ்ட லிகிதர்) அவர்களின் அருமை மனைவியும் காலஞ்சென்ற மனோகரன் மற்றும் மனோரஞ்சிதம், மகேஸ்வரன் (ஜேர்மனி), மதனமாலா, வசந்தராணி, பரமேஸ்வரன் (நோர்வே), ராஜவதனி (ஜேர்மனி), பிறேமவதனி (திருமலை), மதிவதனி ஆகியோரின் அருமைத் தாயாரும் தேசோமயம், பவளராணி, ஜெயவீரசிங்கம், சுந்தரலிங்கம், சாரதாதேவி, விக்கினேஸ்வரானந்தன், சிவகுமார், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பரமேஸ்வரி, யோகமலர், நவரட்ணம் (காமராஜன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் பாலசுந்தரம், தில்லைநடராஜா, ஸ்ரீவனஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெயந்தி (டென்மார்க்) அவர்களின் பெரியதாயாரும் சுதாகரன், பிரபாகரன், சங்கீதா, பிரதீபா, சுகுணா, றமணன், சுகந்தன், மதனாகரன், சுவர்ணா, சோபனா, நிஷாந்தி, சுபாஜினி, ஸ்ரீணேஸ், பிரபாகினி, பிரசாந்த், பிரதீப், பிரவீன், ஜெயந்தன், பிருந்தன், யசிந்தன், லோஜிதன், சிவனேசன், நேசநாயகம், கேதீஸ்வரன், கௌரி, லலிதா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் விதுஷன், பிரகலாதன், சுஜித்தன், திலோஜன், சுரேந்தினி, புவிராஜ், பிரியதர்சினி ஆகியோரின் அன்புப்பூட்டியும் பிறேமறட்ணம், குணரட்ணம், கல்யாணி, வாணி, கௌரி, ஸ்ரீரட்ணம் ஆகியோரின் அன்புமாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.03.2004) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்திரகாளி கோயில் ஒழுங்கை,*
*பருத்தித்துறை.*

தகவல்:
குடும்பத்தினர்.

(29842)(37-34-13)

## அக்கினியில் சங்கமித்த அறிவின் விடியலுக்காய்...............!

- நூலகம் எரிந்தது எம் சேமிப்புத் தொலைந்தது.
- அறிஞர்கள் மடிந்தனர் எம் ஆக்கங்கள் தொலைந்தன.
- சட்டங்கள் எல்லாம் இருளோடு கலந்தன.
- உரிமைகள் எவ்விடமோ? வறுமைகளே .....மலிந்தன.

பார்த்திருந்த பல பேர்கள் பேசாமடந்தையாய்
என் செய்வோம் பராபரமே என்றோய்ந்து இருப்பதுவும்
வீண் பேச்சுப் பேசி ஏன் என்னுயிரை மாய்க்க வேணும்.......
தானுண்டு...... தன்பாடுண்டு ........நமச்சிவாய
வாழ்கவென...........?



## யுத்தமது எம்மினத்தை சத்தமிலா சடப்பொருளாக்கியது.....!

பிடி அவனை.......விடாதே பிடியெனவும் .....ஏன் வந்தாய் எனக்கூவி
செவி பற்றிப் பிடித்திழுத்து கொடுந் தமிழில் அபிஷேகம்.....!
அந்தரங்க வார்த்தையெல்லாம்......அத்துப்படி போங்கோ!
எம் தமிழே ...... சரஸ்வதியே எல்லாமே உன் காப்பு..

**அறிவின் விருத்திக்கும், எம் ஆற்றலின் விடிவுக்குமாய், ஒன்றிணைந்து வாக்களிப்போம்.**

**வீ. ஆனந்தசங்கரி** (தலைவர் - தமிழர் விடுதலைக் கூட்டணி)
தலைமையிலான

## சுயேச்சைக் குழு : 1 | X

விளம்பர அனுசரணை : செந்தமிழன் வீ.பீ.ஆதரவாளர்கள் - கனடா

குறிப்பு : எக்காரணங்கொண்டும் சுயேச்சைக்குழு 01 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளாது என உறுதியாகத் தெரிவிக்கின்றோம். வீண் வதந்திகளைத் தயவுசெய்து நம்பவேண்டாம்.

# உதயன்

## நியாயத்துக்கு மாறான செயல்

வடக்கு, கிழக்கில் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேச வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பான விடயத்தில் தேர்தல் திணைக்களம் எடுத்திருக்கும் முடிவு ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களைப் பெரும் அதிருப்திக்கும் விசனத்துக்கும் உள்ளாகியிருக்கின்றது.

அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேச வாக்காளர்களுக்கு அவர்களது பிரதேசத்தில் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டிருக்கின்றது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்தே அவர்கள் வாக்களிக்க வேண்டும் என்பது தேர்தல் திணைக்களம் செய்துள்ள முடிவு.

அதற்காக அவர்களுக்கு விசேட வாகனப் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று அந்தந்த மாவட்டங்களுக்குப் பொறுப்பான தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவித்துள்ளனர்.

அப்படி வாக்களிக்க வருவோருக்கான விசேட ஏற்பாடு இதுவென்றும், அதனால் அப்படி வாக்களிக்க வருவோர் பொதியேதும் கொண்டுவரக்கூடாது என்றும் அந்தத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவித்துள்ளனர்.

ஆனால், வாக்களிக்கச் செல்வோரைகூட்டிச் செல்வதற்கு அவர்கள் விதித்திருக்கும் புதிய நிபந்தனை விநோதமானது; சட்ட விரோதமானது. அது மட்டுமல்ல, ஏற்கனவே நீதிமன்றங்கள் இது விடயத்தில் வழங்கிய தீர்ப்புகளுக்கு மாறானது.

இலங்கைத் தேர்தல் சட்டங்களின்படி தேர்தலில் வாக்களிக்கச் செல்வோரிடம் வாக்களிப்பதற்கான ஒரு நிபந்தனையாக அவர்களின் அடையாள அட்டைகளை அவர்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்று கோர முடியாது.

ஏற்கனவே கடந்த முறை தேர்தலை ஒட்டி ஈ.பி.டி.பி. தாக்கல் செய்த ஒரு வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இது தொடர்பாக திட்டவட்டமான தீர்ப்பு ஒன்றை வழங்கியிருந்தது.

எனவே, அதை மீறும் வகையில், வாக்களிக்க வருவோர் தமது அடையாள அட்டைகளைக் காட்டித்தான் அதற்கான பிரதேசத்துக்குள் நுழையலாம் என்ற கட்டுப்பாட்டை அதிகாரிகள் (அவர்கள் சிவில் அதிகாரிகளாக இருக்கலாம் அல்லது படை அதிகாரிகளாக இருக்கலாம்) விதிப்பது நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் செயல். அது மட்டுமல்ல, அதிகாரத் துஷ்பிரயோகமும் கூட.

'வாக்களிப்பதற்கல்ல, அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைவதற்குத்தான் அடையாள அட்டைகள் கோரப்படுகின்றன' - என்று அதிகாரிகள் தரப்பில் நொண்டிச் சாட்டுகள் கூறப்படலாம்.

ஆனால், இந்த வாக்களர்களை வாக்களிப்பதற்கென்றே - விசேட பயண ஏற்பாட்டுடன் - பொதிகள் ஏதுமின்றி - தேர்தல் திணைக்கள ஒழுங்கின் கீழ் - அரச அதிகாரிகளே புலிகளின் பிரதேசத்திலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கூட்டிச் செல்லப் போகின்றனர். வாக்களிப்பதற்கான விசேட போக்குவரத்துப் பயணமே அதுஅப்படி வாக்களிப்பதற்காக விசேடமாக அழைத்துச் செல்லப்படுபவர்களிடம் - அடையாள அட்டை எந்த ஒரு நிபந்தனையாக எந்தக் காரணத்திற்காகக் கோரப்பட்டாலும் - வாக்களிப்பதற்கு அடையாள அட்டை ஒரு நிபந்தனையாக விதிக்கப்படுகின்றது என்றே அது அர்த்தப்படும்.

ஏனைய பிரதேச மக்கள் அடையாள அட்டை மட்டுமல்ல, வாக்காளர் அட்டை கூட இல்லாமல்வாக்குகளை செலுத்த வாய்ப்பளிக்கப்படுகின்றது. அதுதான் கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தேர்தல்களின்போது பின்பற்றப்படும் மரபு.

ஆனால், நீண்ட காலத்துக்குப் பின்னர் இப்போதுதான் வாக்களிக்க வாய்ப்புக்கிடைத்திருக்கும் - அரச கட்டுப்பாட்டில் இல்லாத - பிரதேச மக்களிடம் மட்டும் நீதிமன்ற உத்தரவுக்கு மாறாக, அடையாள அட்டையை ஒரு நிபந்தனையாக விதிப்பது அநியாயம்; நீதிக்கு மாறானது.

கடந்த தடவை இந்த வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுத்ததற்காக இராணுவத்தளபதி உயர்நீதி மன்றத்தால் கடிந்து கொள்ளப்பட்டார். நஷ்ட ஈடு செலுத்தும்படி பணிக்கப்பட்டார்.

இப்போதும் நீதிமன்றத்தீர்ப்புக்கு மாறாகச் செய்படும் நடவடிக்கைக்கு யார் பொறுப்பேற்கப்போகிறார்கள்? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

தமிழர்தரப்பு நேரகாலத்துடனேயே இது விடயத்தில் தங்கள் ஆட்சேபனையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எழுத்து மூலம் கொடுத்துவிடுவது நல்லது. அப்போதுதான் நீதிமன்றத்திற்கு விடயம் வரும்போது, பொறுப்பேற்க வேண்டிய அதிகாரிகள் பொறுப்பைத்தட்டிக்கழித்து தப்பித்து விடுவதைத் தடுக்கலாம்.

தேர்தல் காலத்திலும் தமிழர் தரப்புக்கு ஒரு நியாயம்; ஏனையதரப்புக்கு பிறிதொரு நியாயம் என்றால், ஜனநாயகம் சட்டத்தின் முன் எல்லோரும் சமன் என்பதெல்லாம் தவிடுபொடிதானே?.....!

## இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டதால் பொருள்களின் விலைகள் திடீர் உயர்வு

### யாழ். வர்த்தக வட்டாரங்கள் விளக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

தேர்தலின் பின்னர் விலைச்சரிவு ஏற்படக்கூடும் என்ற அச்சம் காரணமாக பொருள்களை இறக்குமதி செய்வதை வர்த்தகர்கள் இடைநிறுத்தியுள்ளனர். இதனாலேயே குடாநாடு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளன.

- இவ்வாறு யாழ். வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சீனி, தேங்காய் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் சமீப காலத்தில் திடீரென உயர்ந்துள்ளன.

யாழ். நகரப்பகுதியில் சீனி ஒரு கிலோ 45 ரூபாவாகவும், தேங்காய் எண்ணெய் லீற்றர் 95 ரூபாவாகவும் நேற்று விற்பனையாகின. இந்தப் பொருள்களின் விலைகள் குடாநாட்டில் இடங்களிலும் வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இத்திடீர் விலையேற்றம் தொடர்பாக யாழ். வர்த்தக வட்டாரங்களில் விசாரித்தபோது இத்திடீர் விலையேற்றத்து[illegible] யாழ். வர்த்தகர்கள் பொறுப்பல்ல என்று தெரிவிக்கப்ப[illegible]

தேர்தலின் பின்னர் ஆட்சியமைக்கும் அரசு, இ[illegible]மதிக் கொள்கைகளில் வரிக்குறைப்பு போன்ற மாற்றங்களை மேற்கொள்ளக்கூடும் என்றும் - அதனால் இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைகள் கு[illegible]யும் என்றும் - அத்தகைய சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் [illegible]போது இறக்குமதி செய்யும் பொருள்களின் விலை அதிகமாக இருப்பின் அவற்றை விற்க முடியாது நஷ்டமேற்படும் என்றும் இறக்குமதியாளர்கள் அஞ்சுகின்றனர்.

இதனால், அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதை அவர்கள் கணிசமான அளவில் மட்டுப்படுத்தியுள்ளனர். இதனாலேயே அத்தியாவசியப் பொருள்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு விலைகளும் அதிகரித்துள்ளன.

இவ்வாறு அந்த வட்டாரங்கள் விளக்கமளித்தன.

(ஓ-3-8-72-117)

## பயணிகளை ஏற்றுவதைத் தடுக்க தட்டி வான்களிலிருந்து தட்டிகளை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவு

தென்மராட்சி,மார்ச்20

பயணிகள் சேவையில் ஈடுபடும் தட்டி வான்களில் பின்புறம் இணைக்கப்பட்டுள்ள தட்டிகளை அகற்றுமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

கொடிகாமத்திற்கும் வடமராட்சி மற்றும் வன்னி ஆகிய பகுதிகளுக்கும் இடையே பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்படும் தட்டி வான்களில் தட்டிகளைப் பயன்படுத்தக் கூடாதென்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக பயணிகளையும், பொதிகளையும் ஏற்றியிறக்கும் பணியில் தட்டிவான்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் தட்டிவான்களின் பின்பகுதியில் இணைக்கப்பட்டுள்ள தட்டிகளில் முன்னர் பொதிகள் மட்டுமே ஏற்றப்பட்டு வந்தன. ஆனால், தற்போது அதிகளவு பயணிகள் தட்டிகளில் ஏற்றப்படுகின்றனர்.

சில தட்டி வான்களில் பயணிகளைத் தட்டிகளில் அதிகளவு ஏற்றுவதற்கு வசதியாகக் கைபிடிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வாறு அதிக எண்ணிக்கையில் தட்டிகளில் பயணிகள் பயணிக்கும் சமயங்களில் அவர்கள் தவறி வீழ்ந்து உயிருக்கு ஆபத்து ஏற்படலாமெனத் தென்மராட்சி வடக்கு பகுதியைச் சேர்ந்த வரணி குடமியன், நாவற்காடு ஆகிய பகுதி மக்கள் மகஜர் மூலம் சாவகச்சேரி நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவந்திருந்தனர்.

இந்த நிலையில் அதிகளவு பயணிகளை ஏற்றிய ஐந்து தட்டி வான்களைத் தடுத்த கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி நீதிமன்றுக்கு கொண்டு வந்தனர். அந்தத் தட்டிவான்களின் உரிமையாளர்கள் நீதிமன்றுக்கு நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்டிருந்தனர். சம்பந்தப்பட்ட தட்டி வான்களில் உள்ள தட்டிகளையும் கைப்பிடிகளாகப் பயன்படுத்தப்பட்ட கம்பிகளையும் அகற்றி நீதி மன்றில் ஒப்படைத்துவிட்டு வான்களை எடுத்துச்சென்று சேவையில் ஈடுபடுத்துமாறும் -

ஆறு மாதங்களின் பின்னர் தட்டிகளையும், பிடி கம்பிகளையும் மீள விண்ணப்பித்து நீதிமன்றில் பெற்றுக்கொள்ளும்படியும் - தட்டிவான் உரிமையாளர்களை நீதிமன்றம் பணித்தது.

இதேவேளை சேவையில் ஈடுபடும் சகல தட்டிவான்களிலிருந்தும் தட்டிகளை அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள தட்டிவான்கள் சங்கத்தின் தலைவரும் செயலாளரும் சங்க ஆவணங்களுடன் எதிர்வரும் 22ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று நீதிமன்றப் பதிவாளர் செ.விக்னேஸ்வரமூர்த்தி தெரிவித்தார்.

(ஓ-117)

## மானிப்பாய் தபாலகக் கட்டடத்துக்கு நிரந்தரக் காணி பெற நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்20

மானிப்பாய் தபாலகத்திற்கு நிரந்தர கட்டடம் ஒன்றை அமைப்பதற்கென வலி. தென்மேற்குப் பிரதேச சபையிடமிருந்து காணி பெறப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் புனர்வாழ்வு இணைப்புக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

வலி. தென்மேற்குப் பிரதேசசபை எல்லைக்குள் மானிப்பாய் பட்டினசபை நூலகத்துக்குப் பின்புறமாக உள்ள காணியே தபாலகக் கட்டடம் அமைப்பதற்கெனப் பெறப்படவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா இக்காணியைப் பெறுவதற்கு யாழ். அரச அதிபர் ஊடாக மாகாணப் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர், மாகாண ஆளுநர் ஆகியோரின் அங்கீகாரத்தைப்பெறும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இக்காணி பிரதேச சபையிடமிருந்து பெறப்பட்டதும் தபாலகக் கட்டடப்பணிகள் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஓ-8-185)

## மேலதிக பாடநூல்கள் தேவைப்படின் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளவும்

### கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

வலிகாமம்தெற்கு,மார்ச்20

பாடசாலை அதிபர்கள் தேவைப்படும் மேலதிக இலவசப் பாடநூல்களின் விவரங்களைச் சமர்ப்பித்து அவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

- இவ்வாறு உடுவில் கல்விக் கோட்டப்பணிப்பாளர் செ. குபேரநாதன் அறிவித்துள்ளார். வன்னியிலிருந்து வந்து இங்குள்ள பாடசாலைகளில் பல மாணவர்கள் இணைந்து வருகின்றனர். இதனால் தேவைப்படும் பாடநூல்களின் எண்ணிக்கை விண்ணப்பித்த தொகையைவிட அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய சந்தர்ப்பத்தில் மேலதிகமாகத் தேவைப்படும் பாடநூல்களின் எண்ணிக்கை விவரத்தைச் சமர்ப்பித்து வேண்டிய பாடநூல்களைப் பெற்று வழங்கலாம் - என்று உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

அத்துடன், தரம் ஒன்று தொடக்கம் ஜி.ச.ஈ. உயர்தரம் வரையான வகுப்புக்களுக்குத் தேவையான ஆசிரிய வழிகாட்டி நூல்களின் விவரங்களை சமர்ப்பித்து அவற்றையும் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஓ-152)

### உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள

## நூலகம், பிரதேச சபை உப அலுவலகம் என்பவற்றை இயக்க நடவடிக்கை

தெல்லிப்பழை,மார்ச்20

வலி. வடக்கில் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அமைந்துள்ள தெல்லிப்பழை பொது நூலகம், தெல்லிப்பழைப் பிரதேச சபை உப அலுவலகம் என்பவற்றை மீள இயக்குவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றை மீண்டும் இயக்கப் படையினர் அனுமதி வழங்கியதையடுத்து நூலகம் மற்றும் பிரதேசசபை உப அலுவலகம் ஆகியவை இருந்தபகுதிகள் துப்புரவுசெய்யப்பட்டு வருகின்றன.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இயங்க முடியாத நிலையில் சேதமடைந்து இருந்த இந்தக் கட்டடங்களைப் புனரமைத்து இயக்க அனுமதிக்கக்கோரி விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று பலாலி படைத்தலைமையகம் அனுமதி வழங்கியது.

இதனையடுத்து இவற்றைத் துரிதமாக துப்புரவு செய்யும் பணிகளை பிரதேசசபை ஊழியர்கள் மேற்கொண்டனர். கட்டடங்களும், கட்டட வளாகங்களும் சுத்தமாக்கப்பட்ட நிலையில் அவற்றைப் புனரமைப்பதற்கான திட்ட முன்மொழிவு தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்தாக வலி. வடக்குப் பிரதேசசபைச் செயலாளர் பொ. வைரமுத்து தெரிவித்தார்.

(ஓ-8-150)

### நாளை

பங்குனி 08
ஞாயிற்றுக்கிழமை
(21.03.2004)
திதி: பிரதமை
பின்னிரவு 5.11 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி
இரவு 11.16 வரை
சுபநேரம்: 9.17 - 10.47
ராகுகாலம்: 4.47 - 6-17
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

இதயசுத்தி உள்ளவனின் வாழ்வு இளமையானதாக இருக்கும்.

## உலக உணவுத் திட்டப் பணிகளில் ஈடுபட்டோருக்கு உலர் உணவு

தெல்லிப்பழை,மார்ச்20

வலி. வடக்கில் 2003ஆம் ஆண்டு உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற வேலைகளுக்கான உலர் உணவு வழங்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலி. வடக்கில் 2003ஆம் ஆண்டு உலக உணவுத் திட்டத்தினால் பொது மக்களுக்கு உலர் உணவு வழங்கி வேலைத் திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டு வந்தன. இவ்வேலைத் திட்டங்களில் ஈடுபட்ட மக்களுக்கு, அரிசி கொள்வனவில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக உலருணவு விநியோகம் நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கமூடாக மேற்படி வேலைத்திட்டங்களில் பங்குபற்றிய மக்களுக்கு உலருணவு வழங்கப்பட்டு வருவதாக வலி. வடக்கு பிரதேச செயலக வேலைகள் அத்தியட்சகர் தெரிவித்தார். (ஓ-8-150)

### தீர்த்தே பெருவாழ்வளிப்பீர்!

வண்ணை வைத்தீஸ்வரனே! வாலாம்பிகை நாயகனே!
வந்தோம் திருவருள் தந்தே எமைக்காப்பாய்
கண்ணை யிமை காப்பதுபோல் காத்தருள் புரிவீரையா
கரமைந்துடைய கருணைக் கணபதியின் தந்தையே!
பெண்ணை யிடப்பாகம் வைத்த பெருமானே வைத்தீசா!
பேரிடர் தீர்த்தே நல்ல பெருவாழ்வு அளிப்பீர்!
மண்ணை யளந்த மாலவன் திருமாலுக்கருள் புரியும்
வேலவன் தாதையே! வேண்டும் வரம் தாருமையா!

- காவடியூர் தேவார இசை மணி
எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்

(இன்று வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் 4ஆம் திருவிழா)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்20

சர்வதேச மார்க்ஸிசக் குழுவின் யாழ்.பிரிவினர் நடத்தும் 'சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி அமைப்பு முறை' என்னும் பொருளில் அமைந்த கருத்தரங்கு நாளை ஞாயிற றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சொ.சிவபாலன் தலைமையில் யாழ். நகரில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி யின் பட்டப் படிப்புகள் பிரிவு மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

(ஒ-10)

# கொழும்புத்துறை கிழக்குப் பகுதி தும்புத் தொழிலாளர்கள் விசனம்

கொழும்புத்துறைக் கிழக்குக் கட லில் தும்புத் தயாரிப்பிற்காகப் புதைத்த மட்டைகளை எடுப்பதற்கும், புதிதாக மட்டைகளைப் புதைப்பதற்கும் மட் டுப்படுத்தப்பட்ட நேரம் படையினா அனுமதி வழங்கியுள்ளனர் என்றும்-

இதனால், தாம் தொழிலைச் சீராக மேற்கொள்வதில் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் என்றும் - தும்புத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்

தினமும் முற்பகல் 10 மணி முதல் 12 மணிவரையும் இப்பகுதியில் மட்டை களைப் புதைக்கவும், எடுககவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது

இது உயர்பாதுகாப்பு வலயப் பகுதி யாக இருப்பதனால் இராணுவத்தினரால் அனுமதிக்கப்பட்ட இருபாதைகளையே மக்கள் பயன்படுத்தி வருகினறனர். புவியியல் வானியல் மாறுதல்களுக்கு ஏற்ப கடல் நீர்மட்டம் வெவ்வேறு நேரங்களில் கூடியும் குறைந்தும் காணப்படும் இந்நிலையில் தினமும் ஒரே நேர ஒழுங்கில் அனுமதிக்கப் படுவதால் சிலநாள்களில் வெள்ளப் பெருக்கான நேரத்திலேயே கடற் பகுதிக்குள் தும்புத்தொழிலாளர்கள் செல்லவேண்டிய நிலை ஏற்படுகிறது.

இவ்வாறான வேளைகளில் தேங் காய் மட்டைகளைப் புதைத்த இடங் களைத் தோண்டி மட்டைகளை வெளியே எடுப்பது மிகவும் சிரமமாக வுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, பகல்நேரம் முழுவதும் கடலுக்குச் சென்றுவர அனுமதித் தால் கடல்நீர் வற்றிபோது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வது சுலபமாக இருக்கும் என்று தும்புத் தொழிலாளர்கள் கருத்துத் தெரி விக்கின்றனர்.

(ஒ-30)

# தாதியர் பாடசாலைக்கு புதிய பஸ்

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிப் பாடசாலையின் பாவனைக்கென புதிய பஸ் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

'நிக்கொட்' நிறுவனத்தால் அன் பளிப்பாக வழங்கப்பட்டுள்ள இந்த பஸ் கடந்த 17 ஆம்திகதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(ஐ-8-15)



### மட்டுவில் பன்றித்தலைச்சி
### கண்ணகை அம்மன் தேவஸ்தானம்
### விசேட அறிவித்தல்

கோயில் வியாபாரத்துக்கென ஒதுக்கப்பட்ட இடத்திலேயே வியாபாரம் செய்யவும். வீதி ஓரத்திலும் கோவில் வீதிகளிலும் பொங்கல் செய்யும் இடத்திலும் வியாபாரம் செய்து பக்தர்களுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் என கோயில் நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது.

தர்மகர்த்தா
சி.சிவகுரு

(29810)(37)

---

நெஞ்சை விட்டகலாத

## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 06 | 19 |
| 12 | 02 |
| 1969 | 2004 |

### அமரர் தயாவாணி மயில்வாகனம்

திதி: 20-03-2004

அன்பே! காவியமானவளே!
காவியங்கள் படைத்திடலாம்
ஓவியங்கள் வரைந்திடலாம்~உன்
பெறுமையின் பொக்கிஷத்தை
பொன் கொடுத்து பெற்றிடலாமோ?
வாடிக்கைப் பார்வையினை
வந்தெமக்குக் காட்டாமல்
முன்னர் முகவானில் வந்த நிலா
தற்போது நீண்ட தூரம்
சென்றதுவோ?

அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும இன்று (20.03.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் இந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி (சி33719)(37-21-11-19)

த.மயில்வாகனம்
(தந்தை-இளைப்பாறிய அதிபர்)

---

## தேவை

சட்டத்தரணியின் அலுவலகத்தில் வேலை செய் வதற்கு பெண் ஆங்கிலத் தட்டெழுத்தாளர்/ எழுதுவினைஞர் தேவை. க.பொ.த. உயர்தரத் தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தொடர்பு
திரு.V.நடராசா (சட்டத்தரணி)
இல. 3, நவீனசந்தை
(மேல்மாடி), யாழ்ப்பாணம்.

(29796)


## வெளிவந்துவிட்டது

தரம் 5 புலமைப் பரிசில் வழிகாட்டி
(எல்லாப் பாடங்களையும் உள்ளடக்கியது)
ஆசிரியர்: வே.அன்பழகன்
எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
T.P.:0777 244094.
(29803)


---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12 | 19 |
| 04 | 02 |
| 1951 | 2004 |

### அமரர் தவராசா நாகம்மா (தங்கம்)

அன்போடும் பண்போடும் வாழ்ந்து மறைந்த உங்களை
எங்களால்மறக்க முடியவில்லை

ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நிகழ்வு இன்று (20.03.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. இந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்வதோடு நண்பகல் நிகழ்கின்ற மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அண்ணாசிலையடி
கரணவாய், கரவெட்டி. (29799)(37-21-19-11)

- குடும்பத்தினர்.

---

## நெஞ்சைவிட்டு அகலாத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்வன்

### காந்தி திலகர் சுதாகரன்

(மாணவன், யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்)

தோற்றம்
30-12-1990

திதி:20.03.2004
அமாவாசை

மறைவு
01-04-2003

காற்றோடு வந்த செய்தி
கனவெனவே பேசாதோ?
கலங்கி வாடுகின்றோம் சுதாவே - உனைக்
கண்ணீரில் தேடுகின்றோம்
உனது பிரிவு எம் செந்நீரைக்
கண்ணீராக மாற்றியது
இறைவனோடு சங்கமித்த - உன்னைச்
சாந்திப் பூக்கள் தழுவட்டும்.

இடைப்பிட்டி,
காரைநகர். (29823)(37-21-19-11)

- குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கந்தசாமி

(அருணாசலம் ஆசாரி)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட (ஆசாரி) ஆறுமுகம் கந்தசாமி (அருணாசலம்) 16-03-2004இல் லண்டனில் காலமானார்.

அன்னார் ஆறுமுகம் - செல்லத்தின் மகனும் சின்னத்துரை -செல்லம் மாவின் மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கலைமகள்தேவி, கமலராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் வரதராசா, லோகேஸ்வரன் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-03-2004) சனிக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.பெருமாள்பிள்ளை (மைத்துனர்).

27,கலைமகள் வீதி,
அரியாலை. (29822) (19-21-11-19)

---


இந்தியாவில் படியுங்கள் ~ பெங்களூர் பல்கலைக்கழகம்

## பிருந்தாவன் கல்லூரி

(முன்னைய தேசிய முதலாம் தர கல்லூரி)

**BRINDAVAN COLLEGE**

க.பொ.த. உயர்தரம் முன்னரே ஆயத்தம்

3 வருடங்கள்

பெங்களூர் பல்கலைக்கழகப் பட்டம்

2nd Cross, Bhoopasandra, RMV Extn.2nd Stage, Bangalore 94
Tele:0091-80-23414557, 23417833 Fax:0091-80-23625621, 23417832
E.mail:nfgc@bgl.vsnl.net.in Website:www.nfgcollege.com.

*Undergraduate Courses*

| | |
|---|---|
| B.Sc. | Biotechnology |
| B.Sc. | Genetics |
| B.Sc. | Microbiology |
| B.Sc. | Computer Science |
| B.B.M. | Business Management |
| B.C.A. | Computer Application |
| B.Com.+ | Commerce + Computer |

*Post Gradate Courses*

| | |
|---|---|
| M.Sc. | Microbiology |
| M.Sc. | Biotechnology |
| M.B.A | Business Administration |
| M.C.A | Computer Application |

### இலவச கருத்தரங்கு

மார்ச் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணி

### உடனே அனுமதிகள்

மார்ச் 21-22 மு.ப.11.00 முதல் பி.ப.5.00 வரை

இடம்: COLOMBO HILTON

அனுமதி வழங்குபவர்: அதிபர்/நிறுவன முகாமையாளர்

- # 100% சித்திகள் எல்லாமே 1 ஆம் தரம் - M.Sc. Micro Biology பல்கலைக்கழகங்கள் தரத்தில் 1 ஆம், 2 ஆம் நிலைகள்.
- # 260இற்கு மேற்பட்ட சிறிலங்கா மாணவர்கள் கற்கின்றார் கள்.
- # ஆண்கள், பெண்களுக்கு தனியான விடுதி வசதிகள்.
- # ஏற்கனவே 250 சிறிலங்கா மாணவர்கள் பட்டம் பெற்றுள் ளனர்.
- # 41 தேசிய இனங்களைச் சேர்ந்த மாணவர்
- # ICCR மூலமாக இந்தியஅரசு புலமைப் பரிசில் மாண வர்கள்.
- # 2004 ஆம் க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவர்கள் பதிவுசெய்து இடஒதுக்கீடு செய்யலாம். இதனால் (1) வருடம் சேமிக்கலாம்.
- # பதிவுசெய்து ஒதுக்கீடுபெறக் கட்டணம் US $ 400

**Company Secretarial Services (Pvt) Ltd**
# 285C-1/1, St Tillakaratne Mawatha, Jubilee Post, Nugegoda
Tel: 011-2854438-E.Mail: yapadd @ sol.lk.
(சி33705)(21-34-19-11)

புலமைப் பரிசில் திட்டம்/ தவணைமுறை பணம் கட்டல்/கழிவுகள் என்பன கருத்தரங்கில் பதிவுசெய்வோருக்கு வழங்கப்படும்.

யாழ். நகரில் இன்று

# ஆயிரம் பெண்கள் ஒன்றுகூடிப் பேரணி!

யாழ்ப்பாணம்,மார்ச்20

பெண்கள் பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பெண்கள் எழுச்சிச் சங்கமம் நிகழ்வும் பெண் வேட்பாளர் அறிமுக நிகழ்ச்சியும் இன்று யாழ். நகரில் நடைபெறவிருக்கின்றது.

யாழ். நகர் வீரசிங்கம் மண்டபத்தில் முற்பகல் 11.00 மணிக்கு ஒன்றுகூடும் சுமார் ஆயிரம் பெண்கள் இந்த சங்கமம் நிகழ்வில் பங்கேற்பார்கள்.

குடாநாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த பெண்கள் குழுக்கள் இந்த எழுச்சி நிகழ்வில் கலந்துகொண்டு பெண்கள் உரிமைகள், நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பெண் பிரதிநிதித்துவத்தின் அவசியம் என்பன குறித்து கோஷிப்பார்கள் - என்று பெண்கள் பண்பாட்டு மையத்தின் இணைப்பாளர் செல்வி ம.கிருஷ்ணவேணி தெரிவித்தார்.

இன்றைய நிகழ்வில் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வாழ்த்துரை வழங்குவார். பெண்கள் பண்பாட்டு மைய ஒழுங்கமைப்பாளர் சிவரதி ராஜ்குமார், அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் சு.தமிழினி ஆகியோரும் உரையாற்றுவர்.

கூட்டமைப்பின் ஒரேயொரு பெண் வேட்பாளரான பத்மினி சிதம்பரநாதன் கருத்துரை வழங்குவார். (ஐ-ரி-ரி)

# சமாதானத்தை ஐ.தே.முன்னணியே சரியாகக் கையாளும் எனக் கணிப்பு

## நாடு முழுவதும் நடத்தப்பட்ட ஆய்வில் தகவல்

கொழும்பு,மார்ச்20

தெற்கிலுள்ள பெரும்பான்மை மக்களின் முன் உள்ள முதல் இலக்கப பிரச்சினை நாட்டில் அமைதியைத் தோற்றுவிப்பதுதான். அந்தவகையில் இந்தப் பிரச்சினையைக் கையாளவதற்குத் தகுந்த கட்சியாக விளங்குவது ஐக்கிய தேசிய முன்னணியே. மிக அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பொன்றிலிருந்து இந்த விடயம் தெரியவந்துள்ளது.

வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்தக் கருத்துக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. ஏசிநில்சென் லங்கா (Ac nielsen Lanka (Pvt)Ltd) நிறுவனத்தின் ஆதரவில் ஓர்க்-மார்க்-ஸ்மார்ட் (org-Marg-Smart) அமைப்பினால் இந்தக்கருத்துக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு அமைதிமுயற்சி விடயத்தில் மேலதிக புள்ளிகள் இந்தக் கருத்துக்கணிப்பில் கிடைத்துள்ள போதிலும் பொருளாதார விடயத்தில் எதிர்மறையாகவே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துக்கணிப்பு எல்லா வயதினர் மத்தியிலும், பால், மதம், இனம், சமூக, பொருளாதார வேறுபாடற்ற முறையில் நடத்தப்பட்டு[illegible]




# பிரதேசவாதப் பிரசாரம் உறுதியைக் குலைக்காது!

## வேட்பாளர் ஸ்ரீகாந்தா நம்பிக்கை

வலி. தெற்கு, மார்ச்20

எப்போதோ கருகிச் செத்துவிட்ட பிரதேசவாதத்தை இப்போது மீண்டும் தோண்டி எடுத்து உயிர்ப்பூட்ட சில சக்திகள் முனைகின்றன. இதற்கு ஒரு போதும் இடமளிக்கக் கூடாது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் என்.ஸ்ரீகாந்தா.

சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான வீதியில் நடைபெற்ற தமிழ்க் கூட்டமைப்பின தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.குமாரவேல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தை தமிழரசுக் கட்சியினர் ஒழுங்கு செய்திருந்தனர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் கூட்டத்தின் மத்தியில் ஸ்ரீகாந்தா தொடர்ந்து கூறியதாவது:-

1956ஆம் ஆண்டு தந்தை செல்வாவின் தலைமையில் ஒன்றுபட்ட தமிழினம், அதுவரையில் நிலவி வந்த பிரதேசவாதக் கொள்கைகளைப் புதைத்துவிட்டது. இன்று அப்பிரதேசவாதத்தை தோண்டி எடுத்து உயிரூட்டி அதன் மூலம் தேசவிடுதலை இயக்கத்தை உடைப்பதற்கு அந்நிய அரசியல் சக்திகள் முயன்று வருகின்றன. ஆனால், தமிழினம் அசைந்துவிடாது; உறுதி குலைந்துவிடாது; தேசியத் தலைவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் கைவிட்டுவிடாது என்பதையும் ஆயிரமாயிரம் போராளிகளின் மண்டையோடுகள் சிதறிக்கிடக்கின்ற இந்த தமிழீழ மண்ணிலே தேசவிடுதலை பெறும்வரை வேறு எவ்வித சிந்தனைகளும் இருக்க மாட்டாது என்பதையும் தமிழ்மக்கள் இந்தத் தேர்தல் மூலம் உலகிற்கு எடுத்துக்காட்ட உள்ளார்கள்.

அமைதியான தீர்வு - சமாதானத் தீர்வு - எமது மண்ணில் எமது விவகாரங்களை நாங்களே கையாளக்கூடிய விதத்திலே, ஒரு சுயாட்சி அரசியல் தீர்வு பேச்சு மேசையில் சிங்களத் தேசத்தினால் முன்வைக்கப்படுமாயிருந்தால் அதனை விடுதலைப் புலிகள் இயக்கம் எமது மக்களின் நன்மை கருதி ஏற்றுக்கொள்ளத் தயாராக உளது.

எமது தலைவிதியை நாமே தீர்மானிப்போம் என்கிற எதிர்பார்ப்போடும் நம்பிக்கையோடும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வெற்றியை தேர்தல் மூலம் உறுதிசெய்துகொள்வோம் - என்று கூறினார்.

### பத்மினி உரை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெண்வேட்பாளரான திருமதி பத்மினி சிதம்பரநாதன் உரையாற்றுகையில் கூறியதாவது:-

பல்வேறு கட்சிகளாகப் பிரிந்து நின்ற நாம் இன்று ஒன்றுபட்டு நிற்கின்றோம். நாம் ஒரு தேசிய இனம். எமக்கெனத் தனியான தாயகம் உண்டு. விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள்; அவர்களோடு மட்டுமே பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும். அவர்களிடமே தன்னாட்சி அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்ற கொள்கைகளை வெளிப்படுத்தித் தேர்தலுக்கு முகங்கொடுத்துள்ளோம். எமது இக் கொள்கைகளைத் தமிழ்மக்கள் தேர்தல் மூலம் உறுதிப்படுத்தி உலகிற்குக் காண்பிக்கப்போகிறார்கள்.

இதனை ஒரு தேர்தலாகக் கொள்ளாமல் கருத்துக் கணிப்பாகவே கொள்ளவேண்டும்.

20 வருடகாலமாக எம்மீது திணிக்கப்பட்ட இராணுவ நெருக்கடிகளால் இழந்த தமிழ் மண்ணில் 70 வதமானவற்றை மீட்டுள்ளோம். இதன் மூலம் விடுதலைப் போரராளிகள் தமது இராணுவப் பலத்தை வெளிக்காட்டி உள்ளனர்.

தமிழ் மக்களுடைய விருப்பம், கருத்து, ஆணை என்பவற்றை உலகிற்குத் தெரியப்படுத்தி இராணுவப் பலத்தோடு அரசியல் பலமும் இணைந்து எமது உரிமைகளை வென்றெடுக்கும் பொன்னான நாளாக ஏப்ரல் இரண்டாம் திகதி அமையப்போகிறது - என்றார் பத்மினி.

### சொலமன் சிறில்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களில் ஒருவரான சொலமன் சிறில் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒரு பயங்கரவாதப் போராட்டம் எனக் கூறிவந்த சர்வதேச உலகம், அது பயங்கரவாதப் போராட்டமல்ல, தமிழ்மக்களின் உரிமைப் போராட்டமே என்பதை இன்று புரிந்துகொண்டுள்ளது. இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தமிழினம் ஒன்றுபட்டு நிற்கின்றது என்பதையும் புரிந்துகொண்டுள்ளது.

படைமுகாம்கள் தகர்ப்பு, ஓயாத அலைகள் 1, 2, 3 போன்ற பல போர்களை நடத்தி ஆயுதங்கள் பல அள்ளப்பட்டன; ஆனையிறவு, கிளிநொச்சி போன்ற நிலங்கள் கைப்பற்றப்பட்டன.

போர் ஓய்வின் மத்தியில் இடம்பெற்ற அக்கினிச் சுவாலையை சிங்களதேசம் நடத்த முற்பட்டபோது எல்லைப் படை வீரர்கள், துணைப்படை வீரர்கள் உதவியுடன் அவையாவும் முறியடிக்கப்பட்டன.

எமது தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவதன் மூலமே இத்தகைய வெற்றிகளைக் குவிக்க முடிந்தது. இராணுவ ரீதியிலும், ராஜதந்திர ரீதியிலும் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் செயற்பட்டு, தலைநிமிர்ந்து நிற்கும் தமிழினம் அரசியல் ரீதியிலும் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும். அதற்குரிய ஆணையை தமிழ் மககள் தேர்தல் மூலம் உறுதிப்படுத்தவேண்டும் - என்றார்.

(ஐ-152)



## 28 நாள்களில் 465 வன்முறைகள்

கொழும்பு,மார்ச்20

தேர்தலுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட கடந்த 17 ஆம் திகதிமுதல் கடந்த 15ஆம் திகதி வரையான 28 நாள்களுக்குள் நாட்டில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் 465ஆக அதிகரித்துள்ளன.

இவற்றுள் 371 சம்பவங்கள் குற்றச்செயல்கள் தொடர்பான சட்டமீறல் சம்பவங்களாகும். கடந்த 15ஆம் திகதி அதிகாலை 6 மணியோடு முடிவுற்ற 24 மணி நேரங்களில் மாத்திரம், தேர்தல் சட்டங்கள் மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பான சட்டமீறல்கள் உட்பட்ட 39 வன்முறைச் சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பொலீஸ் திணைக்களத்தின் வன்செயல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## கோப்பாயில் ஈ.பி.டி.பி. பிரசாரம்

கோப்பாய்,மார்ச்20

கோப்பாய் மத்தி, வடக்கு பகுதியில் ஈ.பி.டி.பியினர் இராணுவ, பொலீஸ் பாதுகாப்புடன் வீடு வீடாகச்சென்று தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களிலே இவ்வாறு அவர்கள் பரப்புரையில் ஈடுபட்டதைக் காணக் கூடியதாக இருந்தது. (ஐ-72)

# தேர்தல் பிரசாரத்துக்கு யானைகள் வேண்டாம்!

## சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கோரிக்கை

கொழும்பு,மார்ச்20

அரசியல் கட்சிகள் யானைகளைப் பிரசாரங்களுக்குப் பயன்படுத்துவதை சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கடுமையாக ஆட்சேபித்துள்ளனர். அரசியல் கட்சிகளின் பலத்தை வெளியில் காட்டுவதற்காகவல்ல, கோயில் திருவிழாக்களில் மட்டுமே யானைகள் பயன்படுத்தப்பட வேண்டும் என அவர்கள் கூறியுள்ளனர்.

சுற்றுச் சூழல் ஆர்வலரான சட்டத்தரணி ஜெகத் குணவர்தன இது பற்றி குறிப்பிடுகையில்-

பெரஹராக்களைத் தவிர வேறு எதற்கும் யானைகள் பயன்படுத்தப் படுவதை நாங்கள் விரும்பவில்லை என்றார்.

கடந்த காலங்களில் சில அரசியல் கட்சி ஆதரவாளர்கள் யானைகளைத் தமது பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியிருந்தமையை இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

# ஓட்டமாவடி தேர்தல் வன்முறைகளில் கண்ணீர்ப்புகை, குண்டாந்தடிப் பிரயோகம்

சுதந்திரக் கூட்டணியின் மட்டக்களப்பு முதன்மை வேட்பாளர் எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லா கடந்த புதனன்று தேர்தல் பிரசாரத்துக்கு ஓட்டமாவடிக்குச் சென்றபோது வன்செயல்கள் வெடித்தன. பாதுகாப்புப் படையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே மோதல் நடந்தன; கண்ணீர்ப்புகை, குண்டாந்தடிப் பிரயோகம் ஆகியவை நடந்தன; 15 பொதுமக்களும், படையினர் இருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் மூவர் ஆபத்தான நிலையில் பொலன்னறுவை வைத்தியசாலையிலும், 12 பேர் மாஞ்சோலை வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் ஹர்த்தால் நடந்தது. பிற்பகலில் ஹிஸ்புல்லாவும், அவரின் ஆதரவாளர்களும் தேர்தல் பிரசாரத்துக்கு அங்கே சென்றபோது வழிமறிப்பு மறியல் போராட்டம் நடந்தது. இதில் ஈடுபட்டவர்களுக்கும், படையினருக்குமிடையே மோதல் இடம்பெற்றது. கல்லெறியால் இரு இராணுவ வாகனங்கள் சேதமடைந்தன. இவற்றையடுத்தே கண்ணீர்ப்புகை, குண்டாந்தடிப் பிரயோகம் ஆகியவை இடம்பெற்றன.

சம்பவங்களை அடுத்து நிலவி வந்த பதற்றத்தைத் தணிக்க நேற்றுமுன்தினம் ஓட்டமாவடி பெரிய ஜும்மாப் பள்ளிவாசல் மண்டபத்தில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடந்தது.

வாழைச்சேனை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொடி மஹத்தயா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கல்குடா பள்ளிவாசல், முஸ்லிம் நிறுவனங்கள், சம்மேளனப் பிரதிநிதிகள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வீணான வன்முறைகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் எந்தத் தரப்பினரும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்துவதில்லை என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதனையடுத்து நேற்றுமுன்தினம் நடத்தப்படவிருந்த கண்டனப்பேரணி கைவிடப்பட்டது. தேர்தல்கள் தொடர்பான ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு சகல தரப்பினரும் பூரண ஒத்துழைப்புக்களை வழங்குவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-க)

# கட்சிகள் சார்பாக செயற்பட்ட 4 பொலீஸ் அதிகாரிகள் கைது

கொழும்பு,மார்ச்20

கட்சி சார்பாக நடப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் பொலஸ்நிலையப் பொறுப்பதிகாரிகள் நால்வருக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தேசிய பொலீஸ் ஆணைக்குழுவின் தலைவருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

குறிப்பிட்ட கட்சிகளுக்குச் சார்பாகச் செயற்படுவதாக ஏனைய கட்சிகளால் பொலீஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

பொலீஸ் அதிகாரிகள் தாங்கள் கடமைகளில் சரிவர ஈடுபட்டால் இவை போன்ற பிரச்சினைகள் எழமாட்டாது என்று பொலீஸ் அதிகாரிகள் சங்கம் தெரிவித்திருக்கிறது.

# வேட்பாளர்களின் சொத்து விவரங்களை வெளியிடுக!

## பொதுவளப் பாதுகாப்பு அமைப்புக் கோரிக்கை

கொழும்பு,மார்ச்20

பொது வளங்களைப் பாதுகாப்பதற்கான அமைப்பு ஏப்ரல் 2004 பொதுத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தமது சொத்து விவரங்களை வெளியிட வேண்டும் என்று கேட்டுள்ளது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான சட்டங்களின்படி, பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது சொத்துக்களின் முழு விவரங்களையும் தேர்தல் ஆணையாளரிடம் தெரிவிக்கவேண்டும். வெற்றியீட்டிய வேட்பாளர்கள், வேட்புமனுத் தாக்கல் செய்த திகதியிலிருந்து முதலாவது நாடாளுமன்ற அமர்வுக்கு இடைப்பட்ட காலத்திற்குள் தமது சொத்துவிவரங்களைத் தெரிவிக்கவேண்டும். மேலும் வெற்றி பெறாத வேட்பாளர்கள் தமது சொத்து விவரங்களை வேட்புமனுத்தாக்கல் செய்த திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாகத் தெரிவிக்கவேண்டும்.

சொத்து விவரங்களைத் தெரிவிக்காமல் இருப்பதும் அல்லது தவறான விவரங்களைக் கொடுப்பதும் சிறையில் அடைக்கப்படுவதுடன் கூடிய தண்டனைக்குரிய குற்றமாகும்.

தேவையான தொகையைச் செலுத்தித் தேர்தல் ஆணையாளரிடம் இருந்து பிரகடனப்படுத்தப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் விவரங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளைப்பெறும் உரிமை பொதுமக்களுக்கு உள்ளது. குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் அனைத்து வேட்பாளர்களும் தமது சொத்துவிவரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

மேற்கண்டவாறு பொது வளங்களைப் பாதுகாப்பதற்கான அமைப்புத் தெரிவித்துள்ளது. (ஐ)

# பதிவு செய்யாத மருந்தைக் கூடிய விலையில் விற்ற மருந்தகத்துக்கு ரூ.5 ஆயிரம் அபராதம்

## யாழ். நீதிமன்றம் விதித்துள்ளது

யாழ்ப்பாணம்,மார்ச்20

பதிவு செய்யப்படாத மருந்து ஒன்றை உரிய விலையிலும் பார்க்க கூடிய விலையில் விற்பனை செய்தமைக்காக யாழ். நகரிலுள்ள ஆங்கில மருந்து விற்பனை நிலையமொன்றிற்கு யாழ். நீதிமன்றம் 5ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

பெண் நோயியல் தொடர்பான சில ஓமோன் சுரப்பிகளை ஊக்குவிக்கப் பயன்படுத்தப்படும் 'கைனோ கோசிட்' (Gynaecosid) என்ற மருந்து அனுமதியின்றி கருச்சிதைவு செய்பவர்களின் பாவனைக்கென விற்பனை செய்யப்பட்டு வந்தது என்று மருந்தக உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. யாழ் மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் மருந்தகத்துக்கு எதிராக வழக்கைத் தாக்கல் செய்தார்.

கடந்த 15ஆம் திகதி இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மருந்தகத்தை 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டது.

இம் மருந்தினை அளவுக்கதிகமாக பாவிப்பதன் மூலம் கருச்சிதைவு ஏற்படுவதுடன் அது தவறும் பட்சத்தில் பிறக்கும் குழந்தை அங்கக் குறைபாடுகளுடன் பிறக்கும் எனவும் உணவுப் பரிசோதகரால் நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது. (ம-8-15)

### ஹெலஉறுமய பிக்குகளுக்கு கொலைப் பயமுறுத்தலாம்

கொழும்பு,மார்ச்20

தேர்தலில் போட்டியிடும் பௌத்த பிக்குகளுக்கு சில அரசியல் சக்திகளால் கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகவும் வேறு சிலர் போட்டியிலிருந்து விலகிக்கொள்ளும்படி எச்சரிக்கப்பட்டிருப்பதாகவும் ஜாதிக்க ஹெல உறுமயவின் தலைவர் டாக்டர் எல்லாவெல மெதானந்ததேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் கூட்டமொன்றில் கருத்து வெளியிட்ட மெதானந்ததேரர் புத்தபெருமான்கூட இவ்வாறு பயமுறுத்தப்பட்டுள்ளார் நாம் சரியான செயலையே மேற்கொள்கின்றோம். அதனால், எம்மை விமரிசிக்கும் ஏனைய பிக்குகள் பொது மக்கள் மீது தமக்கு எதிர்ப்பு ஏதும் கிடையாது என்றார். (ம)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட டாக்டர்கள் சிபார்சு செய்வது

றோயல் குளுக்கோஸ்

100/% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:-
Royal Industries, Colombo.
☎ 0112334603




ஏக விநியோகத்தர்கள்

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ :021 222 2567

சத்திரத்துச் சந்திக்கு அருகில் →


## சேரன் வாணிபம்

### பணிநிலை வெற்றிடம்

- பணிநிலை: வெதுப்பக உற்பத்தியாளர் - பயிலுநர் ஆண்
- தகைமைகள்: க.பொ.த.[சாதாரணதர] தமிழ், கணிதம் உட்பட 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- கொடுப்பனவுகள்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- பயிற்சிக்காலம்: 06 மாதங்கள்

☞ மேற்காணும் தகைமைகளை உடையவர்கள்-

❑ தேசிய அடையாள அட்டை

❑ பிறப்புச் சான்றிதழ்

ஆகிய ஆவணங்களுடன் 23.03.2004 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கீழுள்ள முகவரிக்கு நேரில் வருகைதருமாறு அன்புடன் வேண்டப்படுகிறீர்கள்.

அரஸ்கோ
இல.431, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(31-11-13) (C/33690)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



HAPPY BIRTHDAY

**20-03-2004**

யாழ்ப்பாணம் "லிண்டா லொஜ்" மாதகலைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பை தற்காலிக முகவரியாகவும் கொண்ட

**றோய் பிராங்கிலின் - ஜெனற்ஜஸ்ரலா**

தம்பதிகளின் செல்வப் புதல்வி

# றெனுஜனா

அவர்கள் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (20.03.2004) சனிக்கிழமை தனது இல்லத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், சித்தி, அக்காமார், தம்பி, மச்சான், உற்றார், உறவினர்கள் அனைவரும் இறையருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

10ஆம் வட்டாரம்,
(அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு முன்பாக)
மு/புதுக்குடியிருப்பு.

தகவல்:
தந்தை
மாசிலாமணி றோய்

(29639)(26-11-13-31)

## NORGES HINDU KULTUR SENTER

### நோர்வே இந்து கலாசார மன்றம்

### சிவாச்சாரியார் (குருக்கள்) தேவை

நோர்வேயில் (OSLO) அமைந்துள்ள சிவசுப்பிரமணியர் ஆலயம், இலங்கையில் இருக்கும் குருமார்களுக்கு நோர்வேயில் சேவையாற்ற ஒரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்ற நல்நோக்குடன் அடுத்த தடவைக்கான சிவாச்சாரியர்களுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகள் உடையவராக இருத்தல் வேண்டும்.

- சிவாச்சாரியார் குருக்களாக இருத்தல் வேண்டும்.
- ஆச்சாரிய அபிஷேகம் பெற்றவரும், சிவாகம முறைப்படி சகல அபிஷேக பூசைகளும், உற்சவம் மற்றும் அனைத்து ஏனைய கிரியைகளும் தனித்து செய்யக் கூடிய தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.
- ஆகக்குறைந்தது ஐந்து (5) வருட காலம் பிரதம குருக்களாக சேவை செய்திருத்தல் வேண்டும்.
- வயது முப்பத்தைந்துக்கு (35+) மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- இச்சேவை குடும்பத்துடன் அல்லாது சேவையாற்ற வேண்டும்.
- சமய சொற்பொழிவுகள், பிரசங்கங்கள் செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- சமயம் கற்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
- பதவிக்காலம் ஆகக்கூடியது ஒரு வருடம்.
- தகுந்த வேதனமும், தங்குமிட வசதியும் செய்துகொடுக்கப்படும்.

தகுதியுடையவர்கள் ஆகமம் பயின்ற இடம், பணிபுரிந்த இடங்கள் மற்றும் ஏனைய நற்சான்றிதழ்கள், முழுப்படமும், பாஸ்போட் (PASS PORT) பிரதியையும் இணைத்து கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு 20.04.2004இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**"APPLICATION 2004"
SECRETARY,
NORGES HINDU CULTURE CENTER,
POST BOX: 85, GRURUD,
0905 OSLO,
NORWAY.**

தொடர்புகளுக்கு:

தலைவர்: +4722163786/+4799104659
செயலாளர்: +4722212735
FAX: +4767972694

(சி33662)(39-13-11-31)


## வெளிவந்துவிட்டது

தரம் 5 புலமைப்பரிசில் 2004 பரீட்சைக்கான அடிப்படை அறிவும் பயிற்சியும்

கே.ரி. அம்பிகைபாகன் B.Ed.

மொழிவளம் - இ.க.சிவஞானசுந்தரம் M.A.
கட்டுரைப்பேழை - இ.க.சிவஞானசுந்தரம் M.A.
தமிழ் (புலமைக்கானது) - இ.க.சிவஞானசுந்தரம் M.A.

கடந்தகால தரம் 5 பரீட்சை வினாவிடைகள் (தென்றல்)

(29521)(31-11-13)


உ

## பூப்புனித மங்கள நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் பங்குனி 8 ஆம் நாள் நாளை (21.03.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 6.48 மணிமுதல் 8.24 மணிவரை வரும் சுபமுகூர்த்த நல்வேளையில் எமது ஏக புத்திரி திருநிறை செல்வி



# பிரிந்தினி



அவர்களுக்கு

பூப்புப்புனித மங்கள நீராட்டுவிழா நடத்த இறையருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசமேதராய் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
திருமதி N.இராசதுரை (குலசிங்கம்)
விமலராணி குடும்பத்தினர்.

பிளாக் வீதி, சங்கானை. (29716)(34-11-13-31)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து,




அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த வரும் பிரான்ஸை வசிப்பிடமாகக் கொண்ட வரும் *உதயகுமார் - சுதர்சனா* தம்பதியினரின் செல்வப்புதல்வன்

# ஜனார்த்தன்

தனது பிறந்தநாளை அச்சுவேலி வடக்கில் உள்ள தனது இல்லத்தில் 20.03.2004 அன்று வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.



'பாரினில் நிமிர்ந்து பைந்தமிழ் பயின்று
கனிவளம் வளர்த்து கலைகளில் சிறந்து
நற்பெயருடன் திகழ்ந்து · பெற்றோர்
பெருமையைப் போற்றிடவே' ........

காளியின் திருவருள் கொண்டு வாழ்த்திடும்!



அப்பா (பிரான்ஸ்), அம்மா, அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மப்பாமார், அம்மம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், { அண்ணா, மச்சாள், மச்சான்,(பிரான்ஸ்)}

தகவல்:-
திரு,திருமதி பூவிலிங்கம்.
(பேரப்பெற்றோர்)
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

(29781)

## யாழ்ப்பாணத்தில் விரைவில்.... பங்குச்சந்தை நிறுவனத்தின் கிளை

யாழ்ப்பாணம்,மார்ச்20

கொழும்பு பங்குச்சந்தை நிறுவனம் யாழ்ப்பாணத்தில் கிளை அலுவலகம் ஒன்றைத் திறக்கவுள்ளது.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள கட்டடம் ஒன்றில் இந்த அலுவலகம் திறக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பலர் பங்குச்சந்தை வர்த்தகத்தில் நாட்டம் கொணடுள்ளதையடுத்து அந்த அலுவலகம் இங்கு திறக்கப்படுகின்றது.

தற்சமயம் பங்குச்சந்தை வர்த்தகத்தை யுரோவில் நிறுவனம் மட்டும் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டு வருகின்றது.

இந்த அலுவலகம் திறந்த பின் ஐந்து பங்குமுகவர்கள் இந்த அலுவலகத்தில் பணிபுரிவர். யுரோவல் நிறுவனமும் இதில் ஒன்றாகச் செயற்படும்.

பெரும்பாலும் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் இந்தக்கிளை அலுவலகம் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-3)

## சித்தமருத்துவம் சீர்பெற உதவும் சிவா நறுமணப் பூங்கா நிறுவனம்

சித்தமருத்துவம் எமது பாரம்பரிய வைத்திய முறையாகும். பக்க விளைவுகளை ஏற்படுத்தாது. நோய் தீர்க்கும் மருந்துகளாக சித்த ஆயுர்வேத மருந்து வகைகள் கருதப்படுகின்றன. இந்த மருந்துகள் உடற் கூறுகளுக்குள் நுழைந்து நோய்க் கிருமிகளை அடியோடு அழித்து நோயை முற்றாக நீக்குகின்றன. இவற்றுக்கு அடிப்படையாக உள்ளவை மூலிகைகள் ஆகும்.

முன்னர் மூலிகைகள் நமது வாழ்க்கைமுறையோடு, உணவுப் பழக்கத்தோடு ஒன்றியிருந்தன. அப்போது பெரும்பாலான மூலிகைகள் நமது சுற்றாடலிலேயே பெறக் கூடியவையாக இருந்தன. இன்றைய உலகில் எமது வாழ்க்கைமுறைகள் மாறிவிட்டன. ஆனாலும் சித்த ஆயுர்வேத மருத்துவத்திற்கு நம்மிடையே மதிப்புகுறைந்து விடவில்லை. ஆனாலு சித்த ஆயுர்வேத மருத்துவச் சிகிச்சைக்குத் தேவைப்படும் மூலிகைகள் கிடைப்பது அரிதாகவுள்ளது.

இந்த நிலையைப் போக்கி சித்த ஆயுர்வேத மருத்துவத்தின் பயனை குடாநாட்டு மக்கள் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளவர் "சிவா நறுமணப்பூங்கா" உரிமையாளர் குருநாதசிவம்.

**சீராளன்**

உடலில் ஏற்படுகின்ற பல்வேறு உபாதைகளுக்கும் பொருத்தமான தரமான ஒளஷதங்களைக் கண்டு பிடித்து வழங்குவதில் இவர் வெற்றி கண்டுள்ளார். காய்ச்சல், சளி, அஜீரணம், தலைவலி, வயிறு சம்பந்தப்பட்ட உபாதைகள் போன்றவற்றுக்கு கைகண்ட ஆயுர்வேத மருந்துகள் சிவா நறுமணப் பூங்காவில் விற்பனையாகின்றன.

கடந்த யுத்தகாலத்தில் அத்தியாவசியப் பொருள்களை தென்னிலங்கையிலிருந்து வடபகுதிக்கு எடுத்து வருவதில் பாரிய இடையூறுகளை எதிர்கொள்ள நேரிட்டது. அந்தவேளையிலும் பிறஇடங்களிலிருந்து சித்த ஆயுர்வேத மருந்துவகைகளை குடாநாட்டுக்கு கொண்டுவந்து விநியோகிக்கும் பணியை நிறைவாக சிவா நறுமணப்பூங்கா நிறைவேற்றியது. இங்குள்ள சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளும் மருந்து விற்பனை நிலையங்களும் அப்போது இதனால் பயனடைந்தன. தனது பணியைத் தற்போது சிவா நறுமணப் பூங்கா மேலும் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

இதில் ஒரு நடவடிக்கையாக சித்த ஆயுர்வேத மருந்துகளை உற்பத்தி செய்யும் 'பிமல்' நிறுவனத்தின் தயாரிப்புகளுக்கு யாழ்.மாவட்ட ஏக விநியோக உரிமை சிவா நறுமணப் பூங்காவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

வெறும் விற்பனை நோக்கோடு மட்டும் நின்றுவிடாது சிவா நறுமணப் பூங்கா ஆயுர்வேத மருந்துகள், மூலிகைகள குறித்த பரப்புரைகள் மற்றும் கருத்தரங்குகள், கண்காட்சிகள் போன்றவற்றை நடத்தி வருகின்றது.

இந்தவகையில் வியாபாரநோக்கோடு நின்றுவிடாது ஆயுர்வேத மருத்துவத்துறைக்கு சிவா நறுமணப் பூங்கா ஆற்றிவரும் சேவை பாராட்டுக்குரிய ஒன்றேயாகும். ★




**சிவா நறுமணப் பூங்காவின் ஆதரவில் நடத்தப்பட்ட ஆயுர்வேத மருந்துகள், மூலிகைகள் பற்றிய கண்காட்சியில் மருந்துகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.**

## வாடிக்கையாளர்களின் செயற்பாட்டிலேயே வங்கிச்சேவையின் வளர்ச்சி தங்கியுள்ளது

### மக்கள் வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

தென்மராட்சி,மார்ச்20

வங்கிச் சேவையின் வளர்ச்சி வாடிக்கையாளர்களின் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது.

மக்களின் சேவைக்கென வங்கிகள செயற்படுகின்றதனால் மக்கள அதனை உரிய முறையில் பயன்படுத்தி தமது பொருளாதாரத்தை வளம்படுத்த முடியும். இந்த நிலையில இங்கு ஆரம்பிக்கப்படும் நடமாடும் கருமபீட அலுவலகம் இப்பிரதேச மக்களின் செயற்பாடுகளினால் விரைவில் கிளை அலுவலகமாக மாறுவதற்கு வழிவகுக்கும்.

- இவ்வாறு கொடிகாமம் நகர்ப் பகுதியில் கடந்த வெள்ளியன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட சாவகச்சேரி மக்கள் வங்கியின் விசேட கருமபீட அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் சி.இளம்பிறைநாதன் தெரிவித்தார். அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தென்மராட்சி கிழக்குப் பிரதேச பொது அமைப்புக்கள், கொடிகாமம் பகுதியில் மக்கள்வங்கிக் கிளை அமைக்குமாறு எமது தலைமைப் பீடத்தினைக் கேட்டிருந்தன. வங்கிக் கிளையினை ஆரம்பிப்பதற்கு பலின அனுமதி பெறவேண்டியதால் இங்கு கிளை ஆரம்பிப்பதற்கு காலம் செல்லலாமென கருதிக் கொண்டு சாவகசசேரி மக்கள்வங்கியின் நடமாடும் விசேட கருமபீடத்தினை இங்கு நடத்துவதற்கு அனுமதி பெற்று ஆரம்பித்துள்ளோம்.

இந்த விசேட கருமபீட அலுவலகத்தினை மக்கள்வங்கியின் கிளை அலுவலகமாக மாற்ற தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக்களும், பொது அமைப்புக்களும் தமது வங்கிச் செயற்பாட்டினை அதிகரிக்க வேண்டும். அவ்வாறு அதிகரிக்கும் பட்சத்தில் விரைவில் கிளை அலுவலகம் திறக்க முடியும்.

இங்கு கிளை அலுவலகம் திறக்கும் வரை நடமாடும் அலுவலகம் தினமும காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணிவரை இயங்கும். விசேட கருமபீட அலுவலகமாக இயங்கினால் சாவகச்சேரி மக்கள் வங்கியினால் மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்பாடுகளும் மக்களுக்கு கிடைக்கும் - என்றார்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் உரையாற்றுகையில்:-

கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தவென ஆரம்பிக்கப்பட்ட வங்கிகள் தற்போது போட்டிகள் நிறைந்த நிலையில் மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கி வருவதைக் காணமுடிகிறது.

மேற்குலகீ நாடுகள் போல் எமது நாடு சந்தைப்படுத்தலில் வளர்ச்சியடையாததால் வங்கிகளின் தேவை மக்களுக்குத் தெரிவதில்லை. ஆனால், தற்போதைய காலகட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த ஒவ்வொரு குடும்பமும் வங்கியின வாடிக்கையாளர்களாக உள்ளனர். அந்த வாடிக்கையாளர்களின் தேவைகளை இணங்கண்டு அவற்றினை பூர்த்தி செய்து ஊக்குவிக்கும் நோக்கத்துடன் யுக்திகளை வங்கிகள் வகுக்கவேண்டும்.

அவ்வாறு புதிய யுக்திகளை புகுததும்போது வாடிக்கையாளர்களும் தமது தேவைகளுக்கு வங்கிகளை நாடுவர். இதனால், கவனிக்கப்படாமல் உள்ள தேவைகளுக்கு பரிகாரம் காணப்பட்டு வாடிக்கையாளர்களின் தேவைகளுடன் வங்கிகளின் நோக்கங்களும் நிறைவேறும் - என்றார்.

சாவகச்சேரி மக்கள்வங்கி முகாமையாளர் க.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மக்கள வங்கியின் வன்னி - யாழ். பிராந்திய முகாமையாளர் க.சிவபாதவிருதயர், பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க.ஆனந்தராசா, பளை பிரதேச சபைச்செயலாளர் கு.ந.பாலச்சந்திரன ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (எ-31-117)

## வர்த்தக சங்கங்களுக்கு இடையில் நல்லுறவைப் பேணுவதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

வர்த்தகம் மூலம் சமாதானத்தை எட்டும் திட்டத்தின் கீழ் மாவட்டங்களில் செயற்படும் வர்த்தக சங்கங்களுக்கிடையில் நல்லுறவையும் அபிவிருத்தியையும் மேற்கொள்ள திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இலங்கையின சகல பாகங்களிலும் செயற்படும் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்று கூடி இத்திட்டத்தை முன்னெடுக்கவிருக்கின்றனர்.

பிரதமரின் அலுவலகத்தினரும் ஐநா அபிவிருத்தித்திட்டத்தினரும் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

மாவட்டங்களில் வர்த்தக முதலடுகளை ஊக்குவிப்பதும் அதன் மூலம் சமாதானத்தை எட்டுவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் இந்தவாரம் இடம்பெறும் இது தொடர்பான செயலமர்வில் சகல மாவட்டங்களிலும் உள்ள வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். (எ-3)

**தொழில் வளம்**

## உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்தி குறைந்த செலவில் வீடமைப்புப் பணிகள்

## சி.எச்.எவ். நிறுவனம் அறிமுகம் செய்தது

யாழ்ப்பாணம்,மார்ச்20


உள்ளூர் மூலவளங்களைப் பாவித்து குறைந்த செலவில் வீடமைக்கும் தொழிலநுட்பத்தை சி.எச்.எவ். என்ற அமெரிக்க அரச சார்பற்ற நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் வீடுகளைத் திருத்திப் புனரமைப்பதற்கென மேற்படி நிறுவனத்துடன் கலநதுரையாடல் ஒன்றை நடத்தியிருந்தது. அக்கலந்துரையாடல்களின் பயனாக இந்த நிறுவனம் கடந்த வருடம் ஜூலை மாதம் யாழ்ப்பாணத்தில் அலுவலகம் ஒன்றைத் திறந்து தன் பணியை ஆரம்பித்தது.

குடாநாட்டில் உள்ள நலன்புரி நிலையங்களில் 21 நிலையங்களில் தங்கியுள்ள 679 குடும்பங்களுக்கு வீடமைத்துக்கொடுக்க இந்நிறுவனம் முன்வந்தது. 432குடும்பங்களுக்கான இருப்பிட வசதி செய்யப்பட்டது எஞ்சிய குடும்பங்களுக்கு வீடுகள் திருத்த உதவி செய்யப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பும் போது இந்த வீட்டை பாகம் பாகமாக எடுத்துச சென்று வீடு ஒன்றை அமைக்கக்கூடியதாக இந்த வீடு வடிவமைக்கப்பட்டுள்ளது. குறைந்த செலவில் உளளூர் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி வீடு அமைக்கும் தொழில்நுட்பத்தை இந்த நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஐந்து மாதிரி வீடுகளை யாழ், பொம்மைவெளியில் அமைத்துள்ளது.

'ஹலோ ரஸ்ட்'நிறுவனம் கண்ணிவெடி அகற்றும் போது அகழப்படும் மணல் கண்ணியை கண்டுபிடிக்கும் இயந்திரத்தில் இடப்படும் பின்னர் அதனிலிருந்து கிடைக்கும் கழிவு மண்ணையும் சிமெந்தையும் கலந்து 'கொங்கீறீட்' கல் உற்பத்தி செய்யப்படுகின்றது. நல்ல திடமான செங்கட்டி போன்ற அந்தக்கல் ஒன்றின் பெறுமதி ஆறு ரூபா . அத்துடன், சிமெந்தையும், வைக்கோல் தூசையும் சேர்த்தும் இது போன்ற கல் தயாரிக்கப்படுகின்றது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் கல், வீடுகள் அமைக்கப் பயன்படுத்தப்படும்.




நான்கு வகையான வீடுகள் இவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒரு அறையுடைய வீடு 51 ஆயிரம் ரூபாவிலும், 2 அறையும், வராந்தாவும் உடைய வீடு 91 ஆயிரம் ரூபாவிலும்- 2 அறை, வராந்தா, குசினி ஆகியன உடைய வீடு ஒரு லட்சத்து 28 ஆயிரம ரூபாவிலும், மூன்று அறைகள், குசினி ஆகியன உடைய வீடு 1லட்சத்து 50 ஆயிரம் ரூபாவிலும், மூன்று அறைகள், ஒரு வராந்தா, குசினி ஆகியன உடைய வீடு 2 லட்சத்து 9 ஆயிரம் ரூபாவிலும் அமைக்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். - கோவில் வீதியில் உள்ள தமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இந்த மாதிரி வீட்டை எவரும் பார்வையிடலாம் என்று அந்த நிறுவன அதிகாரியான எஸ்.கைலைநாதன் தெரிவித்தார். (எ-3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 15 - 06 - 1920



உதிர்வு 20 - 02 - 2004

### திருமதி சின்னப்பு அன்னம்


அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரம ராய் பாசத்தின்
உறைவிடமாய் எம்மையெல்லாம் வாழ்வாங்கு
வாழவைத்த அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டு பிரிந்தாலும் உங்கள்
நினைவுகள் எம்மை விட்டு என்றும் பிரியாது.

பதிவாளர் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (29816)(37-12-19-21)

பிரிவால் துயரும்
சின்னத்துரை குடும்பம்
இராமலிங்கம் குடும்பம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 - 03 - 1933



மறைவு 01 - 04 - 2004

### அமரர் மார்க்கண்டு துரைராஜா

திதி: அமாவாசை

வையகத்தில் வாழ்வாங்கு வாழ வைத்த தந்தையே!
தந்தை என்ற சொல்லுக்கு தரணியில் நீங்களே!
பாசத்தின் பிறப்பிடமாய் நேசத்தின் இருப்பிடமாய்
சொல்லில் கனிவும் உங்கள் கம்பீரமும்
என்றும் எம்முள்ளே நிழலாய் நிற்கிறதே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்:
அன்புக் குடும்பத்தினர்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (29801)(34-12-19-21)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 - 11 - 1945



மறைவு 20 - 03 - 2003

### அமரர் மூத்ததம்பி குணசிங்கம்

திதி: துதியை 07.04.2004

அன்புத் தெய்வமே! ஆண்டு ஒன்று கடந்தாலும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் "அப்பா" என்று அழைக்க உறவு
ஒன்று இல்லையே! உங்கள் பிரிவு எங்களை வாட்டுகின்றது
இறைவன் உங்களைத் தன்னுடன் அழைத்தாலும் உங்கள்
நினைவு என்றும் எங்கள் மனதைவிட்டு நீங்காது.

07.04.2004 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

உங்கள் ஆத்மா சாந்திபெற
பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
அன்புத் தாய், சகோதரங்கள்.

132, குமரபுரம்,
பரந்தன். (29756)(34-12-19-21)

## நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

சி.கா.செந்திவேல் எழுதிய 'வட புலத்துப் பொதுவுடைமை இயக்கமும தோழர் கார்த்திகேசனும்' நூல் அறிமுக அரங்கு இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பனிப்புலம், காலையடி மறுமலர்ச்சி மன்ற அமரர் ஆறுமுகம் கந்தசாமி ஞாபகார்த்த கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் அறிமுகவுரையை சட்டத்தரணி சோ.தேவராஜாவும் சிறப்புரையை தோழர் சி.கா.செந்திவேலும் நிகழ்த்தவுள்ளனர். (ஒ-10)

## விஞ்ஞான ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்20

வலிகாமம் கல்விவலய விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கு இன்று சனிக்கிழமை நடத்தப்படவிருந்த விஞ்ஞானமும் - தொழில்நுட்பவியலும் தொடர்பான விசேட செயற்திட்டச் செயலமர்வு, தேர்தல் விளக்கக் கூட்டம் காரணமாக இன்று நடைபெறாது என அறிவிக்கப் பட்டுள்ளது.

இச்செயலமர்வு எதிர்வரும் 27ஆம திகதி சனிக்கிழமை நடைபெறும் என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளா திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார். (ஐ-8)

## அராலியில் நாள் சந்தை

வட்டுக்கோட்டை,மார்ச்20

அராலி மத்தி சமுர்த்தி செயலணியின் சமுர்த்தி நாள் சந்தை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி சந்தைப்படுத்தல் பிரிவின் செயற்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நாள் சந்தையின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகனறாஸ் கலந்துகொண்டு நாள் சந்தையை ஆரம்பித்துவைத்தார்.

இச்செயற்திட்டத்தின் மூலம் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் வியாபாரிகள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பெரிதும் பயன்பெறுவர் என்றும் - இதுவரை காலமும் இரண்டு மைல்கள் சென்றே சந்தையில் பொருளகளைக் கொள்வனவுசெய்து வந்த இப்பகுதி மக்கள் நாள் சந்தை அமைக கப்பட்டதனால் பெரிதும் பயனடைவர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.(ஒ-161)

## மரண அறிவித்தல்

### விசுவலிங்கம் சுப்பிரமணியர்



புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் No.06, செட்டித்தெரு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட புங்குடுதீவு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயில் பிரதமகர்த்தா விசுவலிங்கம். சுப்பிரமணியர் (பாட்டுக்காரப் பராசர்) 18.03.2004 காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
No.06,செட்டித்தெரு, யாழ்ப்பாணம். (29798)(26-19-12-21) சு.பாலசுப்பிரமணியம் (மகன்).

## முதலாம் ஆண்டு நிறைவில்
### நினைந்துருகுகின்றோம்.......

மண்ணில் விழுதாக 14 - 05 - 1927



மறைவில் ஒளியாக 01 - 04 - 2003

### அமரர் வடிவேலு கண்டு

வழிகாட்டியாய் நின்று ஒளியூட்டினீர்கள் - அம்மா
வரலாறாய் நாம் உயர உரமூட்டினீர்கள்
காலனவன் உமைக் கவர்ந்ததாலே - இன்று
கண்ணீரால் நாம் தேம்புகின்றோம்.

இன்று 20.03.2004 எமது இல்லத்தில் நடைபெறும் எமது அன்புத் தாயாரின் ஓராண்டு நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு எமது குலதெய்வத்தின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"பரிமளவாசம்"
கொற்றாவத்தை. (29792)(37-12-19-21)

- குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தாயின் மடியில் 22 - 07 - 1952



இறைவன் அடியில் 19 - 02 - 2004

### அமரர் செல்லத்துரை நாகராசா (கிளி)

பாரினிலே எம்மை அன்பு நீருற்றி
பாசமழை பொழிந்து நிழல் தந்த
அன்பு அப்பா நீங்கள் பலகாலம் எம்முடன்
வாழ்வீர்கள் என்றிருந்தோம் தீயதொன்றும்
நினைக்காத மனங்கொண்ட உங்களுக்கு
தீயதொரு நோய்தான் வந்து உறுத்தியதேன்?
அப்பா! நீங்கள் அதிககாலம் இருக்க முதல் காலன்
வந்து கவர்ந்துவிட்டான்! அம்மா கதறுவதும்
அப்பா! நாம் கத்துவதும் உங்கள் அம்மா,
சகோதரர்கள் 'ஐயோ' எனக்கத்துவதும்
உங்கள் செவிகளில் விழவில்லையா அப்பா?
நீங்கள் எம்மை விட்டு நெடுந்தூரம் சென்றனையோ?
தென்றலாய் வந்தெமக்குத் தெளிவான பதில் சொல்லப்பா?

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு பலவழிகளில் உதவிபுரிந்தவர்களுக்கும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (20.03.2004) சனிக்கிழமை முற்பகல் 10.00மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப்பிரார்த்தனை நிகழ்விலும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அடைக்கின்றோம்.

பாடசாலை வீதி,
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (29783)(37-12-19-21)

- குடும்பத்தினர்.

தேசியத் தலைவராகப் பிரபாகரனை ஏற்று

# அன்னை பூபதி உயிர்விட்ட மண்ணில் பிரதேசவாதம் பேசி ஏமாற்றமுடியாது!

## கவிஞர் புதுவை இரத்தினதுரை தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,மார்ச்20

தேசியத் தலைவராகப் பிரபாகரனை ஏற்றுக்கொண்டு அன்னைபூபதி உண்ணாவிரதம் இருந்து உயிர்விட்ட மண்ணில் பிரதேசவாதம் பேசி எவரும் ஏமாற்றிவிடமுடியாது.

- இவ்வாறு உறுதிபடக் கூறினார். தமிழீழக் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை.

போராளிக் கவிஞர் அம்புலியின் 'மீண்டும் துளிர்க்கும் வசந்தம்' நூல் அறிமுகவிழா யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. அப்போது அந்த நிகழ்வில் அறிமுகவுரையாற்றியபோதே கவிஞர் புதுவை இரத்தினதுரை மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் 25 வருடகால விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் எதிர்வரும் தேர்தல் அமையப்போகிறது.

தமிழ்த்தேசியத்தை வலியுறுத்தும் வகையில் இடம்பெறும் இத்தேர்தலில தமிழ்த்தேசியத்துக்கு எதிரான தீய சக்திகள் நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்பினைத் தமிழ்மக்கள் உருவாகக் கூடாது.

சமாதானக் காலத்தில் தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை வலுவிழக்கச் செய்யப் பல அந்நியசக்திகள் முயற்சிக்கின்றன. அதில் சில வெற்றிகளையும் அவை கண்டுள்ளன.

கிழக்கு மாகாண நெருக்கடி என்பது ஒரு பெரிய விடயமல்ல. தமிழ் மக்கள் எல்லாநிலைமைகளையும் விளங்கிக்கொள்வார்கள்.

கிழக்குமாகாண மண்ணில் விடுதலைப் போராட்டத்தில் வித்தாகிப்போன மாவீரர்களின் ஆன்மாக்கள் தமிழ்மக்களின் வாழ்வில் புது வழி காட்டி நிற்கின்றன என்றார் அவர்.

இந்த நிகழ்வில் மதிப்பீட்டுரை நிகழ்த்திய எழுத்தாளர் தாமரைச் செல்வி கூறியதாவது:-

கவிதைகள் இலகுவாக மக்களைச சென்றடையக்கூடியன. இவறறில் காலத்தைவென்று நிற்கக்கூடிய இலக்கிய படைப்புக்களை மக்களே தர்மானிக்கின்றனர். ஈழத்துக்கவிதைகளுக்கு எழுச்சி தந்த காலமாகப் போர்க்காலம் அமைந்திருந்தது.

போர்க்காலத்தில் எழுதிய 'மரணத்தில் வாழ்வோம்' என்ற கவிதைத் தொகுதி இன்றுவரை பேசப்படுகிறது. அவலங்களின் வெளிப்பாடாக கவிதைகள அமையும்போது வாசகர்களினால் அது பேசப்படும், நிலைத்து நிற்கும் நிலை காணப்படுகிறது.

எமது விடுதலைப் போராட்டம் மூலம் நல்ல இலக்கியப் படைப்புகள் பிறந்துள்ளன.

ஒரு போராடும் தேசத்தின் மக்களின உணர்வுகள், அவலங்கள் என்பவறறை வெளிப்படுத்தும் ஆவணமாக இலக்கியப படைப்புகள் திகழ்கின்றன - என்றார் அவர். (ஒ-ரி)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கான

# விசேட அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ்.பல்கலைக்கழகக் கலைப் பீடத்தின் 2004 ஆம் கல்வியாண்டுக்கான விசேடபாட அனுமதியில் தாம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் - தமது பாதிப்பை அகற்ற வழிசெய்யுமாறும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாண்டிற்கான விசேடகற்கை நெறிகளுக்கான தெரிவில் யாழ். மாவட்ட மாணவர்கள் சுமார் 90 பேர் பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ளனர் என்று அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கையளித்த முறைப்பாட்டு மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்தவருடங்களை விட இவ் வருடத்துக்கான தெரிவில் யாழ். மாவட்ட மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தமது மகஜரில் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிடம் சாதகமான பதிலைப் பெறுத்தருமாறும் அவர்கள் அந்த மகஜரில் கோரியுள்ளனர்.

இதேவேளை -

பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரையும் இன்று சனிக்கிழமை காலை 11 மணிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் முன்பாக ஒன்று கூடுமாறு கேட்கப்படடுள்ளது. (ஒ-8-7-9)

# கோவிலாக்கண்டியிலிருந்து காலை பாடசாலை பஸ்சேவை நடத்துக!

## அப்பகுதி மாணவர் கோரிக்கை

தென்மராட்சி,மார்ச்20

பாடசாலை பஸ்சேவை இல்லாததால் தென்மராட்சி தெற்கு மாணவர்கள் சிரமங்களை அனுபவிக்க நேரிடுவதாகக் கூறப்படுகிறது.

நாவற்குழி - கோவிலாக்கண்டியலிருந்து தினமும் காலை 7.35 மணிக்குப் புறப்படும் பஸ்ஸிலேயே பாடசாலை செல்லும் மாணவர்கள் பயணிக்க வேண்டியுள்ளது. இந்த பஸ் சேவை பொதுச்சேவையாக நடத்தப் படுகிறது.

இந்தச் சேவையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் சிறிய ரக பஸ் ஒன்றே ஈடுபடுத்தப்படுகிறது. இந்த பஸ் கோவிலாக்கண்டி கடற்கரையில் புறப்படும்போதே பயணிகளால் நிறைந்துவிடுகிறது. இதனால், இடைவழியில் காத்திருக்கும் மாணவர்கள் பஸ்ஸில் ஏறமுடியாத நிலையில் உள்ளனர். அதனால் அவர்கள் நாவற்குழிச் சந்திவரை நடந்து பிரதான வீதியூடாகச் செல்லும் பஸ்களில் ஏற வேண்டிய நிலையில் உள்ளனர்.

ஆகவே, தினமும் காலை 7.35 மணிக்கு கோவிலாக்கண்டி கடற்கரையில்ருந்து புறப்படும் பஸ்சேவையினை பாடசாலைச் சேவையாக மாற்றுமாறு அப்பகுதி மாணவர்களும் பெற்றோர்களும் கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# குடாநாட்டு அபிவிருத்தித் திட்ட வேலைகளுக்கு நிதிஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,மார்ச்20

இந்த ஆண்டுக்கான துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் குடாநாட்டு அபிவிருத்திப் பணிகளுக்கென நிதி ஒதுககப்பட்டுள்ளதாக உள்ளூராட்சித் திணைக்கள யாழ். பிராந்திய ஆணையாளர் கே.இராசையா தெரிவித்துள்ளார்.

வேலைத்திட்டங்களின் அடிபபடையில் ஒதுக்கப்பட்ட நிதித்தொகையின் விவரம் வருமாறு:-

வீதிப் புனரமைப்பு - 4 கோடி ரூபா, மருதங்கேணி சந்தை - 20 லட்சம் ரூபா, வல்வெட்டித்துறை நகரசபைச் சந்தை - 42 லட்சம் ரூபா, சுன்னாகம பொதுச் சந்தை - 10 லட்சம் ரூபா, சரசாலை பொதுநூலகம் - 75லட்சம் ரூபா, வேலணை துறையூர்ச் சந்தை - 6 லட்சம் ரூபா, சாவகச்சேரிச் சந்தை - 30 லட்சம் ரூபா, தெல்லிப்பழைச் சநதை - 30 லட்சம் ரூபா, முன்பள்ளிகளுக்கான தளபாடங்கள் வழங்குதல் - 2 கோடி ரூபா.

இவ்வேலைத் திட்டங்கள் யாவும் துரிதகதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று உள்ளூராட்சித் திணைககள ஆணையாளர் தெரிவித்தார். (ஒ-ரி)

### கணனிகள் அன்பளிப்பு

கோப்பாய்,மார்ச்20

இரண்டாம்நிலைக் கல்வி அமைசசின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு 20 கணனிகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றின் மூலம் கல்லூரியில் கணனிப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ-10-72)

### விரிவுரையாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கில பாடத்தைக் கற்பிப்பதற்கு பிரிட்டனில் தங்கியுள்ள விரிவுரையாளர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்று பீடாதிபதி தி.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

சமகாலத் தகவல் தொழில்நுட்ப யுகத்துக்கு மாணவர்களைத் தயார்ப் படுத்த ஆங்கிலஅறிவு மிக அவசியமாக இருப்பதால் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-10)

# தவக்காலச் சிந்தனை

## வேடங்கள் மனித உறவின் மறைவிடங்கள்

பரிசேயர் அல்ல வரி தண்டுபவரே கடவுளுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்பினார் *(லூக். 18:14)*

இருபத்தைந்தாம் நாள்

வேடங்கள் மனித உறவின் மறைவிடங்கள். ஒருவர் தம் உண்மையான நிலையை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றபொழுது முகமூடிகளை அணிந்து வேடங்களில் புகலிடம் தேடுகின்றனர். இயேசுகிறிஸ்து வாழ்ந்த சமூகத்தில் பரிசேயர்கள் என்ற குழுமத்தைச் சார்ந்தவர்கள் வேத சட்டங்களைத் திரிபுறக் கற்று அவற்றைக் கடைப்பிடிப்பவர்கள். ஆயினும், தம்மைப் பெரியவர்களாக்கி அடுத்தவரைக் குற்றவாளிகளாக சிறைக்கூண்டில் நிறுத்தி அவர்களை ஓரவஞ்சம் செய்ததனால் இறைவனுக்கு ஏற்புடையவர்களாகத் தம்மை நிலைநாட்ட முடியவில்லை. குற்றம்புரிந்த சமூகத்துரோகிகளாக வாழ்ந்த வரி தண்டுபவர்கள் தம் குறறங்களை ஏற்றுக்கொள்கின்றபொழுது அவர்கள் திருந்திவாழ வழி பிறக்கின்றது. குற்றங்களை ஏற்றுக்கொள்ளாத நிலைப்பாடு குற்றங்களில் பெரிய குற்றமாகின்றது. எனவே, நான் ஒரு பாவியா? பரிசேயனா என்பது இறைவன் முன்னிலையில் என்னை ஏற்புடையவராகப் படைப்பதற்கு ஏற்றதொரு கேள்வியாகிறது.

*- சுவாமி ஜீவாபோல் அ.ம.தி.*


# பொது நிகழ்வுகள்



பட்டினிக்கு எதிரான நிறுவனம் நடத்திய உணவுப்பொருள்கள் பதனிடல் சார்பான பயிற்சிநெறியில் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி ஒன்று வரணி கரம்பைக் குறிச்சியில் நடைபெற்றது. தென்மராடசிப் பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் எஸ்.உமாபாலன், மேற்படி நிறுவனத்திட்ட உத்தியோகத்தர் திருமதி அருள்நாயகி, மாசேரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க தலைவி திருமதி ப.கணேசரததினம் ஆகியோரும் மற்றும் பயிற்சியாளர்களும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: வரணிச் செய்தியாளர்)*




இந்தியாவின் அழகுக்கலை நிபுணர் டாக்டர் திருமதி பிரபா ரெட்டி அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்து அழகுக்கலை பற்றிய பயிற்சி வகுப்புக்களை யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடத்தினார். பயிற்சி நிறைவில் மாணவர்களுடன் திருமதி பிரபாரெட்டி காணப்படுகின்றார். *(ஐ-ரி)*



அண்மையில் நாரந்தனையில் உள்ள பொதுக்கட்டடத்தில் நடைபெற்ற தையல், மனையியல் கண்காட்சியை ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)*



காரைநகர் மத்தி சிறுவர் உரிமைகள் பாதுகாப்புக் குழு கடந்த ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வை அண்மையில் நடத்தியது.

காரை மத்தி சிறுவர் உரிமைகள் பாதுகாப்புக் குழுவின் பிரதிநிதியும் ஆசிரியருமான கோ.சண்முககுமார் சித்தியடைந்த மாணவன் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் அருகில் காரை மத்தி கிராம சேவையாளர் கே.சிவலிங்கம் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: காரைநகர்ச் செய்தியாளர்)*

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல தரமான Prima Broiler குஞ்சுகள் (ரூபா 40/-), அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் (ரூபா 60) 29.03.2004 பிற்பகல் விநியோகிக்கப் படும். பருத்தித்துறை கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும். க.தனபாலசிங்கம், நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29837)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. முழுநிறை 130/- சுத்தம்செய்தது 200/= கல்பேட்ஸ்'ம் விற்பனைக்குண்டு. தொடர்பு: தாசன், 158/4, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (29825)

புறொயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம்செய்யப்பட்டது 1Kg 200/- தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No.:2223529, 222 2867. (29812)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. ஒரு கிலோ 130/- இலவசமாக சுத்தம்செய்து தரப்படும். தொடர்பு: ரவி, இல.5, தனங்களப்பு வீதி, சாவகச்சேரி. (அஞ்சல் அலுவலகம் அருகில்), சாவகச்சேரி. (C/33723)

நிறைகூடிய புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. ஒக்ஷன் K.K.S. வீதி, தாவடிச்சந்தி. 1Kg 130/= (சுத்தம்செய்தது 1Kg 200/=) மொத்த கொள்வனவிற்கு கழிவு உண்டு. T.P.: 077 6161706. (29795)

2றீ தொடரிலக்கமுடைய மொறிஸ் மைனர் கார் உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: "உதயகிரி", கோப்பாய் வடக்கு, கோப்பாய். (29832)

சாவகச்சேரி, சங்கத்தானை, கண்டி வீதிக்கு அண்மையாக 4½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு, கிணறு, மலசலகூடம் ஆகியவற்றுடன் விற்பனைக் குண்டு. (வீட்டுக்கு திருத்தவேலைகள் உண்டு) தொடர்பு: 011-2719566. (29819)

1½ மாதம் நிரம்பிய நல்ல இன Great Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29835)

## பங்காளர் தேவை

**இலங்கையில் பதிவுசெய்யப்பட்டு வெளிவரும் தமிழ்வாரப் பத்திரிகை நிறுவனத்தில் முதலீடுசெய்யக்கூடிய பெரிய/சிறிய பங்காளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.**

**விளம்பர இல.: 2202**
மே/பா, உதயன். (29830)

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1970இல் பிறந்த, அவிட்ட நட்சத்திரம லண்டனில் தொழில் உரிமைபெற்ற மணமகனுக்கு கனடா, ஐரோப்பிய நாடுகளில் PR உடைய மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: திரு.மு.கோகுலன் T.P. 077 6155839, 077 6309939. (29699)

## தவறிவிட்டது

சாவகச்சேரி டச்சு வீதி. தா.சின்னத்துரை என்பவரது மோட்டார் சைககிள் காப்புறுதிப் பத்திரம், வரிச்சிட்டை, வாகனப்புத்தகப் பிரதி ஆகியவை அடங்கிய 'என்வலப்' சாவகச்சேரி சந்தைக்குள் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் பாலா ஸ்ரோர்ஸ், டச்சு வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (சி-33724)

பாலசிங்கம் செந்தூரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (803164681V), பல்கலைக்கழக அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன 03-03-2004 அன்று குமாரசாமி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 30/1, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (29838)

16/7, பொலீஸ் நிலைய வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த விமல ராஜசிங்கம் வினோஜன் என்பவருடைய வங்கி சேமிப்புக் கணக்குப் புத்தகம் (இல.18+143) சாவகச்சேரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி இலங்கை வங்கியிலோ அல்லது சாவகச்சேரி செல்வம கூல்பாரிலோ, மந்துவில் கிழக்கு, கொடிகாமத்திலோ, ஒப்படைத்துதவவும். T.P. 0777 110615. (29838)

மானிப்பாய், வட கிழக்கு ஞான வைரவர் ஆலய வீதிக்கும் பார்மசி வீதிக்குமிடையில் 15-03-2004 அன்று கையடக்கத் தொலைபேசி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 162, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். T.P.0777 571935 (29806)

சங்கானை வீதி, மானிப்பாயைச் சேர்ந்த யோகானந்தம் என்பவருடைய வாகன அனுமதிப்பத்திரம் (இல.NPHD8290) மற்றும் ஆவணங்கள் பளைக்கும் ஆனையிறவுக்கும் இடையே 14-03-2004 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பு.இராஜகுமாரன், T.P. 222 6415எனும் தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும். (29811)


## தேவை

முழுநேரமாகச் செயற்படும் கணனி நிறுவனத்துக்கு Type Setting தெரிந்த ஆண்/பெண் உடன் தேவை. கணனி சம்பந்தமான சகல சான்றிதழ்களுடனும் நேர்முகப் பாட்சைக்காக நாளை (21.03.2004) ஞாயிறு பிற்பகல் 12.30மணிக்கு கீழ்க் காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

**பணிப்பாளர்,**
**HSCMF,**
*புலவர் வீதி, நவாலி வடக்கு.*
(C/33725)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*தாயின் மடியில்*
*29 – 08 – 1948*



*இறைவன் அடியில்*
*02 – 04 – 2003*

அமரர் **அருள்ராஜா மகாலிங்கம்**

**திதி: 20-03-2004**

*முதலாம் ஆண்டு ஓடிவிட்டாலும்*
*தந்தையாய் தாயாய் உடனிருந்து*
*எம்மைக் காத்த அந்த நாள்கள் – எமக்கு என்றும் நினைவழியா நாள்களே!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.*

97, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

*பிரிவால் துயருறும்:*
- **குடும்பத்தினர்.**

(29840)(34-11-19-21)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணித்திட்டம்

வவுனியா,மார்ச்20

வவுனியா புளியங்குளத்தின் தெற்கு பகுதியில் வாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வவுனியா மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் டெனிஸ் அகதிகளுக்கான பேரவையும் இணைந்து மேற்கொண்ட முதலாம் கட்ட வேலைத திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. இதன் இரண்டாம் கட்ட வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொதுமக்களின் தேவைகளை அறிந்து அவற்றைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்தவேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. (ஓ-164)

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் பங்குனித்திங்கள் 8 ஆம் நாள் (21.03.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9.17 மணிமுதல் 10.47 மணி வரையுள்ள கடகலக்கினமும் சித்தயோகமும் கூடியுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எனது ஏகபுத்திரன்
திருநிறை செல்வன்
**சுதர்சன்**
அவர்களுக்கும்



எமது ஏகபுத்திரி
திருநிறை செல்வி
**துஷ்யந்தி**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் திருமாங்கல்யம் செய்ய சான்றோர் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியவிருந்துபசாரத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

**வரவேற்புபசாரம்:** *மணமகன் இல்லத்தில் (22.03.2004) திங்கட்கிழமை பி.ப.4 மணியளவில் நடைபெறும்.*

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:**

**அ.மு.அருணாசலம்** (அதிபர்),
"தெய்வீகம்"
பட்டினசபை வீதி, மானிப்பாய்.
T.P.:0712 522844.

**(இரு வீட்டார் அழைப்பு)**

**இ.தருமலிங்கம் தம்பதிகள்**
கனுக்கேணி, முள்ளியவளை
(27/3, 4ஆவது ஒழுங்கை,
பண்டாரிக்குளம், வவுனியா)
T.P.: 0712 370641.

(29802) (21-11-19-34)



ஒரே தினத்தில் மூக்குக் கண்ணாடிகள்

# சொலெக்ஸ் பல்மூக்குக் கண்ணாடியகம்



ஆம்..........

- உங்கள் கண்களைப் பரிசோதித்து பிறேம் அற்ற (RIMLESS) மூக்குக் கண்ணாடிகளை ஒரே தினத்தில் பெற்றுக்கொள்ளவும்
- பல் சம்பந்தமான சகல ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும், சங்குப் பற்களை கட்டிக் கொள்ளவும்
- மிதப்பு பற்களுக்கு இலகுமுறையில் கிளிப் செய்து சீர்செய்து கொள்ளவும்
- மாபிள் கண்கள், சண் கிளாஸ் வகைகளைக் குறைந்தவிலையில் பெற்றுக் கொள்ளவும்

யாழ்.நகரில் **சொலெக்ஸ் ஒப்ரிகல்ஸ் & டென்ரல் வேக்ஸ்**
516, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D.) இற்கு முன்பாக )
யாழ்ப்பாணம்.

பிரதி வெள்ளிக்கிழமை தோறும்
நெல்லியடியில்
**சொலெக்ஸ் ஒப்ரிகல்ஸ்**
வண்ணமாட லேன், நெல்லியடி.

(C/33718)(34)

# நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் - 2004



*செல்வி மகேஸ்வரி வேலாயுதம் L.L.B*
சட்டத்தரணி,
மனித கௌரவத்திற்கான மன்றம்.

ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்களை தென்னிலங்கை யிலிருந்து விடுவித்து பிணைப்பணமும் செலுத்தி உங்களிடம் ஒப்படைத்தவர்.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேசமெங்கும் மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் சகல அடக்குமுறைகளுக்கும் எதிராக ஓங்கிக் குரல் கொடுப்பவர்.

சாதனைகள் பல படைத்தவர். 1977 இலிருந்து மனித உரிமைகளுக்காகவும், மனிதாபிமான சேவைகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.


இலங்கை தமிழ்ப் பெண்களின் ஆளுமையை சர்வதேசமெங்கும் எடுத்தியம்புபவர்.

இவரைப் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்து அனுப்புவதன் மூலம், முதல் தமிழ் பெண் பிரதிநிதியை அனுப்பிய பெருமை யாழ்ப்பாண மக்களைச் சேரட்டும்.



**X** **10**

**மனித உரிமைகளுக்கான அமைப்பு, கொழும்பு.**



எஸ்-லோன் குழாய் பொருத்துநர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு ஆயுள் காப்புறுதிச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் வர்த்தக அபிவிருத்தி முகாமையாளர் பி.கே.டேவிட், வர்த்தகர் விசாகரத்தினம் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதலிரு படங்களிலும் டேவிட் உரையாற்றிக்கொண்டிருப்பதை அடுத்துள்ள படத்திலும் விற்பனைப் பொறியியலாளர் பி.மகாதேவன் சான்றிதழ் வழங்குவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். பிரதேச விற்பனை முகாமையாளர் ரீ. ரவீந்திரனும் அருகில் காணப்படுகிறார். *(படங்கள்: வசந்தன்).*

மாகாணக் கல்வித் திணைக்களத்தின்

# 'கவின் தமிழ்' மலருக்கு ஆக்கங்கள் சேர்ப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்20

மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் வருடந்தோறும் வெளியிடப்படும் 'கவின் தமிழ் - 2004' மலருக்கான ஆக்கங்கள் எழுத்தாளர்கள், கலைஞர்களிடமிருந்து சேகரிக்கப்படவுள்ளன.

தமிழ் மொழியின் சிறப்பும் அதன் செழுமையும், புலம் பெயர் இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள், வடக்கு - கிழக்கு பாரம்பரிய வரலாறுகள், பெருமைகளை எடுத்துக்காட்டும் வகையில், வடக்கு - கிழக்கு தெல்லிய ஆய்வுச்சுவடிகள், வடக்கு-கிழக்கில் வாழ்ந்து தமிழுக்குப் பெருமை சேர்த்த தமிழ், முஸ்லிம் அறிஞர்கள் பற்றிய ஆய்வு, தமிழ், முஸ்லிம் பாரம்பரிய நாட்டுப்புற வழக்கு, நூலக அபிவிருத்தி தொடர்பான புதிய விடயங்கள், பிரதேச ரீதியான கலை, பண்பாட்டு பாரம்பரிய விழுமியங்கள் போன்ற விடயங்களை உள்ளடக்கியதான கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரை, விவரணச் சித்திரம், சிறுகதை, கவிதைகள், துணுக்குகள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் 30.6.2004இற்கு முன்னர் 'என். அனந்தராஜ், உதவிக் கல்விப்பணிப்பாளர், தமிழ் மொழிப்பிரிவு மாகாணக் கல்வித்திணைக்களம், திருகோணமலை' எனும் முகவரிக்கு அனுப்பி வைககுமாறு மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மாலிங்கம் கேட்டுள்ளார். (ஐ-ரி)

# 'எஸ்-லோன்' பொருத்துநர் சங்க சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

குடாநாட்டில் செயற்படும் எஸ்-லோன் குழாய் பொருத்துநர் சங்கத்தின் 35 உறுப்பினர்களுக்கு ஆயுள் காப்புறுதிச் சான்றிதழ்களும் தொழில் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

எஸ்-லோன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்வை வர்த்தகர் எஸ்விசாகரத்தினம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

இந்த நிறுவனத்தின் முகவர்களுக்கான வர்த்தக அபிவிருத்தி முகாமையாளர் பி.கே.டேவிட் தமது நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்தார்.

அதனைத் தொடர்ந்து சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. சான்றிதழ்களை பி.கே.டேவிட், விற்பனைப் பொறியியலாளர் பி.மகாதேவன், பிரதேச விற்பனை முகாமையாளர் ரிரவீந்திரன் ஆகியோர் வழங்கினர்.

பின்னர் மின்பொருத்துநருக்கான பயிற்சி நெறி இடம்பெற்றது. இதில் 250 பேர் கலந்துகொண்டனர். (ஓ-3)

# களியாட்ட இடமாக மாறுகின்ற கைதடி தெற்குக் கொல்களம்

கைதடி,மார்ச்20

கைதடி தெற்கில் சாவகச்சேரி பிரதேச சபைக்குரிய கொல்களம் ஒன்று உள்ளது. இது அண்மைக்காலமாக களியாட்ட இடமாக மாலைவேளைகளில் மாறி வருவதாகப் பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகிறது.

மாலைவேளைகளில் அங்கு கூடும் இளைஞர் கும்பல்கள் இந்த கொல்களத்தினுள் கூடி மது அருந்துவதாகவும் -

போதை தலைக்கேறிய நிலையில் இந்தக் கும்பல் அப்பகுதியில் சென்று வருவோருடன் தகராறில் ஈடுபடுவதாகவும் - கூறப்படுகிறது. இக்கும்பலில் உள்ள சிலர் இரவை அங்கேயே கழித்துவிட்டு மறுநாளே வீடு செல்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இதனால் மாலை வேளைகளில் இவ் வீதியில் செல்லப் பொதுமக்கள் அச்சம் கொள்கின்றனர்

எனவே, இவர்கள் மீது சமூக நலனில் அக்கறை கொண்டோர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஓ-75)

## மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்மணி தவறி காயம்!

யாழ்ப்பாணம்,மார்ச்20

மோட்டார் சைக்கிளில் பின்புற இருக்கையில் அமர்ந்து பயணித்துக் கொண்டிருந்த பெண் ஒருவர் தவறிக் கீழே வீழ்ந்ததால் தலையில் படுகாய மடைந்தார்.

மானிப்பாய்ப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கோப்பாயைச் சேர்ந்த திருச்செல்வம் கமலம் (வயது 54) என்ற குடும்பப் பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-15)

# மாநகர சபைப் பகுதியில் நாயகளுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்பு நாய்களுக்கு இரண்டாம் கட்ட விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்படும் திகதி, நேரம் மற்றும் நிலையம் என்பன பற்றிய விவரங்கள் வருமாறு:-

யாழ். நகரப்பகுதியில் எதிர்வரும் 24ஆம் திகதி காலை 8 மணிக்கு செ.றோக் சனசமூக நிலையத்திலும், காலை 11 மணிக்கு றெக்கள மேசன் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 2மணிக்கு ஜீ.பி.ஈ. மகப்பேற்று நிலையத்திலும் -

25ஆம் திகதி 8.30 மணிக்கு குருநகர் சனசமூக நிலையத்திலும்- பிற்பகல் 2மணிக்கு கொழும்புத்துறை ஆரம்ப சுகாதார நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

அடுத்த ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி பாஷையூர் சிறுவர் பூங்காவிலும், காலை 11மணிக்கு ஈச்சமோட்டை சனசமூக நிலையத்திலும், பிறபகல் 2 மணிக்கு சந்தனமாதா கோவில் அருகிலும் -

ஏப்ரல் 8ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கொய்யாத்தோட்டம் சன சமூக நிலையத்திலும், காலை 11 மணிக்கு கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2 மணிக்கு சென். ஜேம்ஸ் தேவாலயத்திலும்-

ஏப்பரல் 15ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கொழும்புத்துறை கிழக்கு சன சமூக நிலையத்திலும் -

அன்றைய தினம் நல்லூர் பகுதியில் காலை 11 மணிக்கு நல்லூர் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2 மணிக்கு அரசடி ஜனசக்தி சன சமூக நிலையத்திலும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (ஒ-ஏ)

# சுதேசியக் கொண்டாட்ட விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்20

85ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளின் இறுதியாட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் அரியாலை சன சமூக நிலைய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

அன்றையதினம் இறுதியாட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம்:-

**கிரிக்கெட்**

16 வயதுப்பிரிவு - உள்ளூர் பிற்பகல் 2 மணி - போய்ஸ் வி.க. எதிர் ஜங்ஸ்ரார் வி.க.

மாவட்ட ரீதியானது பிற்பகல் 3.30 மணிக்கு ஸ்ரார் வி.க. எதிர் பஷன் வி.க.

**உதை பந்தாட்டம்**

(திணைக்களங்களுக்கிடையிலானது) மாலை 5 மணி யாழ். மாவட்ட விளையாட்டுத் திணைக்கள அணி எதிர் யாழ். மாநகரசபை அணி.

**கரப்பந்தாட்டம்**

(ஓவர்கேம்) இரவு 7 மணி - அரியாலை ச.ச. நிலைய 'ஏ' அணி எதிர் அரி யாலை ச.ச நிலைய 'பி' அணி.

**(செற் அப்)** இரவு 8 மணி - காங்கேசன்துறை ஐக்கிய வி.க. எதிர் ஆவரங்கால் மத்திய வி.க. (ஓ-5)

# யாழ்றரன் கல்லூரியில் மாணவர் வரவு வீழ்ச்சி

## கட்டாயக் கல்விக் குழு ஆராயும்

காரைநகர்,மார்ச்20

காரைநகர் யாழ்றரன் கல்லூரியில் மாணவர்களின் வரவு வீழ்ச்சியடைந்துள்ளமை தொடர்பாக கட்டாயக் கல்விக் குழுவினர் ஆராய்ந்து வருகின்றனர். கல்லூரியின் கட்டாயக் கல்விக்குழுவின் செயலாளரும் கிராம அலுவலருமான ரி.சண்முகசுந்தரம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை கல்லூரி அதிபர் ந.பரமசிவம் தலைமையில் நடைபெற்ற கட்டாயக்கல்வி குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பாடசாலையில் சுமார் பத்து சத வீதமான மாணவர்கள் ஒழுங்காக பாடசாலைக்குச் சமுகமளிப்பதில்லை எனவும் இவர்களுடைய பெற்றோர்களை அழைத்து மாணவர்களின செயற்பாடுகள் தொடர்பாக எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள கட்டாயக் கல்விக் குழுக்கூட்டத்தில் ஆராயப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை-

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்திலும் கட்டாயக் கல்விக் குழு கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-73)

## முக்கிய கலந்துரையாடல்கள்

வலி.வடக்கு,மார்ச்20

உடுவில் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் கடமையாற்றும் சுகாதாரத் தொண்டர்களுக்கான கலந்துரையாடல்கள் இன்று காலை 8.00 மணிக்கு இடம்பெறவுள்ளன.

உடுவில் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு சுன்னாகம் சிவன் கோவில் மண்டபத்திலும், தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு மல்லாகம் சந்திப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகிலும் இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன. (ஓ-86)

# அன்னை நாகா 'பூட்சிற்றி' இன் முதலாம் ஆண்டு நிறைவு தினம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ். நகரில் இயங்கும் பல்பொருள் அங்காடியான 'அன்னை நாகா பூட்சிற்றி' இன் முதலாம் ஆண்டு நிறைவு நாள் நேற்றாகும். இதனையொட்டிய வைபவ நிகழ்வு மேற்படி வர்த்தக நிலையத்தில் இடம்பெற்றது.

நேற்று முற்பகல் 9.30 மணியளவில் மங்கள விளக்கேற்றத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் வங்கியாளர்கள், பொலீஸ் அதிகாரிகள், பொதுமக்கள், பத்திரிகையாளர்கள், அரசஅதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு சலுகைகளை அங்காடி நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.



அன்னை நாகா பூட் சிற்றியின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் அன்னை நாகா 'பூட் சிற்றி'யின் உரிமையாளர் மங்கள விளக்கேற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் 'பூட் சிற்றி' இன் உட்தோற்றம் ஒன்றையும் படங்களில் காணலாம். *(படங்கள்: வசந்தன்).*

# 'பின்னேபோ' என்றார் நடத்துநர்; கன்னத்தில் அறைந்தார் பெண்மணி

## மினிபஸ்ஸில் சம்பவம்

வலி.வடக்கு,மார்ச்20

அளவுக்கு மீறி மினிபஸ்ஸுகுள் பயணிகளை ஏற்றிவிட்டு, பின்னால் செல்லும்படி வற்புறுத்திய நடத்துநரை ஆத்திரத்தில் பெண் பயணி தாக்கினார்.

நேற்றுமுன்தினம் தெல்லிபபழையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த மினிபஸ்ஸில் அளவுக்கு மீறிப் பயணிகள் ஏற்றப்பட்டனர் என்றும் -

இடைவழியில் ஏறிய பெண்மணி ஒருவரை மினிபஸ்ஸின் பின்புறம் செல்லுமாறு கூறி நடத்துநர் கையால் தள்ளினார் என்றும் -

இதனால் ஆத்திரமடைந்த பெண்மணி தன்னைத் தொடவேண்டாம் என்று கணடித்தார் என்றும் -

ஆனால், அடுத்த தரிப்பிடம் அண்மித்த சமயம் அப்பெண் மணியை உளளே செல்லுமாறு நடத்துநர் நெட்டித் தள்ளினார் என்றும் - கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்தே அந்தப் பெண்மணி, மினிபஸ் நடத்துநரின் கனனத்தில் அறைந்தார் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து மற்றைய பயணிகளும் நடத்துநரை ஏசினர் என்றும் -

பின்னர் வேறுபயணிகளை ஏற்றாமலேயே மினிபஸ் சென்றது .என்றும் - கூறப்படுகிறது.

(ஒ-86)

### சமய சந்நிதிகளில்

காரைநகர்,மார்ச்20

காரைநகர், வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தியும், சங்காபிஷேகமும் இன்று சனிக்கிழமை காலை 9.00மணி தொடககம் நடைபெறவுள்ளன.

இவ்வாலய மகா கும்பாபிஷேகம் கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி இடம பெற்றுத் தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றுவந்தது. (ஐ-10-73)

★ ★ ★

தாவடி தெற்கு ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்தக் குளித்து அபிஷேகம் இன்று சனிக்கிழமை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது. (ஐ-10-85)

★ ★ ★

மானிப்பாய் சோதிவேம்படி காளி அம்பாள் ஆலய வருடாந்த வசந்த நவராத்திரி உற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அம்பாளின் நகர் உலா எதிர்வரும 30 ஆம் திகதி நடைபெறும். (ஐ-10-90)

### விளையாட்டுக்குழு அங்குரார்ப்பணம்

சாவகச்சேரி பிரதேச சபைக்குடபட்ட சனசமூக நிலையங்களின் பங்களிப்புடன் பிரதேச மட்டத்தில் இந்த ஆண்டு விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் முகமாக விளையாட்டுக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. சனசமூக நிலையங்களின் சமாசத்துககான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த வாரம் பிரதேச செயலர் ந. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்திலேயே விளையாட்டுக் குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,தென்மராட்சிப் பிரதேச சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் 'கொண்ட' நிறுவன வெளிகள உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-170)

யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகத்தால்

றோட்டறக்ட் வாரத்தை முன்னிட்டு

கைதடி சனசமூக நிலையங்கள்,
மருத்துவ மாணவர்களுடன் இணைந்து நடத்தப்படும்

இலவச திருமண பதிவு செய்வதற்கான நிகழ்வு

இடம்:- சரஸ்வதி சனசமூக நிலையம், கைதடி மேற்கு
காலம்:- 21.03.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல

பயனாளிகள் பயன்பெறவும்.

செயற்றிட்ட இயக்குநர்,
யாழ்.நகர் மைய
றோட்டறக்ட் கழகம்.

(C/33736)(40-16-18)

ARPICO FURNITURE

பிளாஸ்ரிக் கதிரைகள்

இதோ! உங்கள் இல்லத்தை அழகிய முறையில்
அலங்காரமான புதிய வடிவமைப்பில் ஒழுங்கமைத்து
வருவோரை "வணக்கம்" கூறி வரவேற்று அமர்ந்து உரையாட
அழகிய பல வடிவங்களில் விற்பனைக்கு வந்துள்ளன

பிளாஸ்ரிக் கதிரைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்:



WOOD SONS



ஆர்பிக்கோ ஏகவிநியோகஸ்தர்:
68, 70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
(முட்டாஸ் கடை சந்தி)
☎ 222 2430

(C/33732)(34) மற்றும் அனைத்து ஆர்பிக்கோ முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

கொள்கைக்கான தேர்தல் - 2004



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்
யாழ்ப்பாண வேட்பாளர்

செல்வராஜா கஜேந்திரன்

(முன்னாள் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவரும் சர்வதேச மாணவர் பேரவைத் தலைவரும் பொங்குதமிழ் நிகழ்வினை தலைமையேற்று நெறிப்படுத்தியவரும்)

எங்களின் விருப்பு வாக்கினை கஜேந்திரனுக்கு (10)
இட்டு அவரை வெற்றி பெறச் செய்வோம்

-தீவக மக்கள்-

## தேவை - பணியாளர்கள்

★புத்தகக்கடை ஊழியர்
பாடசாலை உபகரணம், புத்தகவகை, பேப்பர்வகை ஆகியவற்றில் விற்பனை அனுபவமுள்ளவர்கள் தேவை.

★விற்பனையாளர்
இயந்திரவகை அரிசி, மா, கிறைண்டர் மற்றும் அதன் உதிரிகள் விற்பனையில் தேர்ச்சி உள்ளவர்கள் தேவை.

★கணக்காளர், சிட்டை எழுதுநர் தேவை
விண்ணப்பதாரிகள் நேரில் வரவும்.

நிர்வாகி,
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல.212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

(சி-33731)(37-16-17-18))

## கேள்வி அறிவித்தல்

### வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு
### கட்டடங்கள் திணைக்களம்

1. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கணனி அலகு கட்டடப் பகுதிக்கு உருக்குக் கூரைவகைகள் அமைத்து, உயர்த்தி, பொருத்துதல். இவ் வேலைக்கான சீலிடப்பட்ட கேள்விகள், யாழ்ப்பாணம் கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபைத் தலைவரால் 2004. 03. 31 மு.ப. 10.00 மணி வரை கோரப்படுகின்றது.
2. கேள்விப்பத்திரங்கள் 2004. 03. 26ஆம் திகதி பிற்பகல் 3. 30 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா ஆயிரம் மட்டும் (ரூபா. 1000/-) செலுத்தி, யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள, பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்விகள் மூடப்பட்டவுடன் யாழ்ப்பாணம் கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள, பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்தில் உடன் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
4. கடந்த 5 வருடங்களில் இதேமாதிரியான வேலைகள் செய்த முன்னைய அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டுமே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி ஆவணங்களைப் பெற முன் இதற்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்கவேண்டும்.
5. பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ்ப்பாணம், கடற்கரைவீதி, கட்டடங்கள் திணைக்களம், மே/பா, பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) கேள்விச் சபைத் தலைவருக்கு முடிவு நேரத்திற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
6. தாமதப் பிணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என கேள்விதாரர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
7. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன் மேலதிக விவரங்கள் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர்(யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ந. தேவராஜன்
பிரதம பொறியியலாளர், (சி-33733)
கட்டடங்கள் திணைக்களம் கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் (16-17-18)

## மரண அறிவித்தல்கள்

### அவுரான் சந்தியோகு திருச்செல்வம்

நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அவுரான் சந்தியோகு திருச்செல்வம் அவர்கள் 15.03.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அவுரான் - மதலேனாள் ஆகியோரின் பாசமிகு மகனும், றெஜினா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சூசை சின்னாச்சியின் பாசமிகு மருமகனும் அன்ரன் சாள்ஸ்(சவூதி), லிப்பின் மேனகா(லண்டன்), அனற்லைசா(இத்தாலி), யூலியற்(இத்தாலி),சிறிதாசன்(இத்தாலி), லூமன் விமலா, மேரிடில்லா, அனிதாஸ் (இத்தாலி), வினோதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கலிஸ்ரா (கொழும்பு), ஆரோக்கியநாதர் (லண்டன்), பூலோகராசா(இத்தாலி), அருள் நேசன் (இத்தாலி),சீதா, இந்திரலிங்கம், ரமேஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயந்தன், அனுஷா, சிந்து(லண்டன்) அனிஸ்ரெலா, அகில்சன்,அஜின்(இத்தாலி), மயூரன், மகிந்தன், ரஜீந்தன், கபில்சன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற (அந்தோனி யோசப்) மற்றும் வேதநாயகம்(இத்தாலி) மேரிராணி, எட்வேட் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஞானப்பு, காலஞ்சென்ற (செபமாலை), காலஞ்சென்ற லூதறு மற்றும் பிலோனம்மா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.03.2004) சனிக்கிழமை பிற்பகல் 1மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நாரந்தனை புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

*நாரந்தனை தெற்கு,*
*ஊர்காவற்றுறை.*
(29845)(16-17-18)

தகவல்:
குடும்பத்தினர்.

### குமாரசாமி குமாரசூரியர்

(முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர்)

நாவலர் வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி குமாரசூரியர் 13.03.2004 இல் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - தையலம்பாள் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னபூரணியின் அன்புக் கணவரும் விசாலாட்சியம்மை (இராசாத்தி - நல்லூர்), ஜெகதீஸ்வரி (மாம்பழம் - ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/இந்து மகளிர் கல்லூரி), பாலசுப்பிரமணியம் (பாலா, City Hardware & Stores) ஆகியோரின் அன்புச் சகோதரரும் குமுதினி (Canda), ஜெயக்குமார் (Canada), சுலோஜினி (Canada) சதீஸ்குமார் (Norway) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவிபாலன் (Canada), லக்சிகா (Canada), ரவிசங்கர் (Canada), சுபா (Norway) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17-03-2004 அன்று கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

ஊரெழு மேற்கு, சுன்னாகம்.
T.P 0776 125363
(Canada - 416 724 5983)
(29848)(16-17-18)

தகவல்:
கு.பாலசுப்பிரமணியம்
(பாலா) சகோதரன்.

# ஸ்ரீபாத கல்லூரியில் நிர்வாகத்துடன் மாணவர்கள் கலாட்டா; நால்வர் காயம்!

தலவாக்கலை,மார்ச்20

பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி காலவரையறை இன்றி மூடப்பட்டது. கல்லூரி நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இரண்டு மாணவர்களும், இரண்டு உத்தியோகத்தர்களும் காயமடைந்துள்ளனர். படுகாயம் அடைந்த இரண்டு மாணவர்களும் கொட்டகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் கடந்த ஒரு வாரமாக மாணவர்கள் தமக்கு வழங்கப்பட்டு வரும் உணவு மிகவும் தரம் குறைவானது என்று கல்லூரித் தலைவரிடம் முறையிட்டனர். எனினும், இது சம்பந்தமாகச் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று மாணவர்கள் கொதிப்படைந்தனர். உணவுக் கமிட்டியில் அங்கம் வகிக்கும் மூன்று மாணவர்கள் கல்லூரிப் பதிவாளரிடம் சென்று விடயத்தைக் கூறி தேவையான பொருள்களை வாங்கித் தரும்படி கேட்டனர்.

கல்லூரிப் பதிவாளர் மாணர்வகளின் கோரிக்கையை நிராகரித்தார் என்றும் மரியாதைக் குறைவான வார்த்தைகளை உபயோகித்தார் என்றும் கூறபபடுகிறது. இதை அடுத்து நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்கும் இடையிலான வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பில் முடிந்தது.

உத்தியோகத்தர்கள் இருவரும் மாணவர்கள் இருவரும் காயமடைந்தனர். கல்லூரியில் பதற்றநிலை ஏற்பட்டதால் பத்தனைப் பொலீஸார் அழைக்கப்பட்டனர். இப்பொழுது கல்லூரி இழுத்து மூடப்பட்டுள்ளது.

(ம-க)


**பௌதிகக் கடலில் ஒரு புதிய முத்து!**

**முத்துக்குளிக்க நீங்கள் தயாரா?**

மேலதிக விவரங்கள் நாளைய உதயனில்

(29858)(40)


## தேர்தல் களத்தில் சுவரொட்டி விநோதங்கள்

அக்கரைப்பற்று,மார்ச்20

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தில் வன்முறை மற் றும் கொலைச்சம்பவங்கள் இடம் பெற்று வருவதைக் கண்டித்து சுவ ரொட்டிகள் ஒட்டப்படுகின்றன.

அரசியல காரணங்களுக்காக அப்பாவி மக்களைப் பலிக்கடாக்களாக மாற்றவேண்டாம். சகல மக்களும், அவர்கள் எந்தெந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தமது ஜனநாயக உரிமையைப் பேணுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமென்று சுவரொட்டிகள் கூறுகின்றன. அமைதிக்கான சமாதானப் பேரவை என்ற அமைப்பின் சார்பாக இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுவதில் ஒரு விநோதம் நடக்கிறது. ஆதரவாளர்களால் ஒட்டப்படும் சுவரொட்டிகளின் பசை காய்வதற்கு முன்னரே இன்னுமொரு கோஷ்டியினர் வந்து அவற்றைக் கிழித்து அகற்றிவிடுகின்றனர்.

சில சுவரொட்டிகளில் பாவித்த கழிவு எண்ணெய் பூசப்பட்டு வருகிறந்து.

(ம-க)

## சபிண்டீகரண அழைப்பு

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 01 | | 20 |
| 04 | | 02 |
| 1943 | | 2004 |



அமரர்

### சிற்றம்பலம் சிவபாலன்

(Rtd.Nursing Officer)

20.02.2004 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (21.03.2004) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு:-* தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*64A, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்.*

- திருமதி தவநாயகி சிவபாலன் (மனைவி) (Rtd.Nursing Officer)

(29860)(38-16)

## முதலாம் வருட நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 20 | | 01 |
| 08 | | 04 |
| 1948 | | 2003 |



### திருமதி தவமணிதேவி நடராசா

திதி: பங்குனி அமாவாசை

20.03.2004

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாக வாழ்ந்து
என்றும் ஆதரவாய் எமை அரவணைத்த அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

எங்கள் அன்பு அன்னையாம் இல்ல விளக்கின் ஓராண்டு நிறைவையிட்டு இன்று (20.03.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் நடைபெறுகின்ற மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவால் கலங்கி நிற்கும்;*
ஆருயிர்க் கணவர்,
அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள்.

பவலூம் லேன்,
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(29855)(30-16-18)


**லிபேட்டி** அச்சுவேலி



விஜய், ஜோதிகா, தேவயானி, வாடிவேல் மற்றும் பலர் நடித்த
**ஃபிரண்ட்ஸ்** (ரீல்ஸ்)

காட்சிநேரம்: 3.00, 7.00 (பி.தே.)

**ராஜா** யாழ்ப்பாணம்





சூரியா. லைலா. திரிசா நடித்த
**மௌனம்பேசியதே**

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.தே.)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை



மக்கள் திலகம் எம்.ஜி. ஆர். லதா. மஞ்சுளா நடித்த
**நேற்று இன்று நாளை**
(புத்தம் புதிய பிரதி - ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.தே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
**SPY KIDS II**

(C/33815)(12)

**நாகம்ஸ்** சுன்னாகம்

டொல்பி ஒலியத்துடன்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக

பொலீஸ் அதிகாரியாக சரத்குமார், லைலா, வடிவேலு நடித்த
**அம்பரம்**



தினசரி காட்சிகள்: 11.00, 3.00 7.00 10.00 (பி.தே.) (C/33820) (12)



**'POSH'**

அழகுக்கலை நிறுவனத்தினால் நடத்தப்படும்

**இலவச ஒரு நாள் கருத்தரங்கு**

பிரபல
- அழகுக்கலை நிபுணர் -
**திருமதி மிதுனா ஆனந்தரமணன்** அவர்கள்
(Dip in cos metology cum. BEAUTY THERAPHIST)
இந்த ஒருநாள் இலவச கருத்தரங்கை நடத்துகின்றார்கள்.

☆ சருமத்தின் தன்மைகளும் அதில் ஏற்படும் பிரச்சினைகளும்
☆ கேசத்தின் தன்மைகளும் அதில் ஏற்படும் பிரச்சினைகளும்
☆ இவற்றுக்கான தீர்வுகளும் விளக்கங்களும்

**இக்கருத்தரங்கு - ஒவ்வொருவரினதும் சுயபராமரிப்புக்கு வழிகோலும்**

நாளை (21-03-2004) ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை
- கருத்தரங்கு நடைபெறும்.
இடம்: உதயன் கேட்போர் கூடம்.
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆர்வம்மிக்க ஆண், பெண் இருபாலாரும் வயது வித்தியாசமின்றிக் கலந்துகொள்ளலாம்.

அனைத்து மகளிர் அமைப்புக்களையும் இந்தக் கருத்தரங்கில் க்லந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:-KAJI Beauty Parlour,
T.P.:222-7041, 0777-577617.
ROSE ARTS.
021-222-6146, 077-616 7729.

(சி-33737)(30-16)


## மரண அறிவித்தல்கள்

### தம்பையா காராளசிங்கம்

(ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர், வலி.தென் மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்)



சுதுமலை மேற்கைப் பிறப்பிடமாகவும் ஆலங்குழாய், சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா காராளசிங்கம் அவர்கள் 17.03.2004 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - விசாலாட்சி தம்பதியினரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் விமலாதேவியின் பாசமிகு கணவரும் பிரேமி (கனடா), காலஞ்சென்ற கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் காந்தலிங்கத்தின் (கனடா) மாமனாரும் ரம்மியாவின் அன்புப் பேரனும் சரஸ்வதியின் சகோதரனும் அமரர் த.கந்தசாமி (V.T.K.), திருமதி சி.மகேஸ்வரி, திருமதி இ.புஸ்ப லீலாவதி, த.தியாகராசா, த.தர்மலிங்கம், த.யோகராசா, திருமதி பு.ஜெயதேவி, சுதுமலையைச் சேர்ந்த ச.கனகநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் க.சதீஸ், க.சனந்தன் (2ஆம் வருட முகாமைத்துவ மாணவன், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2004) ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணியளவில் சுதுமலை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை மேற்கு, மானிப்பாய்.*

தகவல்:
கா.பிரேமி (மகள்),
ச.கனகநாயகம் (மைத்துனர்).

(29861)(30-16)

### திருமதி மயில்வாகனம் உதயமணி

அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் இல.35,32nd Lane, வெள்ளவத்தையைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயில வாகனம் உதயமணி அவர்கள் 18.03.2004 வியாழக்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் இ.மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஏரம்பு - நாகமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் ஏ.விக்னேஸ்வரராஜா (ஓய்வுபெற்ற அதிபர்), ஸ்ரீ சேதுபதி அம்மாள் (ஓய்வுபெற்ற ஆசிரியை), பா.தனேஸ்வரி (cdo - திருமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலசோதி, ஸ்ரீஜெகரட்சகமூர்த்தி (அதிபர், அல்வாய் த.மி.க.பாடசாலை), வ.பாஸ்கரன் (ஓய்வுபெற்ற கப்பல் தலைமை அதிகாரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் உஷா (Medi Clinic), உமா (swiss), கேமா, கண்ணன் (swiss), கெங்கன் (swiss), பாலவதனா (ஆசிரியை, சாகிறாக் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் சு.ராஜேந்திரா, சு.குமார் (abi tours - உரிமையாளர்) செ.ரவீந்திரன் (முகாமையாளர், 'Flexisoles (pvt) LTD), வசந்த மோகன் (swiss), குமுதினி (swiss), மார்கிறட் (swiss) ஆகியோரின் அன்பு மாமியாரும் சேதுபரன் (விரிவுரையாளர், IT Park), ஸ்ரீகௌரி (ஆசிரியை, குருத்தலாவ முஸ்லிம் மகாவித்தியாலயம்), ஸ்ரீரமணி ஆகியோரின் பெரிய தாயாரும் சித்திரா (சதோசா, யாழ்ப்பாணம்), கலைமதி, திகழ்மதி ஆகியோரின் அன்பு மாமியாரும் நிஷாந்தன், பானுஜா, சிந்துஜா, கோபி, வைஷ்ணவி, வேனுஜன், யூர்க்கா, யூலியன், வலன்டைன், காயத்திரி, அபிஷாயா, அக்ஷயா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (19.03.2004) வெள்ளிக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் (இல.591,காலி வீதி, கல்கிசை) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (21.03.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் கல்கிசை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*591, காலி வீதி, கல்கிசை.*

தகவல்:
குடும்பத்தினர் (சேதுபரன்)
T.P.: 0777 570079, 071-7570079, 011-2554739

(29850)(16-18)

# இலங்கையின் புகழ்பெற்ற வீரர் மஹாநாம நேற்று யாழ். வந்தார்

யாழ்ப்பாணம்,மார்ச்20

வடக்கின் மாபெரும் போர் என்று வர்ணிக்கப்படும் துடுப்பாட்டத்தை யொட்டி இலங்கை கிரிக்கெட் அணியின் சர்வதேசப் புகழ்பெற்ற முன்னாள் வீரரான ரொஷான் மஹாநாம தலைமையிலான தேசிய வீரர்கள் கொண்ட குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தது.

வடக்கின் மாபெரும் துடுப்பாட்டத்துக்கு ஜனசக்தி நிறுவனம் அனுசரணை வழங்குகின்றது. அதன் ஏற்பாட்டிலேயே மஹாநாம தலைமையிலான 6 பேர் கொண்ட கிரிக்கெட் குழுவினர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

யாழ். மத்திய கல்லூரி மற்றும் பரியோவான் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்களைக் கொண்ட அணிக்கும் மஹாநாம தலைமையிலான ஜனசக்தி அணிக்கும் இடையில் 4 ஓவர்களைக் கொண்ட காட்சிக் கிரிக்கெட் ஆட்டம் ஒன்றும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

வடக்கின் மாபெரும் துடுப்பாட்டத்தின் இரண்டாவது நாள் ஆட்டம் முடிவடைந்ததன் பின்னர் இந்த ஆட்டம் இடம்பெற்றது. ஜனசக்தி அணியில் மஹாநாம, இலங்கை தேசிய அணி வீரரான ருசித்த பெரேரா உட்பட அறுவர் இடம்பெற்றிருந்தனர்.



ரசிகர்கள் சகிதம் மைதானத்துள் நுழையும் மஹாநாம.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜன சக்தி அணி 4 ஓவர்களில் 73 ஓட்டங்களைக் குவித்தது. மஹாநாம 16 ஓட்டங்களைப் பெற்றார். சிக்ஸ்களும் பௌண்டரிகளும் பறந்தன.

பதிலளித்து ஆடிய பழைய மாணவர் அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 32 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

ஆட்டத்தின் போது மஹாநாம உட்பட ஏனைய வீரர்கள் ரசிகர்களின் அன்புத் தொல்லையில் சிக்கிக்கொண்டனர். மஹாநாமவிடம் கையெழுத்துப் பெறுவதற்காக அவர் ஆடுகளத்தில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த சமயத்திலேயே ரசிகர்கள் மைதானத்துக்குள் நுழைந்ததைக் காணமுடிந்தது. பின்னர் ஜனசக்தி அணி வீரர்கள் களத்தடுப்பில் ஈடுபட்டத்திலும் பார்க்க ரசிகர்களுக்கு கையெழுத்திட்டுக் கொடுப்பதிலேயே அதிக நேரத்தைச் செலவிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-4-9)

## அரச வைத்தியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த வைத்திய அதிகாரிகள் அனைவரையும் உடனடியாக பணிக்குத் திரும்புமாறும் அவர் கேட்டுள்ளார். எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாட இருக்கின்றோம் என்று மேலும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

கடந்த 9 நாள்களாகச் செயலிழந்து கிடந்த யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு, கிளினிக்குகள் என்பன நேற்று மதியத்துக்குப் பின்னர் மீண்டும் செயற்பட ஆரம்பித்தன. எனினும் தொடர் வேலைநிறுத்தம் காரணமாக நோயாளர்கள் இந்தப் பிரிவுகளுக்கு வருகை தரவில்லை. வெறிச்சோடிக் காணப்பட்டது.

வைதியசாலையின் ஏனைய பணிகள் வழமைபோன்று நடைபெற்றன. இன்று முதல் சகல பணிகளும் வழமைக்குத் திரும்பிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7-15)

## கிறிஸ்தவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லய அருட்தந்தை லெஸ்லி அஜித் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதன் காரணமாக இப்பகுதியில் பதற்றநிலை தோன்றியுள்ளது.

சீனன்குடா பொலீஸார் இதுபற்றி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4)


**Kilinochchi Medical Association Inauguration Ceremony - 2004**

Date - 21.03.04 (Sunday)
Time - 10.00 a.m. Onwards
Venue - 1 - 9 Hotel - Kilinochchi
Chief Guest -
Dr.(Mrs.).J.Ganeshamoorthy
M.B.B.S. (Cey.) FRCP (Lon.)
The Head, Department of Medicine
Faculty of Medicine
University of Jaffna

(C/33726)(39-11-16)

Sponsored by - NEELAN PHARMACY
A-9 Road, KILINOCHCHI.


## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் - என்றார் பொலீஸ்மா அதிபர்.

இதேவேளை -

தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைகள் சம்பந்தமான 560 முறைப்பாடுகள் பொலீஸாருக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. 2001 தேர்தல் காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவை குறைந்தளவானவையே என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## மாத்தறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் சிரமப்பட்டனர்.

நேற்று கமபுறுப்பிட்டியவில் நடைபெற்ற ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகப் பிரதமர் சென்றுகொண்டிருந்தபோது மாத்தறை நகருக்கு அருகில் பாதையின் இரு மருங்கிலும் பொது மக்கள் கூட்டமாக நின்று பிரதமருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

காரில் சென்றுகொண்டிருந்த பிரதமர் திடீரென காரை நிறுத்தச் சொல்லி காரில் இருந்து இறங்கிப் பாதை ஓரத்தில் நின்ற மக்களுடன் உரையாடினார்.

அவர்களுடைய குறைகளைக் கேட்டு அறிந்தார். இப்படி வழி நெடுங்கிலும் இருந்த பொதுமக்களுடன் உரையாடிக்கொண்டே பிரதமர் சுமார் ஒருமைல் தூரம் நடந்தே வந்தார். இதனால், பிரதமரின் பின்னால் ஒரு பெரிய கூட்டமே திரண்டுவிட்டது.

அக்கூட்டத்தோடு கூட்டமாக பிரதமர் மாத்தறை பஸ் நிலையத்திற்கும் சென்று அங்கிருந்தோருடன் உரையாடி அவர்களுடைய ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார்.

பிரதமரின் இந்த விஜயம் பற்றிய செய்தி மாத்தறை நகரில் பரவியதால் சிறிதும் எதிர்பாராமல் பெருந்திரளான மக்கள் மாத்தறை பஸ் நிலையத்தில் கூடிவிட்டனர்.

நிலைமையை சமாளிக்க பிரதமர் அக்கூட்டத்தில் உரையாற்றிய பின் அங்கிருந்து கம்புறுப்பிட்டியாவுக்குச் சென்றார்.


**Sky Computer Systems**

109, Kandy Road, Chundikuli, Jaffna. Tel./Fax No. 021 4590325
E-mail: sky com @ wow.lk

Ms Office
Page Maker
Quick Books
Visual Basic
Auto CAD
Advanced Excel
Photoshop
Corel DRAW
MYOB
Hardware
Internet & E-Mail
SQL in Access

Note:-
1). மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியான முறையில் கவனிக்கப்படுவர்.
2). உங்களுக்கு வசதியான நேரத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.
★சான்றிதழ்கள் யாவும் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து பெற்றுத்தரப்படும்.
★15,000/= இலிருந்து கணனிகளைப் பெற்றுக்கொள்ளலாம். மொனிட்டர் 15" - 6000/=

(கச்சேரிக்கு அருகில்)
Today you Learn
Tomorrow you Lead.

கணனி போதனாசிரியர்கள்/விரிவுரையாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 21ஆம் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு உரிய சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும். (C/33666)(40)


## வடக்கில் வாக்குச்சாவடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தில் 31 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்படும்.

★ வாக்களிக்க வரும் வாக்காளர்களிடம் அடையாள அட்டையோ, ஆள் சோதனையோ இடம்பெறமாட்டாது. சாதாரண பிரஜைகளாக அவர்கள் வாக்களிக்க அனுமதிக் கப்படுவர். பொலீஸார் அங்கு பணிபுரிவர்.

★ வாக்களிப்பு நிலையங்கள் அமைக்க வசதியாக அந்தப் பகுதியில் இருந்து படையினர் அன்றைய தினம் பின்நகர்ந்து பணிபுரிவர்.

★ வாக்களிப்பு நிலையப் பகுதியல் பொலீஸாரின் பிரசன்னம் மட்டும் இருக்கும்.

★ கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்துவரும் வாக்காளருக்கான போக்குவரத்து வசதிகளை கிளிநொச்சி அரசஅதிபர் செய்து கொடுப்பார். இதற்கான கொடுப்பனவை தேர்தல் ஆணையாளர் வழங்குவார். போக்குவரத்துப் பணிக்கு 53 லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டு அறிக்கை ஒன்றைக் கிளிநொச்சி அரச அதிபர் சமர்ப்பித்துள்ளார்.

★ கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 93 கிராம சேவையாளர்களும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரும் அப்பிரதேச வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான வசதிகளைச் செய்வதில் ஈடுபடுவர்.

★ அன்றைய தினம் ஏ-9 பாதையூடான போக்குவரத்து மட்டுப்படுத்தப்படும். வாக்களிக்க ஏனைய மாவட்டத்துக்குச் செல்ல விரும்பும் வாக்காளர் படையினரின் சோனையின் பின்னர் செல்ல அனுமதிக்கப்படுவர்.

★ பொருள்கள் ஏற்றி வரும் லொறிகள் முதலாம் திகதியே கிளிநொச்சியில் நிறுத்தப்படும். யாழ்ப்பாணத்தில் இருந்து லொறிப்போக்குவரத்து இடம்பெறமாட்டாது.

★ வாக்காளர்கள் பார்சல்களையோ, பயணப் பொதிகளையோ எடுத்துவரும் பட்சத்தில் அவற்றைப் பொலீஸார் சோதனை செய்வர். பொருள்கள் எவற்றையும் எடுத்துவருவதைத் தவிர்க்கும் பட்சத்தில் தாமதம் தவிர்க்கப்படும்.

★ வாக்காளர்களின் வசதிகருதி குடிதண்ணீர் மற்றும் உணவுச்சாலை வசதி வாக்களிப்பு நிலையங்கள் உள்ள பகுதிகளில் செய்யப்படும். (ம-3)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்து வருகிறேன். அதிலே மாற்றம் எதுவும் கிடையாது.

தமிழ்க் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரதான மான நான்கு கோரிக்கைகளையும் வலியுறுத்தித்தான் நான் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுகிறேன்.

விடுதலைப் புலிகளின் கிழக்கு நெருக்கடியானது அவர்களது உட்கட்சிப்பிரச்சனை அதில் தலையிடவோ கருத்துக்கூறவோ நான் விரும்பவில்லை. எனினும், மாவட்ட அபிவிருத்தி எனறு வருகின்றபோது எனது பூரண ஆதரவை வழங்குவேன்.

கொள்கையோடு அபிவிருத்தியைக் கலப்பது அவ்வளவு உகந்ததல்ல. அபிவிருத்தி வேறு, கொள்கை வேறு.

இந்த விடயத்தை உணர்ந்து அனைவரும் ஒற்றுமைப்பட்டுச் செயற்பட வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பமாகும் என்றார். (ம-4)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செபமாலை திரேசம்மா



யாழ்ப்பாணம், டேவிற் வீதியைச் சேர்ந்த திருமதி செபமாலை திரேசம்மா நேற்று (19.03.2004) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் தேவசகாயம் செபமாலையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தியோ - அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் - முத்தம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் சதாகுமார் (ஜேர்மனி), பிறேமசுதன் (ஜேர்மனி), கீதபொன்கலன் (பிரான்ஸ்), அருட்தந்தை பிரான்சிஸ் ஜெயம் (செபமாலைத் தாசர் சபை), அன்ரன்யூட் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயந்தி, விஜி, சிபிலா, எவரெஸ்ரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான மீனம்மா, அந்தோனிப்பிள்ளை (பூபாலம்பிள்ளை) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற நல்லையா மற்றும் செல்லமணி, சரசு ஆகியோரின் மைத்துனியும் அருளப்பு அருமையின் ஒன்றுவிட்ட சகோதரியும் யூடி, சஞ்ஷயா, நொபின் மெலானி, கெபின், இசபெல், நிலோபர், ஜோயல், ஜெனிஸ்ரன் ஆகியோரின் அன்புப பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*35/1, டேவிற் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(29863)(40-16-18)

தகவல்:
அருட்தந்தை பிரான்சிஸ் ஜெயம்
(மகன் - செபமாலைத் தாசர்சபை)

### வேலுப்பிள்ளை மகேந்திரன்

(கிளை முகாமையாளர் மானிப்பாய் M.P.C.S)



நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மகேந்திரன் 18.03.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னாச்சி தம்பதிகளின் பாசமிகு மகனும் புஷ்பராணியின் அன்புக் கணவரும் தபேந்திரன், கஜேந்திரன் (யாழ். இந்துக் கல்லூரி), தர்சிகா, சுதர்சினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வேலுப்பிள்ளை செல்வராசா (வினாயகா ஸ்ரோஸ்), மகாலிங்கம், நடராசா, கனகராசா, திருமதி இராசையா கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் இன்பராணி (கனடா), கிருஷ் ணராஜா (சுவிஸ்),அழகுராணி, பரமசிவம் (அமரர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2004) சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நவாலி கொத்துகட்டுடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நவாலி கிழக்கு,*
*மானிப்பாய்.* (c/33739)(38-16-18)

தகவல்:
- குடும்பத்தினர்




"சமாதானத்தின் எதிரிகளைத் தலைகுனிய வைத்திடவும் சமாதானத்தை நிலை நிறுத்திட.......

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

க.சுரேஷ் பிரேமச்சந்திரன்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.03.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பிரதேசவாதம் எதைத் தரும்?

ஆதி இலங்கையில் வாழ்ந்த திராவிட இன மக்களான நாகர் - இயக்கர் இலங்கையை இரு கூறுகளாக்கி வடபுலத்தை அதாவது, வடமாகாணம் - மேற்குமாகாணம் வரை நாகர்கள் வாழ்ந்தார்கள் - வளர்ந்தார்கள் - ஆண்டார்கள் - அனுபவித்தார்கள். திருமலை தொடக்கம் அம்பாந்தோட்டை - பொலநறுவை - குமுக்கன் ஆறுவரை இயக்கர்கள் வாழ்ந்தார்கள் - வளர்ந்தார்கள் - ஆண்டு அனுபவித்தார்கள். தென்கிழக்கையாண்ட குபேரன், இராவணன், விபுசணன், கதிரமலையை ஆண்ட பத்மசூரன் பரம்பரை எல்லாம் மன்னார் மாந்தையை ஆண்ட நாக அரசர்களான தேவகம்மியர்களின் இளவரசிகளையே தமது பட்டத்தரசிகளாக்கினார்கள். அவர்களிடையே கொண்டான் கொடுத்தான் உறவு உயர்வு பெற்றுக் கொடிகட்டிப் பறந்தது. இவர்கள் நாகர் ஆட்சியை நலிவுறச் செய்யவில்லை. இயக்கர் ஆட்சியை இல்லாமலாக்கவில்லை. இரண்டு ஆட்சிகளும் இனிதே சிறப்புற்றுச் சிறந்தோங்கின. இல்வாழ்க்கையில் இணைந்து இன்புற்றதுபோல ஈரினமும் ஓரினமாக, ஒற்றுமையாக, ஐக்கியமாக வாழ்ந்தார்கள் - வளர்ந்தார்கள் என வரலாறு வாய்திறந்துள்ளது. மகாவம்சம் கூறும் விஜயன் கதையில் கூட அவன் முதல் மனைவியை இயக்கரில் எடுத்தாலும், மன்னராகப் பட்டம் சூட்டும்போது மாந்தையிலிருந்தே பட்டத்து இராணியைத் தெரிவுசெய்தான் என முதலியார் சி.இராசநாயகம் தானெழுதிய 'பண்டைய யாழ்ப்பாணம்' என்ற வரலாற்று நூலில் கூறுகின்றார். இதை மகாவம்சத்தில் "விஜயனின் இரண்டாம் தாரத்தோடு 1000 கைத்தொழில் வினைஞர்கள் குடும்பமும் வந்தது" என்ற கூற்று உறுதிப்படுத்துகிறது. கைத்தொழிலில் சிறந்த தேவகம்மியரான ஓவிய நாகர்கள் மாந்தையில் ஆட்சி செய்தார்கள். மாதோட்டத் துறைமுகம் மூலம் உலக நாடுகளோடு தொடர்பு கொண்டிருந்தார்கள். இது மிகப் பழைய துறைமுக நகரானபடியால் பாண்டு நகர் என்றும் மக்கள் அழைத்தார்கள் என சேர் பொன். அருணாசலம் குறிப்பிடுகிறார். மாந்தை மாதோட்டம் என்னும் நகர் கம்மாளரால் கட்டப்பட்ட நகராகும் - மிகப் பலமும் செல்வாக்குமிக்க இச்சாமியார் - காந்தக்கோட்டை அமைத்து ஆட்சி செய்தார்கள் என ஒல்லாந்துக்காரரான பெற்றாலொக்கி என்ற அறிஞர் தானெழுதிய இலங்கை வரலாற்றில் கூறியுள்ளார்.

### மாந்தையின் ராணிகள்

குபேரனுக்காக அழகாபுரி நகரையும் புஷ்ப விமானத்தையும், மாந்தையை ஆண்ட விஸ்வகர்மா செய்து கொடுத்தார். இராவணனுக்காக இலங்காபுரியையும் வானவூர்தியையும் மாந்தையாண்ட மயன் அமைத்துக் கொடுத்தார். இந்த மயனின் மகளே மண்டோதரி - இராவணனின் பட்டத்து ராணி என இராமாயணம் கூறுகிறது.

அன்று இந்த வடக்கு - கிழக்கு, மேற்குத் தெற்கென்ற திசை வாதங்களோ அல்ல. யாழ்ப்பாணம் - மன்னார் - வன்னி - திருமலை - மட்டக்களப்பு - மலையகம் என்ற பிரதேச வாதமோ வம்போ வழக்கிலிருந்ததில்லை. இதனால், வாழ்க்கை 'வளமாக இருந்தது. வரலாறு அவர்கள் வாழ்வை வடிவமைத்தது. கலை வளர்த்தார்கள் - இசையோடு இசைந்து வாழ்ந்து இசை மேதையானார்கள் - வசை வாழ்வில் வளம் பெறவில்லை. வாழ்வாங்கு வாழ்ந்து வானுயர் புகழ் கொண்டார்கள். இராவணனின் முழு எதிரியான அனுமானே இராவணனின் ஆட்சியிலுள்ள மக்கள் நிலை பற்றிக் கூறும்போது "ஆடிப்பாடிக் கழிக்கின்றார்களேயன்றிக் கவிழ்கின்றார் ஒருவரையும் காணேன்" என்றான் என்றால் இலங்கையில் வாழ்ந்த நாகர் இயககரிடையே உள் பூசல்களில்லை. அதனால் பிரதேச வாதமோ - இனமோதலோ இல்லை. இதனால் இலங்கை மக்கள் அனைவரும் கவலையின்றிக் கானம்பாடிக் களித்தார்கள்.

### உறவுகள் அழிந்தன

நாகர் ஆட்சி மடிந்து இயக்கர் ஆட்சி இல்லாமல் போனதும் - வடக்கிலும் தென்கிழக்கிலும் ஒற்றுமை - பற்றுப்பாசம் - உறவு எல்லாம் சிதைந்தது - சீரழிந்தது - சின்னாபின்னமானது. மூத்தசிவன் ஆட்சிக் காலத்திலும் வேற்றுமை வேரோடு அறுக்கப்பட்டது.



1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து வடக்கு - கிழக்கைச் சேர்நத தமிழ்த் தலைவர்கள் தலைமையில் கொழும்பு காலிமுகத் திடலில் தமிழ்மக்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். அப்போது பேரின வாதிகள் ஏவிய காடையர் கும்பல் உண்ணாவிரதிகள் மீது தாக்குதல் நடத்தியது. அதில் காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படும் காட்சி இது.

ஆனால், அவன் மகன் தேவநம் பியதீசன் - தன் தந்தையைக் கொலைசெய்து - ஆட்சி அதிகாரத்தைத் தனதாக்கியதுடன் - பௌத்தத்தை புகுத்திய அன்றே ஈழத்தின் இதயத்தில் ஈட்டியால் குத்திய நாளாகும். அன்று தொடங்கிய மதவாதம் இன்றுவரை கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது. மதவாதம் இனவாதமாகி - இனவாதம் பிரதேச வாதமாகிப் பிளவுகளையும் அழிவுகளையும் பக்கபலமாக்கி வரலாற்றை வளர்த்து வந்தது. காலச்சூழற்சியின் வேகம் - ஈழத்து விளைபொருள்களான வாசனைத் திரவியங்களின் மோகம் - இழுத்துவந்து அன்னியரை - வியாபாரத்துக்கு வந்தவன் வீட்டையும் நாட்டையும் சொந்தமாக்கினான் - சுகம் பெற்றான். சுகபோக வாழ்வை வளமாக்கி - நாட்டைச் சுரண்டி தன்னலமான வாழ்க்கைக்காக நம்மைப் பிரித்தான்; பிளவுபடுத்தினான். ஒற்றுமையும் ஒருமைப்பாடும் - வந்த மதங்களால் மொழிகளால் சிதைந்து சீரழிந்தன - நாம் கீரியும் பாம்புமானோம். வந்தவன் விதைத்த வினை இது. அதை விழுங்கி விழுந்துவிட்ட நாம் விழிகக 450 ஆண்டுகள் பிடித்தன. அதற்கிடையே எத்தனையோ மாற்றங்கள், ஏற்றங்கள், இறக்கங்கள் - ஒன்றாய் ஒரே குலமாக - ஒரு மொழி ஒரு மதமாக இருந்த இலங்கையரிடையே நான்கு மதங்கள் மூன்று மொழிகள் - முளைத்து - முக்கூட்டுச் சிக்காகியது போதும். விடுதலைக்காக நாமனைவரும் இலங்கையரானோம் - இணைந்தோம் போராடி விடுதலை பெற்றோம் - விடுதலை தந்த உணர்வு தான் பெரும்பான்மை - சிறுபான்மை என்ற வாதமும் பிளவும். பெரும்பான்மையோர் ஒன்றானபோது சிறுபான்மையோர் சிதறினோம். அன்று வடக்கில் தலையெடுத்த தலைவர்கள் சேர் பொன்.இராமநாதன் தொடக்கம் ஜி.ஜி.பொன்னம்பலம் முதலானோர் வடக்கைத்தவிர கிழக்கை நேசிக்கவில்லை.

இதனால் வடக்கு - கிழக்கு என்ற மாகாணப் பிரிவுகளும் - யாழ்ப்பாணம் மட்டக்களப்பு மன்னார், வன்னி, திருமலை, மலையகம் என்ற இடப்பிரிவும் - பிரதேச வாதங்களும் விதைக்கப்பட்டு விழலுக்கு நீருற்றி வளர்க்கப்பட்டு வேற்றுமையும் - வேதனையும் ஊட்டப்பட்டது.

### திட்டமிட்ட குடியேற்றங்கள்

இச்சந்தர்ப்பத்தில் சுதந்திரத்தின் பின் ஆட்சி அமைத்த ஐ.தே.கட்சி - வட கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நடத்தி ருசி கண்டதோடு, மலை நாட்டுத் தமிழர்களின் பலத்தைக் குறைக்க மறைக்க அவர்களின் வாக்குரிமையைப் பறித்தது. அச்சட்டத்தை தமிழ் காங்கிரஸ் ஆதரித்தபோது அதை எதிர்த்து "இன்று மலை நாட்டுத் தமிழருக்கேற்பட்ட இதேநிலை நாளை இலங்கைத் தமிழருக்கு ஏற்படா என்பதை எப்படி நம்புவது? இன்று மலை நாட்டுத் தமிழருக்கு நாளை நமக்கு" என்று கூறி அந்த மசோதாவை எதிர்த்து வாக்களித்துவிட்டு தமிழ்க்காங்கிரஸிலிருந்து வெளியேறிய தந்தை செல்வாவும் கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கமுமே வடகிழக்கை இணைத்த பெரும் தலைவர்களாவர். வடக்கு - கிழக்கை இணைத்து தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார்கள். தந்தையின் கொள்கையை ஏற்று, வடக்கிலும் - கிழக்கிலும் திருமலை, மன்னார்ப் பிரதேசத்திலும் பலர் ஒன்றிணைந்தார்கள்.

### தமிழர் தலைவர்கள்

வடக்கில் தந்தை செல்வா, வன்னியசிங்கம், நாகநாதன், நவரெத்தினம், நடராசா, துரைரெத்தினம், அமிர்தலிங்கம், நவரெத்தினம் இன்னும் பலரும், கிழக்கில் சொல்லின் செல்வர் செ.இராசதுரை, செனட்டர் மாணிக்கம், எஸ்.டி.சிவநாயகம், எஸ்.எம்.இராசமாணிக்கம், இரா.பத்மநாதன். சுற்றடையே கந்தசாமி, காசி ஆனந்தன், ஆலாலசுந்தரம், பூ.ம.செல்லத்துரை, மாணிக்கவாசகர், அறப்போர் அரியநாயகம் ஜெயசிங்கமும் இன்னும் பலரும் சேர்ந்து கிழக்கில் புயலாக வீசிய வடக்கு - கிழக்கு வேறுபாட்டை - பிரிவை - பிளவை அடியோடு அடித்து அழிக்க இரவு பகலாக உழைத்தார்கள். இப்பணியில் தங்கள் சொந்த வாழ்வைப் பணயம் வைத்தவர்கள் பலர். அவர்கள் பட்ட கஷ்டங்கள் நஷ்டங்களின் விடிவே வேர்விட்டு வியாபித்து விருட்சமான விசவித்து வெட்டிச் சாய்த்கப்பட்டுச் சோதனைபகற்றிச் சாதனை மலர்ந்தது - அவர்களின் தியாகத்திலும் உழைப்பிலும் உயர்ந்த சிகரமே வடகிழக்கு ஒன்றுபட்ட நிலை.

இந்தநிலைகண்டு தாங்கள் பட்ட கஷ்டங்கள் நஷ்டங்கள் பாழாகவில்லை. பாழாக நழுவிப் பாலில் விழுந்திருக்கிறது என்று நினைத்து நெஞ்சு அறிய மகிழும் நேரத்திலா இந்தப் பேரிடி விழவேண்டும். வெண்ணெய் திரளும்போதா தாழியுடைய வேண்டும். யார் கண்பட்டதோ, யார் விட்ட சாபமோ தமிழினத்தினத்திற்குக் காலத்திற்குக் காலம் இக்கதி தொடர்கதையாகின்றது.

களத்தில் தோளோடுதோள் சேர்த்துப் போராடிய தலைமகனும் தளபதியும் தனி வழிபோக எடுத்த முடிவு, காலத்திற்கு உதவாத ஒன்று. வடகிழக்கு ஒற்றுமையைத்தண்ணீர் ஊற்றி வளர்க்கவில்லை. கண்ணீரும செந்நீரும் தெளித்தே வளர்த்தார்கள். 18,000 காளையர்கள் களத்தில் பலியாகி இன்னுயிர் தந்து வளர்த்த ஒற்றுமை ஒருமைப்பாடு இது. இதற்காக ஐம்பது ஆண்டுகள் விசுவாசத்தோடு உழைத்து ஓட்டாண்டியாகியுள்ள மூத்தோரின் பெருமூச்சு ஒரு பக்கம். மண்ணில் புதையுண்டுள்ள வீரர்களின் ஏக்கம் மறுபக்கம். தன் பிள்ளையை மண்ணுக்காக மரணத்தில் பறிகொடுத்து பரிதவிக்கும் பெற்றோரின் உள்ளம் கொதிப்பதை யார் அறிவார்? நடந்து முடிந்த ஈழப் போரில் தன் கணவனை இழந்து தாலியையும் பொட்டையுமிழந்து விதவையாகியோரின் விழிநீருக்கு விடை கூறமுடியுமா? அல்ல. இப்போரின் கையையும் காலையும் இழந்த அங்கவீனரான இளம் காளையரின் இனிய இளமைக்கனவுகளை ஈடேற்றமுடியுமா? நனவாக்க முடியுமா? எதைச் செய்யமுடியும் இந்தப் பிரதேச வாதத்தால். வாதத்தில் நியாயமிருக்கலாம். இல்லை என்று சொல்லவில்லை. அதற்கும் ஒரு நேரமுண்டு. ஆக்கப் பொறுத்தவர்களுக்கு ஆற வைக்கப் பொறுக்கக்கூடாதா? ஏனிந்த ஆத்திரம், எதற்கு இந்த அவசரம். சிந்தித்துப் பாருங்கள். போராட்டக் களத்தில் தலைவன் சொல்தட்டாத தளபதியாகி வெற்றிக்குமேல் வெற்றி குவித்து வீறுநடை போட்டு பாரெல்லாம் சுற்றிய பவனிகளைச் சிந்தித்துப் பாருங்கள். அன்று அடர்ந்த காட்டில் வாழ்ந்த நீங்கள் அரச விமானங்களில் ஏற்றிப் பார் சுற்ற வைத்தது எது? பயங்கரவாதியென்றும் கண்ட இடத்தில் சுட்டுத்தள்ள முனைந்த சிங்களப் படை இன்று உங்களைப் பாதுகாக்கும் நிலை எப்படி ஏற்பட்டது. இன்று உலகறிந்த பிரஜைகளாகவும் ஊர் தெரிந்த சேவகர்களாகவும் மனையோடும் மக்களோடும் மகிழ்ந்து வாழும் வாழ்வு எப்படி வந்தது. சிந்தித்துப் பார்த்தீர்களா? சுமார் 18,000 மாவீரர்களின் தியாகத்தால் அவர்கள் சிந்திய இரத்தத்தால் வந்தது. தலைவனும் தளபதியும் இணைந்து ஏற்படுத்திய ஒற்றுமையால் வந்ததும் எத்தனையோ இடர்களையும் இன்னல்களையும் கண்டும் சர்வதேச சவால்களை ஏற்றும் அவைகண்டு பயப்படாமல் நம்பிக்கையோடு போராடியதால்தான் வந்தது.

**பூ.ம.செல்லத்துரை**

18,000 மாவீரர்களின் சமாதியில் தங்கிச் செல்லும் சமாதான காலத்தில் சலனங்களில் ஏற்பட்ட இந்தச் சின்னச்சின்ன ஆசைகளை அகலத் தூக்கி எறிந்துவிட்டு அண்ணனும் தம்பியும் பேசித் தீர்க்கமுன்வர வேண்டும். உங்கள் இருவரையும் நம்பி களத்திலே இன்னுயிர் தந்த பதினெட்டாயிரம் மாவீரர்களின் கடைசி நம்பிக்கையைக் காற்றில் பறக்க விடாது காப்பாற்றுங்கள். நீங்கள் இருவரும் மீண்டும் இணையும்போது பரிந்தவர்கூடினால் கேட்கவும் வேண்டுமா? நம் பகைவர்கள் எங்கோ ஓடி ஒழிவார்கள். மரணித்துவிட்ட மாவீரர்களின் ஆத்மா சாந்தியடையும் புலிகளின் தாகம் தனிவழியல்ல. தமிழீழம் என்பதை நாடு அறியும்; ஏடு அறியும்.

எனவே, கருத்து மோதலைக் கரிமருந்து மோதலாக்காமல் கருத்தைக் கருத்தோடு பேசி கண்ணியமான முடிவை எடுக்கவேண்டும். இதுவே ஈழத்துத்தமிழ் சமுதாயம் உங்களிடம் மண்டியிட்டுக் கேட்கும் மடிப்பிச்சை. செய்வீர்களா?

*

## உணவு நஞ்சான காரணத்தால் பல்கலை மாணவர் ஆஸ்பத்திரியில்

கொழும்பு,மார்ச்20

வயம்பா பல்கலைக்கழகத்தின் குளியாப்பிட்டிய வளாகத்தைச் சேர்நத முப்பத்திரண்டு மாணவர்கள் உணவு நஞ்சானதால் சுகவீனமுற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர்.

மேற்படி வளாக உணவு விடுதியிலேயே இந்த மாணவர்கள் உணவு அருந்தினர் என்று கூறப்படுகிறது. விடுதியில் இரவு உணவு உண்டதன்பின் இம்மாணவர்கள் சுகவீனமுற்றனர் என்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து வளாக உணவு விடுதி மூடப்பட்டுள்ளதுடன் உணவு மாதிரிகள் அரச பகுப்பாயவு அதிகாரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## கட்சிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் பொலீஸார் மீது கடும் நடவடிக்கை!

### பொலீஸ்மா அதிபர் எச்சரிக்கை

கொழும்பு,மார்ச்20

அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் பொலீஸ் அதிகாரிகள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- இவ்வாறு எச்சரித்துள்ளார் பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது, அரசியல் கட்சிகளின் சார்பாகச் செயற்படும் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் பொலீஸ உத்தியோகத்தர்கள் தொடர்பாகக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை விசாரித்து அவர்களுக்கு எதிராகக் கடும் ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா, சகல பிரதிப் பொலீஸ் மா அதிபர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

தேர்தலின்போது பொலீஸார் எவ்வாறு செயற்படவேண்டுமென்பதை விளக்குமுகமாகக் கடந்த 15 ஆம் திகதி பொலீஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது பிரதிப் பொலீஸ்மா அதிபர்களுக்கும் சிரேஷ்ட பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கும் பொலீஸ்மா அதிபர் இப்பணிப்புரையை வழங்கியுள்ளார்.

அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் பொலீஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக, மனித உரிமை ஆணைக்குழுவுக்கோ, பொலீஸ் ஆணைக்குழுவுக்கோ, தேர்தல் கண்காணிப்புக் குழுவுக்கோ அல்லது தமக்கோ கடிதமூலம் முறைப்பாடு செய்யும்படி பொலீஸ்மா அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன், முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுககு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் பொலீஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கட்சிகளின் சார்பாகச் செயற்படும் பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரிகள் சிலர் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் -

அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகவும் -

பொலீஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-ரி)

## அரச ஊழியர்களின் சம்பளத்திட்டத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கக் குழு

கொழும்பு,மார்ச்20

அரச ஊழியர்களின் சம்பளத் திட்டத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்பிப்பதற்கென நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி, குழுவொன்றை நியமித்துள்ளார். பொதுத்துறை ஊழியர்களின் தற்போதைய சம்பள முரண்பாடுகளையும் ஆராயும்படி நிதி அமைச்சர் இக்குழுவைக் கேட்டிருக்கின்றார்.

நிறுவனங்களின் முன்னாள் பணிப்பாளர் நாயகம், என்.எச்.பத்திரன, நிதி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் ஜி.சற்குணநாதன், முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஏ.எம்.பெலிகாஸ்வத்தை, முன்னாள் ஓய்வூதியப் பணிப்பாளர் ஆர்.டபிள்யு.பியசேன ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தேசிய வரவு - செலவுத்திட்டத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் ஏ.ராஜபக்ஷ இக்குழுவின் செயலாளராகப் பணிபுரிவார். (ஒ-ரி)

# யாழ். பல்கலையில் 'வீடியோ படக்காட்சி'

யாழ்.பல்கலைக்கழக புவியியற் றுறை மண்டபத்தில் நாளை காலை 10மணிக்கு குளோட் ஷப்றோல் நெறியாள்கையில் உருவான 'லாபுச்சர்' (இறைச்சிக் கடைக்காரன்) என்னும் பிரெஞ்சு மொழித் திரைப்படம் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் காண பிக்கப்படவுள்ளது. படக்காட்சியின் இறுதியில் கலந்துரையாடல் இடம்பெறும்.

## Jayoda ஜயோதா ජයෝදා

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல 7095762 முதல் 7108329 வரை
சீட்டிழுப்பு இல.16 திகதி 18-03-2004

வெற்றி எண்கள் **2 3 9 2 9 1** சுப்பர் எண் **16**

**சுப்பர் ஜக்பொட் பரிசு 15,599,975/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 15,599,975/- | - |
| இடது பக்கத்திலிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 500,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 109 | 5,000/- | 545,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,082 | 500/- | 541,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 10,802 | 50/- | 540,100/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 1 எண் | 107,051 | 10/- | 1,070,510/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 9 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 110 | 1,000/- | 110,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,080 | 100/- | 108,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 10,721 | 20/- | 214,420/- |
| மொத்தம் | 130,975 | | 4,674,030/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.4,674,030/-

**இந்த திங்கட்கிழமைக்கான**
**சுப்பர் ஜக்பொட் ரூ.15,900,350/-**

தொடர் இல. 6133094க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 மார்ச் 22ம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7099839-0-87
7107837-2-57
7103660-2-84
7099399-4-27
7097351-6-72

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொழும்பு 3.
யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி



*நவாலி மண்ணின் புதல்வனும்*
*மானிப்பாய் ப.நோ.கூ. சங்கக் கிளை முகாமையாளரும்*
*கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க அங்கத்தவருமான*

## தோழர் வேலுப்பிள்ளை மகேந்திரன்

அவர்களின் திடீர் மறைவு ஜீரணிக்க முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம், அவர்களது துயரில் நாமும் பங்கேற்பதோடு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(29839) (19-21-17)

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
மானிப்பாய் ப.நோ.கூ.ச.கிளை.

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆங்கில ஆசிரியர்
**செல்வி சுமதி ஒப்பிலாமணி** அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி புவனேஸ்வரி ஒப்பிலாமணி

அவர்கள் 2004-03-18 இல் இறைபதம் எய்தியதையறிந்து அதிர்ச்சி அடைந்தோம். துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

யா/யாழ்.இந்துஆரம்ப பாடசாலை. யாழ்ப்பாணம். (29839)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம். (19-21-17)

# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி கணேசன்

நவாலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணேசன் அவர்கள் 16.03.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதிகளின் மூத்த மகனும் சரோஜினிதேவி (இராசாத்தி) யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகலிங்கம்-இலட்சுமியின் மருமகனும் சந்திரமோகன் (பிரான்ஸ்), ராஜமோகன் (பிரான்ஸ்),கிருஷ்ணமோகன்(பிரான்ஸ்), உதயமோகன் (டோகா), குமுதினி, கவிதா (பிரான்ஸ்), கஜனி ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்சலா, பவானி ஆகியோரின் மாமனாரும் லஷ்சனா, லஷ்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். சந்திரன் (மருதடி விநாயகர் மரமடுவம்), கந்தசாமி, சிவலிங்கம், லலிதா ஆகியோரின் அன்புச் சகோதரரும் கந்தையா இராசையா, நாகலிங்கம் சந்திரராசா (பிரான்ஸ்), சற்குணதேவி, தங்கப்பவுண் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21-03-2004) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நவாலி ஆரியம்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (29745)

*நவாலி வடக்கு,மானிப்பாய்.* (36-19-17-21)

தகவல்:
குடும்பத்தினர்.

# யா அல்லாஹ்


**செழிப்பான வயல் வெளியெல்லாம்**
**கண்ணிவெடி விளையும் நிலமாச்சு.**

'கிழக்கு மாகாணமென்றா விவசாயத்துக்கு பேர் போன பிரதேசம். ஆனா, கடந்த காலங்களில் நடந்த யுத்தம் காரணமா கண்ணிவெடி விளையும் பூமியா மாறிய கொடுமைய நாம் கண்டோம். வாரி வாரி நெல்ல கொடுத்த நாம ஒரு வேள சோத்துக்கு கூட கஸ்டப்பட்டோம்.

அன்று



இன்று



ஆனா, கடந்த ரெண்டு வருஷமா யுத்தநிறுத்தம் கடை பிடிக்கிறதால அந்த கொடூர நிலை மாறிடுச்சு.பறிபோன எம்மோட வயல் நிலமெல்ல திரும்பகிடைச்சிருச்சி.நாம ரொம்ப சந்தோசமா விவசாயம் செய்கிறோம்.யுத்த நிறுத்தம் செஞ்சதாலதான் எமக்கு இந்த நிம்மதி அந்த நிம்மதி நிலையாக இருக்கனும்னா ஐதேகட்சிக்கு எமது ஆதரவையும் பிரதமர் ரனில் விக்கிரமசிங்க அவர்களுக்கு ஆசிர்வாதத்தையும் தெரிவிக்கனும்.'



நாட்டை வளமாக்க
சமாதானத்தைத் தேர்ந்தெடுங்கள்.